விக்ருதி ஆடி. 1—8—'50. அணா நான்கு.

ஜகன் மோகினி

11

இவ்விதழில்

- ஒரு முழு நவினம் — "ப்ரேமாச்ரமம்" வை. மு. கோ. 92-வது நாவல்
- வழக்கம்போல் இதர முக்கிய அம்சங்களும்

27-வது ஆண்டு

இவ்விதழில் ஒரு முழு நாவல்!

2
N211, N225m
N50. 27. 8

"ப்ரேமாச்ரமம்"

வை. மு. கோ. 92-வது நாவல்

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்



மட்டற்ற மகிழ்ச்சி

வாசகமணியர்களுக்கோர் சந்தோஷ நற்செய்தி. மாதாமாதம் மோகினி ஒரு தனிக்கதையை உங்களுக்குச் சமர்ப்பித்து மகிழ்ச்சியடையும்முறையில் சென்றஇதழில் வெளியான "ஸௌபாக்யவதி" என்கிற சிறுகதையின்மூலம் அபாரமான சந்தோஷமடைந்ததை உங்களுக்கு மிகவும் களிப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த கதையைப் பாராட்டியும் அதில் வெளியான ஸ்ரீஸ்துதியை மிகவும் கொண்டாடியும் பல ஊர்களிலிருந்து பல வாசகர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். தாமும் அந்த அரிய தோத்திரத்தைக் கற்று மண்டலபூஜையாகச் செய்ய ஆரம்பித்திருப்பதாக உள்ளூரில் பலர் நேரில் தெரிவித்து மகிழ்ந்தார்கள். வெளியூர்களிலும் பலர் பூஜை செய்வதாக எழுதியிருக்கிறார்கள். இம்மாதிரி பல உயர்ந்த உபயோகமான திருப்பணியைச் செய்து இன்புறுவதே மோகினியின் முக்ய ஸேவையாகும்.

ஸ்ரீஸ்துதி

அந்த தோத்திரத்தின் அர்த்தத்தையும் இன்னும் முக்யமான விஷயங்களையும் அறிய பலர் ஆவலுள்ளவர்களாகவிருப்பதால் அவைகளை சிறிய புத்தகமாய் தனித்து வெளியிடத் தீர்மானித்து அச்சாகிவருகிறது. இது நேயர்களுக்கு மிக முக்யமான அம்சமென்று கருதுகிறோம்.

நியாயமழை

இவ்விதழில் வெளியாகவிருந்த நியாயமழை என்கிற கதை அடுத்த இதழில் வெளியாகிறது. காலமழை தவறுவதுபோல் கதையிலும் சிறிது தாமதமானதற்கு நேயர்கள் மன்னிப்பார்களாக

அருணோதயம்—நாடகம்

மற்றொரு முக்யவிஷயம். பலவருஷங்களாகப் பல வாசகர்கள் "நாடகம் ஏன் எழுதுவதில்லை?" என்று கேட்கிறார்கள். அந்த குறையை ஸ்ரீ கீதாசாரியன் ஒருவாறு பூர்த்திசெய்ய முன்வந்திருக்கிறார். அருணோதயம் என்கிற பெயருடன் நாடகம் தனிப்புத்தகமாய் அச்சாகிவருகிறது. அதே நாடகத்தை மகாத்மாஜி சேவா சங்கத்தின் இலவசச் சம்பள நிதியின் உதவிக்காக ஸேவா சங்கத்தின் சிறந்த மேதைகளால் ஸெப்டம்பர் மாதம் நடத்தப்போகிறது. மற்ற விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும். —வை. மு. கோ.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
— திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி !
மனத்தைச் சார்ந்து.
— வீரராகவ கவி

Vol. 27 No. 8. | விக்ருதி ஞு ஆடி மீ | August 1950.

வாழ்த்து

விருத்தம்

1. சீலமும் அறிவும் ஊட்டித் திடமனத் தெளிவுங்காட்டி
நூலுணர் புலமை கூட்டி நுவலரும் கயமையோட்டி
மேலவர் இயல்பும் கற்பின் மிக்கவர் இயல்பும் நாட்டிச்
சாலவும் சிறப்புற்றேங்கும் ஜகன்மோகினியாம் மாதே.

2. செந்தமிழ் வளங்குன்றாத சிறப்புடன் உலவிமாறச்
சந்திரனெனவே வாழ்க! சமரஸம் நயந்து வாழ்க!
முந்துற நடத்தும் கோதைநாயகி முயற்சியெல்லாம்
நந்தலில் மலை விளக்காய் நானிலத்துயர்க மாதோ.

— வரகவி திரு. அ. சுப்ரமண்யபாரதி

ஆண்டவனின் அருளைப்பெற
அவனது நாம பஜனமே சிறந்த ஸாதனம்.
திருநாமஸங்கீர்த்தனம் செய்தாலே சகல பாபங்களும்
நசிக்கும்; கருணைப்ரவாகமும் ஏற்படும்.
யாவரும் எளிதில் பயிலும் வண்ணம்
மோகினி காரியாலயத்தார்
ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமம் (உரையுடன்)
பாசுரப்படி ராமாயணம் (சொற்சீரடிகளாக)
ஸ்ரீ ஸ்துதி—(விஷ்ணுபுராணத்திலுள்ளபடி)
வெளியிட்டுள்ளனர்.

அனைவரும் பயன்பெறுங்கள்!

நான்காம் ஆண்டிலாவது...

நாளது ஆகஸ்ட் 15-யன்று நமது சுதந்தர சகாப்தத்தின் நான்காம் ஆண்டு ஆரம்பமாகின்றது. இப்புத்தாண்டிலாவது 'தீராத வினைகளையெலாம் தீர்த்துவைக்கும் ஸர்வரக்ஷகனை' நம் முன் நிற்கும் முடிவுகாணாத பெரும்ப்ரச்னைகளுக்கு முடிவுகாணவும். நாடு நலன்செழிக்கவழிகாணவும் அருளுமாறு ப்ரார்த்திக்கிறோம்.

முக்கியமாக, கீழ்க்கண்ட விஷயங்களில் சுமுகமான முடிவைக் கண்டால்தான் நாடும் உலகும் க்ஷேமமடைய முடியும்:—

1. கொரிய யுத்தமாக ஆரம்பித்தது கோர உலக யுத்தமாக 'விச்வரூபம்' எடுக்காமல், இந்திய முயற்சியால் முற்று பெறவேண்டும். சாந்தி நிலவுமா?

2. காஷ்மீர் ப்ரச்னை சுமுகமாகத் தீர்ந்து, மக்களின் பயமற்ற சுதந்தர வாக்கெடுப்பு நடைபெறவேண்டும்.

3. இந்தியா—பாகிஸ்தான் தகராறுகளை யெல்லாம் பழங்கதையாக்கி, புது நிலை காணவேணும்.

4. பிரஞ்சிந்தியப் பிரதேசங்களும், கோவாவும் அம்மக்களின் விருப்பப்படி இந்திய யூனியனுடன் சேர்ந்து ஐக்யமாகவேணும்.

5. இந்திய கம்யூனிஸ்டுகள் தங்கள் வெறியாட்டங்களை விட்டொழிக்கவேண்டும்; அதன் பலனாக சர்க்கார் அவர்களை காடுகளில்தேடி மிருகங்களைப்போல் வேட்டையாடிக் கொல்வதும் நின்று போகவேண்டும்.

6. இந்திய ஸோஷலிஸ்டுகள் வாய்ப்பேச்சில் வீரர் என் துடன் நில்லாமல் காரியத்திலும் 'கைகாரர்' என்ற நிலைக் வந்து நாட்டு நலனுக்கு ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

7. பன்மடங்காக உயர்ந்துள்ள அத்யாவச்யப் பொருள்களின் விலைவாசியைக் குறைக்க தீவிர நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும். எதற்கு 'கண்ட்ரோல்' அவச்யம், எதற்கு அனாவச்யம் என்ற தீர்ப்பை உடனே செய்து, மாகாண, மத்திய சர்க்கார்கள் கலந்து நடவடிக்கை எடுக்கவேணும்.

இப்படியாக "வேண்டும் படலம்" விரிந்துகொண்டேபோகும். ஷி "ஸ்ப்தகோரிக்கைகள்" நிறைவேறினாலே ஸகலமும் ஆனமாதிரிதான். பகவான் அருளட்டும்.

—வை. மு. ஸ்ரீ.

183163

பி. ஸ்ரீ.

சிங்கமா? சிங்கியா?

பழைய காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் நாகரிக அரசனுமில்லை, அநாகரிக அரசனும் இல்லை 'அது பாதி, இது பாதி' என்று சொல்லும்படி நாகரிகமும் அநாகரிகமும் கலந்திருந்த ஒரு பிரகிருதி. அதிகாரப் பிரியன் ஆடம்பரப்பிரியன், கடிவாளம் இல்லாமலே மனக்குதிரையைத் தட்டிவிடுவான். இஷ்டமே சட்டமாகப் பிறருக்கு இன்பமும் பெருவாரியாக வழங்குவான்; பெருந்துன்பம் கொடுந்துன்பங்களும் செய்துவிடுவான்.

பிரஜைகள் ஏதாவது குற்றம் செய்யக்கூடுமல்லவா? அந்தக் குற்றங்களில் ஏதாவதொன்று அரசனுள்ளத்தில் முக்கியமானதென்று பட்டால், குற்றவாளியின் விதியை ஒரு வினோத முறையில் கண்டுபிடித்துத் தீர்ப்புச் செய்வான்.

அரசனுடைய நீதிமன்றமே விசித்திரமானது. மேலேமேலே ஆசனங்களை அமைத்துப் பொதுமக்களை அமரச்செய்து, பிரபுக்கள் மந்திரிகள் அதிகாரிகள் தன்னைச் சூழ அரசன் கொலுவிருப்பான் தன்னுடைய நீதி அரங்கத்திலே, ஒரு விசேஷ நீதிபதியாக. ஒரு சமிக்ஞை செய்ததும் பக்கத்திலே ஒரு கதவு பளிச்சென்று திறக்கும்; அதன் வழியாகத்தான் சிறையிருந்த இடத்திலிருந்து கைதி வெளிப்பட்டுவருவான்.

குற்றவாளிக்கு நேர் எதிரே நீதிமன்றத்தின் மறுபுறம் இரண்டு கதவுகள். இரண்டும் ஒரே மாதிரி, பக்கம் பக்கமாக. விசாரணைக் கைதி நேராக அந்த இருகதவு இருக்கும் இடத்திற்கு நடந்துபோய் ஒரு கதவைத் திறந்துவிடவேண்டும். இஷ்டப்படி எந்தக் கதவையும் திறக்கும் சுதந்திரம் கைதிக்கு உண்டு.

ஒரு கதவைத் திறந்ததும் பசியுள்ள சிங்கம் ஒன்று வெளிப்பட்டுக் கைதியின் மீது பாய்ந்து கொன்று தீர்த்து விடும். சிங்கத்தின் தீர்ப்பே தீர்ப்பு,— குற்றத்திற்குத் தண்டனை. உடனே இரும்புமணிகளை அடித்து அழுவதுபோல் சத்தம் உண்டாக்குவார்கள். கூலிக்கு மாரடிப்பவர்கள் புலம்பி ஆர்ப்பாட்டம் செய்வார்கள். சபையோர் அனைவரும் துக்கம் கொண்டாடுவார்கள். 'ஐயோ பாவம்! என்ன இளமை, என்ன அழகு! இந்தக் கதியா வரவேணும்?' என்பார்கள். அல்லது' 'ஐயையோ! வயது முதிர்ந்த பெரியவருக்கு இந்த விதியா?, என்பார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவன் மேலே சொன்னபடி திறவாமல் மற்றக் கதவைத் திறந்தால் கொடிய மிருகம் வெளிப்பட்டிராது. ஒரு பெண் வெளிப்பட்டிருப்பாள். கைதியின் வயதுக்கும் அந்தஸ்துக்கும் மிகவும் பொருத்தமானரீதியில் ஓர் அழகி—மாட்சிமை தங்கிய மன்னனால் தேர்ந்தெடுக்கப் பெற்றவள்— வெளிப்பட்டிருப்பாள். உடனே விவாக மகோத்ஸவம் கோலாகலமாய் நடைபெறும், நிரபராதிக்கு வெகுமதியாக.

ஏற்கெனவே 'மனைவி, குடும்பம்' என்று இருந்தாலும் இந்தப் பரிசு-விவாகம் நடந்தே தீரும். ஒரு கதவு திடீரென்று திறக்க, அதிலிருந்து புரோகிதர் புறப்படுவார், அவரைத் தொடர்ந்து கீத வாத்திய வித்வான்களும் நாட்டியப் பெண்களும் வருவார்கள்.

திருமணம் நடைபெற்றதும், வெண்கலமணிகள் ஆனந்த முழக்கம் செய்யும். மக்கள் மங்களகாரியங்களைச் செய்வார்கள். வழியெல்லாம் சிறுவர் சிறுமியர் பூக்களை வாரி இறைக்க, மணமகன் மணமகளை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போவான்.

இந்த விநோத ராஜ்யத்தின் நீதிபரிபாலன விநோதம் இது. குற்றவாளிக்கோ இன்ன வாசலின்வழியாக அழகிவருவாளென்று தெரியாது. அடுத்த நிமிஷம் வரப்போவது 'மணமா, மரணமா' என்று தெரியாது. எந்தக் கதவின் வழியாகவும் சிங்கம் வரலாம்; அல்லது அன்னநடை நடந்து அழகி வரலாம். சபையோருக்கும், 'அடுத்த நிமிஷம் நாம் துக்கப்படுவோமா, சந்தோஷப்படப்போகிறோமா' என்று தெரியாது.

'நானா தண்டித்தேன்? குற்றவாளி தன்னைத் தானே தண்டித்துக் கொண்டான்!' என்பான் அரசன், கைதியின் முடிவைச் கண்ணுற்றதும். திருமணம் கண்டதும், 'தான் நிரபராதி யென்பதைக் கைதி ருசுப்படுத்திவிட்டான்!' என்று மன்னன் மகிழ்ந்து தானும் ஆசீர்வதித்துத் திருமணப் பரிசு வழங்குவான்.

இந்த அரைகுறை நாகரிக அரசர் பிரானுக்கு ஓர் அருமந்த மகள்-அழகி. ஓர் இளைஞன் இவளைக் காதலித்தான். அவனும் அழகன்; வீரன். காதலிக்கும் காதலன்மேல் விசேஷமான காதல். இப்படிப் பல மாதங்கள் கழிந்தன.

இதை அரசன் கண்டுபிடித்தான். உடனே இளைஞனைச் சிறையிலிட்டான். விசித்திர நீதிமன்றத்தீர்ப்பிற்கு ஒரு நாளும் குறிப்பிட்டான்.

மிகக்கொடிய சிங்கம் ஒன்றை எந்தக்காட்டிலிருந்தோ பிடித்து வந்தார்கள். அப்படியே, மிகஅழகிய ஒரு கன்னிகையையும் 'அழகிகளில் எல்லாம் அழகி' என்று தேர்ந்தெடுத்தார்கள்.

இளைஞனுடைய அதிர்ஷ்டவசத்தால் தண்டனைக்கு மாருகப் பரிசும் கிடைக்கக்கூடுமே! அப்படியானல் அந்தப் பரிசு ஒரு 'பூலோகரம்பையாகவே இருக்கட்டும்' என்பது அரசன் தயாள சித்தம்.

இந்தக் கைதியின் குற்றம் குறித்து யாருக்கும் துளிகூடச் சந்தேகம் கிடையாது. அவன் அரிசிளங்குமரியைக் காதலித்தான் என்பதை அவனும் மறுக்கவில்லை, அரிசிளங்குமரியும் மறுக்கவில்லை. எனினும், இந்தக் குற்றவாளி விஷயத்திலும் விசித்திரநீதிமன்றத்தீர்ப்பு முறையை அரசன் மாற்றவிரும்பவில்லை. 'மணமானல் என்ன, மரணமானல் என்ன! என் மகளைக் காதலிக்கத் துணிந்தவனை ஒழித்துக் கட்டிவிடலாமல்லவா?' என்று கருதிவிட்டான் அரசன்.

குறித்த தினம் வந்தது. சபையில் பெருங்கூட்டம். இரண்டு கதவுகளின் பயங்கரமான ஒற்றுமையை உற்றுநோக்கியவண்ணம் அரசன் வீற்றிருக்கிருன். ஒரு சமிக்ஞை, அரசனிருந்த பக்கமாகச் சிறைக்கதவு திடீரென்று திறந்தது. அரசிளங்குமரியின் காதலன், நெட்டையாய் அழகாய் வந்துநின்ருன். சபையெல்லாம் வியப்பும் கவலையுமாயிருந்தது.

இப்படிவந்து நிற்கும் கைதி அரசனை வணங்குவது வழக்கம். ஆனல் இந்தக்கைதி அரசனைவணங்கவில்லை; அவனுக்கு வலப்புறமாக அமர்ந்திருந்த நங்கையை நோக்கினன். அவள்வேறு

யாருமில்லை, அரசிளங்குமாரிதான். இவள் எவ்வளவு தைரியமாக இங்கேவந்து வீற்றிருக்கத்துணிந்தாள்! கைதி சிறைப்பட்ட நாள் முதலாக அல்லும் பகலும் இந்தப்பெண்ணுக்கு இதே நீதிமன்ற நினைவுதான்.

மேலும்இந்த இரு கதவின் இரகசியத்தை இவள் தெரிந்து கொண்டிருக்கிறாள். அந்தக் கதவுகளுக்குப் பின்உள்ள இரண்டு அறைகளில் எந்த அறையிலே சிங்கம் இருக்கிறது, எதில் சிங்கி (அரசன் தேர்ந்தெடுத்த அழகியின் பெயர்) இருக்கிறாள் என்பது இந்த அரசிளங்குமரிக்குத் தெரியும்.

உள்ளே கனத்த திரைகள் இட்டிருந்தன, அங்கிருந்து சத்தம் வெளியே சிறிதும் கேட்காதபடி. எனினும் அந்த அதிகாரிகளுக்கு லஞ்சம்கொடுத்து அந்தரகசியத்தை அரசிளங்குமரி தெரிந்துகொண்டிருந்தாள்.

குமாரி சிங்கி எந்தக் கதவுக்குப்பின்னிருந்து உதயமாகப் போகிறாள், அந்தக் கதவு திறக்கும்பட்சத்தில்—என்பதுமட்டுமா தெரியும் அரசிளங்குமரிக்கு? அவள் தன்னைக்காட்டிலும் சிறந்த கட்டழகி என்பதும் தெரியும். அவளைப் பிடிக்கவில்லை அரசிளங்குமரிக்கு என்பதைச் சொல்லவா வேண்டும்?

தன் காதலனை அந்தக் கட்டழகி வியந்து நோக்கியதாக இவள் பல தடவை நினைத்திருக்கிறாள். சில சமயங்களில் அந்தக் கண்வலையிலே தன் காதலன் சிக்கிக்கொண்டான் என்றோ சிக்கிக்கொள்வான் என்றோ இவள் பயந்ததுண்டு.

சிற்சில சமயங்களில் அவர்கள் பேசிக்கொண்டதையும் கண்டிருந்தாள். ஒரு நிமிஷப் பேச்சு அல்லது இரு நிமிஷப்பேச்சு என்றாலும் 'எவ்வளவோ பேசியிருக்கலாம்!' என்று இவள் எண்ணம்.

அவர்கள் சர்வசாதாரணமான விஷயங்களைக் குறித்துப் பேசியிருக்கலாம்; ஆனால் அதெப்படி இவளுக்குத் தெரியும்?

கட்டழகியான அவள் அரசிளங்குமரியின் காதலனைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் துணியலாமா? அரசிளங்குமரியின் இரத்தத்திலே அநாகரிக மூதாதையர்களின் மூர்க்கம் கலந்துதான் இருந்தது,

இந்த அரசிளங்குமரியைக் காதலன் நோக்கியதும், அவளுடைய பார்வையிலிருந்தே அவளுக்கு அந்தக் கதவுகளின் மர்மம் தெரியுமென்பதை உணர்ந்துகொண்டான். இவளுடைய சுபாவமும் இவனுக்குத்தெரிந்ததுதானே! அரசனுடைய பிடிவாத குணம் அருமந்த மகளுக்கும் உண்டு என்பதும், அதனால் இந்த இரகசியத்தை எப்படியாவது தெரிந்துகொண்டிருப்பாள் என்பதும் காதலனின் ஊகங்கள். சரியான ஊகங்கள்தான்.

இந்த நிலையில் காதலனுடைய கண்ணே கேட்கிறது. 'எந்தக் கதவு?' என்ற கேள்வியை, ஆம்; வேகமாய்க் கேட்கிறது கவலை தோய்ந்த அந்தப் பார்வை. அவளுக்கும் அது நன்கு புலனாகி விட்டது. அவன் தான்நின்ற இடத்திலிருந்து சத்தம்போட்டுக் கேட்டிருந்தால் எவ்வளவு தெளிவாயிருக்குமோ அவ்வளவு தெளிவாக விளங்கிவிட்டது அந்த வினாக்குறி.

ஒரு நிமிஷ தாமதமும் ஏற்படுவதற்கில்லை. இவள் தன் கையைச் சாதாரணமாகத் தூக்குவதுபோலவும் இறக்குவது

போலவும் வலது புறமாக வேகமாய் ஓர் அசைப்பு அசைத்துக் காட்டிவிட்டாள். காதலனைத் தவிர வேறொருவரும் அவளைப் பார்க்கவில்லை,

காதலன் விரைந்து போனான் இரண்டு கதவுகளும் இருந்த இடத்தை நோக்கி. சபையோர் இமைகொட்டாமல் மூச்சும் அடங்கப் பார்த்தார்கள். இளைஞன் வலது புறத்துக் கதவைத்திறந்து விட்டான். வெளிப்பட்டது சிங்கமா, சிங்கியா?

கதாசிரியருக்கும் கஷ்டமாகத்தானிருக்கிறது இந்த வினாவுக்கு விடை. வாசகர்களே! நீங்களும் ஆலோசித்துப் பாருங்கள்.

உங்களுடைய தீர்மானத்தைப் பொறுத்தனவல்ல கதையின் முடிவு, இளைஞனின் கதி, சிங்கி அரசிளங்குமரி என்றபெண்களின் விதி. எல்லாம் அரசிளங்குமரியின்மதியைப் பொறுத்தது,—அந்த மதி அந்தத் தருணத்தில் செய்த தீர்மானத்தைப் பொறுத்தது

இவளும் என்னசெய்வதென்று அல்லும் பகலுமாய் ஆலோசித்துக்கொண்டேயிருந்தவள்தான், கனவுகளிலே—இராக்கனவிலும் பகற்கனவிலும்தான்—அடிக்கடி பார்த்திருக்கிறாள் தன் காதலன் கதவைத்திறப்பதையும் சிங்கம் கொடியபற்கள் தெரியப் பாய்வதையும் பார்த்துப் பார்த்துப் பயந்திருக்கிறாள்; நடுநடுங்கியிருக்கிறாள்.

அடுத்த கதவை அவன்திறப்பதையும் அடிக்கடி பார்த்திருக்கிறாள். பார்த்துத் தன் பற்களை நெறுநெறுவென்று கடித்திருக்கிறாள்.

காதலன்சிங்கத்தைக்கண்டு நடுங்குவதைக்கண்டும் நடுநடுங்கியிருக்கிறாள். சிங்கியைக்கண்டு மகிழ்வதைக்கண்டும் நடுநடுங்கியிருக்கிறாள்!

அந்தப் பெண்ணை அவன் சந்தித்ததும், அவளுடைய கன்னத்திலே குழைவும் கண்ணிலே வெற்றியும், அவன் அவளை அழைத்துச் செல்வதும், மலர்கள் தூவிய பாதையில் அவர்கள் நடப்பதும், இவளைக் கனவிலும் கதறச்செய்திருக்கின்றன.

அந்த ஒரே கதறலைத்தான் எப்படி அமுக்கிவிட்டன வெண்கலமணிகளின் முழக்கங்களும், வெண்கலத் தொண்டைகளின் ஜயமங்களகோஷங்களும்!

காதலன் முன்னே போய்ச் சொர்க்கத்திலே காதலியாகிய தனக்காகக் காத்திருந்தால்தான் என்ன? ஆனால் அந்தப் பசித்த சிங்கம், பயங்கரமான கர்ஜனை, கோரப்பல், கூரிய நகம் அந்த இரத்தப்பெருக்கு!

ஒரே விநாடியில் இப்போது முடிவைத் தெரிவித்துவிட்டாள், வலது புறமாகக் கையை அசைத்து, என்ன முடிவு? இவ்விஷயமாகக் கதாசிரியர் முடிவாக ஒன்றும் கூறத்துணியவில்லை. வாசகமகா ஜனங்களே சொல்லுங்கள், திறந்த கதவுவழியாக வந்தது சிங்கமா, சிங்கியா?

ஸ்ரீ பகவத் கீதா ஸாரம். ஸ்ரீகாஞ்சி நம்பிள்ளைநிலைய வெளியீடு.

ஸ்ரீகாஞ்சி ப்ர. அண்ணங்கராசார்யஸ்வாமியின் விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்ரமான ஸ்ரீ நல்லப்பா ஜீயப்பங்கார், B. A., ஷை நூலின் பெருமையால் "கீதாரத்னம்" என்ற விருதைப் பெற்றுள்ளார். கீதாஸாரத்தைப் பிறர் உதவியின்றி தாங்களே படித்து

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்

●

எங்களிருவருக்கும் ஒரே மனசுதான்!

மகாதேவய்யரும் அவர் மனைவி யக்ஞுமும் எப்போதும் சச்சரவு செய்துகொண்டேயிருப்பார்கள். மஹாதேவய்யர் பி. ஏ. பாஸ் செய்தவர். கவர்மெண்டு உத்யோகஸ்தர். மனைவியும் படித்தவள். இருவரும் முன்கோபிகள். சொல் பொறுக்காதவர்கள், படபடத்த சுபாவமுடையவர்கள். பல சொல்வானேன்? அந்யோன்ய நிலையில் இன்பமுணரும் தரமில்லாதவர்கள்.

இவர்களுக்குள் ஒரு நாள் சச்சரவு பிரமாதமாய் மூண்டுவிட்டது. பக்கத்துவீட்டுக்காரர் ஓடிவந்து, “படித்தவராயிருந்தும் பாமரர்களைப்போல் ஏனிப்படி சச்சரவு செய்துகொள்கிறீர்கள்? ஒரு மனதாயிருந்து வாழ்க்கையை நடத்தலாகாதா?” என்று கேட்டார்.

மகாதேவய்யர் சிலசமயம் குறும்புப் பேச்சுப் பேசுவதுண்டு. அவர் இச்சமயம் “எங்களிருவருக்கும் ஒரே மனசுதான். அதனாலே தான் இப்படி தினந்தோறும் சச்சரவு நடக்கிறது: அவள்பேரில் அதிகாரம் நடத்தவேண்டுமென்கிற மனசு எனக்கு; என்பேரில் அதிகாரம்செலுத்தவேண்டுமென்கிற மனசு அவளுக்கு” என்றார்.

அடுத்தவீட்டுக்காரர் கக்கடகக்கட என நகைத்து “அப்படியா? நல்லபொருத்தம்”—என்று முணுமுணுத்தபடி நடந்தார்.

யக்ஞூய்:—“நல்லவிடை, நல்லவிடை” என்றுகூறிப் புருஷனுக்கு நகைமுக தரிசனம் தந்தாள்.

—:○:—

அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

சீராடை யற்றிடும் வைரவன் வாகனம் சேரவந்து
பாராருநான்முகன் வாகனந் தன்னைமுன்பற்றிக் கௌவி
நாராயணனுயர் வாகனமாயிற்று நம்மை முகம்
பாரான் மைவாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே

[வைரவன் வாகனம் - நாய்; நான்முகன் வாகனம்: அன்னம் (சாதம்); நாராயணன் வாகனம்: கருடன். (கருடன்போலப் பறந்து ஓடிவிட்டது) மைவாகனன்: அக்கினிதேவன் (மை: ஆடு—ஆட்டை வாகனமாக உடையவன்) அவன் வயிற்றினிற் பற்றினன் என்றால் பசி அதிகரித்தது என்று பொருள்.]

அறியும் வண்ணம் எளியநடையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஸ்ரீ. ப்ர. அ. ஸ்வாமியின் அபூர்வமான முன்னுரை இந்நூலுக்கு மேலும் சிறப்பையளிக்கிறது. அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய அரியநூல். இரண்டாம் பதிப்பு அணா 4. —வை. மு. ஸ்ரீ.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருநெல்வேலியில் சந்தேகப்பிசாசு

என் தாயாருடைய அம்மான் ராஜப்பா சாஸ்திரிகள், ஒரு வாரம் எங்களுடன் வந்து தங்கி மூர்த்திதரிசனம் தீர்த்த ஸ்னானம் செய்துவிட்டுப்போனார். இப்படியாக ஒருமாதத்துக்கு மேலாகவே பாபநாசத்திலிருந்துவிட்டு ஜூன் 26-ஆம் தேதி புறப்பட்டு, திருநெல்வேலி வந்து அங்கு ஒரு ஸ்கூல இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் நடேசய்யர் வீட்டில் இரவு தங்கினோம். சுமார் 6 மணிக்கு அங்கு வந்தோம். இரவுக்கு வேண்டிய ஆகாரமும் கொண்டுவந்திருந்தோம். ஸ்ரீமான் நடேசய்யர் குடும்பம் எங்களுக்குப் பழக்கமில்லை. ஒரு சிநேகிதர்மூலம் அவர்வீட்டில் ஒரு இரவுதங்கி மறுநாள் காலையிலேயே பஸ்ஸில் திருச்செந்தூர் போவதாக ஏற்பாடு. என் தகப்பனாரும் நடேசய்யரும் வாயிற்பக்கத்தில் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள்; நான் வாயிற்படிக்கு உட்பக்கம் ரேழிக்கதவினருகில் நின்றுகொண்டு, கல்விஇலாகா சம்பந்தமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தோம். 10 நிமிஷ நேரந்தான் பேசியிருப்போம். அதற்குள் சாவித்திரி வந்து என்தாயார் அழைப்பதாக என்னை உள்ளே அழைத்துப்போனாள்.

ஸ்ரீமதி நடேசய்யர் சற்றுதூரத்தில் நின்றுகொண்டு, அவள் கணவருடன் நான் பேசிக்கொண்டிருந்ததை விஷமமான சந்தேகப்பார்வையுடன் கவனித்துக்கொண்டிருந்ததைத்தான் சாவித்திரி பார்த்துவிட்டு என்னை உள்ளே அழைத்துப்போனது!! சுபாவத்திலேயே நான் நிரம்பவும் சங்கோசத்துடன் பயந்த பிரகிருதி. என் தகப்பனாரிடமே தாராளமாக பேசப் பயப்படுவேன். நிற்க,

குருடர் செவிடர் பாடசாலை

மறுநாள் காலை 6 மணிக்கே புறப்பட்டு பஸ்ஸில் (அந்தக் காலத்தில் திருச்செந்தூருக்கு ரயில் கிடையாது.) திருச்செந்தூர்போய் அலைவாயுகந்து கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சக்தி வேலாயுதம் தரித்த குமாரப்பெருமானை தரிசித்துக்கொண்டு அன்று மாலையே திருநெல்வேலி திரும்பினோம். நெல்வேலியப்பர் காந்திமதியம்மன் தரிசனம். மறுநாள் அந்த ஊரில் பாதிரிமார் நடத்தும் குருடர் செவிடர் பாடசாலைக்குப் போனோம். ''சர்வேந்த்ரியாணும் நயனம் ப்ரதானம்'' 'கண்ணோடும் கருத்தோடும் இருக்கவேண்டும்' என்று வேண்டிக்கொள்கிறோம். பிறவிக்குருடு நிரம்பப்பரிதாபமானது. ஒரு இந்திரியம் குறைந்தால் மற்ற இந்திரியங்களுக்கு சக்தி அதிக

மாகிறது. அங்குள்ள குருடர் செவிடர் ஊமை இவர்களுக்குத் தகுதியான வேலைகளைச் செய்யப் பழக்குகிறார்கள். இவர்களுக்கு கையில் ஸ்பரிச உணர்ச்சி அதிகம். அதைக்கொண்டே நூல் நூற்பு, நெசவு, நிட்டிங்கு, பாய் கூடைகள் முடைதல் இந்த வேலைகளை எத்தனை அழகாகச் செய்கின்றார்கள். சட்டங்களில் சற்று உயர்ந்த அக்ஷரங்கள் எண்கள் இவற்றை பரிசத்தினாலேயே உணர்ந்து எழுதப்படிக்க கற்பிக்கின்றார்கள். 'அரிதரிது மானிடராதல் அரிது; அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப்பிறத்தல்.' அந்த பாக்கியமற்ற குருடர் செவிடர் ஊமைகளுக்கும் ஒருபொழுதுபோக்காக பல தொழில்களைக் கற்பித்து அவர்களைக்காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்யும் பாதிரிமார்களின் ஸேவையை வாயாரநாவாரப்புகழவேண்டும். இவ்விதமான நாட்டுப்பணிகள் ஆயிரக்கணக்கில் நமது தேசத்தில் நடைபெறவேண்டும். அந்தக் காலமும் வருமா? கட்டின வீட்டுக்குப் பழுதுசொல்லிக்கொண்டு தானும் ஒன்றும்செய்யாமல் எடுத்துக் கூட்டிச் செய்பவர்களையும் 1000 முட்டுக்கட்டைகள் போட்டுத்தடுக்கும் சோம்பேறிகள் நிறைந்த நம்நாடு முன்னேற்றமடைய கடவுள் கருணை புரிவாராக.

பக்தை லோகாம்பாள்

திருநெல்வேலிக்கருகில் பாண்டபத்து என்னுமிடத்தில் லோகாம்பாள் என்னும் பெயருள்ள ஒரு பக்தை. நேரில் பார்ப்பதற்கு முன்பே இந்த அம்மாள் எனக்குக் கடிதம் எழுத ஆரம்பித்திருந்தாள். ஆகவே, அவள் வீட்டுக்குப்போய் அவளைப் பார்த்து வந்தோம். அவளுக்கு குமாரக்கடவுள் பக்தி அதிகம். அவள் கணவர் இறந்துபோன அன்றே முருகக்கடவுள் அவள் கனவில் வந்து அவள் விதவையல்ல என்றும் தானே அவளுடைய பதி என்றும், திருமங்கலியம் முதலான எந்த ஆபரணங்களையும் அவள் கழற்றவேண்டாமென்றும், மஞ்சள் குங்குமத்தையும்நீக்கவேண்டாமென்றும்சொன்னாராம். ஆகவே, அந்த அம்மாள் முகம் கைகால்களில் பத்தரப்பத்த மஞ்சள், நெற்றியில் பெரிய குங்குமம், கழுத்தில் தொங்கத்தொங்க கொடி திருமங்கலியம், காசுமாலை, இரண்டு மூன்றுவித தங்கச்சங்கிலிகள், கல் அட்டிகை, கைகளில் நிறைய தங்க வளையல்கள், காப்பு கொலுஸு, இடுப்பில் சரிகைப்பட்டுப் புடவை இவற்றுடன் காட்சியளித்தாள். தினம் காலையில் நதி ஸ்நானம் செய்து 9 மணியிலிருந்து 12 மணி வரைக்கும் பூஜை; பூஜை முடிவில் தீபாராதனைக்கு அக்கம்பக்கத்தினர்; பாபநாசம் லோகாம்பிகை பேரில் சங்கீதம். அந்தம்மாளே ஸ்வானுபவமாகப்பாடியவை. எல்லோரும் உட்கார்ந்து பக்தியுடன் பஜனை இத்யாதி. அந்தம்மாள் சாப்பிடுவது கிடையாது. இரண்டுவேளையும் பாலும்பழமும் மாத்திரம்.

முருகப்பெருமான் மற்றொருமுறை அவள் கனவில்தோன்றி கதிர்காமத்துக்கு வரும்படி அழைத்தாராம். சிதிலமாக காட்டு மத்தியிலிருந்த தன்கோவிலை புதுப்பிக்கும்படிச் சொன்னாராம். அந்தம்மாள் அந்தக்கட்டளையை சிரசால்வகித்து பலபேரிடமிருந்து பணம் வசூல் செய்து, இலங்கையிலுள்ள கதிர்காமத்தைத் தேடிச்சென்று மிகுந்த சிரமத்துடன் காட்டுமத்தியில் பழுதாகிக்கிடந்த கோவிலைக் கண்டுபிடித்து அதைப் புதுப்பித்தாராம். பிற்காலத்தில் சில வருஷங்களுக்குப்பிறகு அவரது மருமாள் வள்ளிக்கு சங்கீத உபாத்தினி வேலை செய்துவைத்தேன். சென்ற 10 வருடங்களாக அவர்களைப்பற்றிய தகவல் தெரியவில்லை.

28-ஆந் தேதி புறப்பட்டு தஞ்சையில் என் சகோதரி பாலத்தினிடம் ஒரு நாளிருந்துவிட்டு 30-ஆந் தேதி சென்னை வந்துசேர்ந்தோம்.

(தொடரும்)



வனத்தில் நுழைந்த வனிதைக்கு வனமகோத்ஸவ சிந்தனைகளைக்கிளப்புகின்றனபோலும், அச்செடி கொடிகள்.

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு.
தனிப் பிரதி	அணா 4.	0—4—6.	0—5—0.
வருடச் சந்தா	3—0—0.	3—8—0.	3-12—0.

சூரிய மின்சாரம்

— யோகி சுத்தானந்த பாரதியார் —

அன்ப,

சூரியனே நமது சுக நண்பன்; சூரிய வெளிச்சத்தில் ஜீவ தாதுக்கள் பல உள்ளன. சூரிய வெளிச்சத்தையும் சூட்டையும் முறையாக உட்கொள்ளத் தெரிந்தால் நோயே அணுகாது. சூரிய நமஸ்காரம் வேதரிஷிகள் சொன்ன சாதனம். அது உடலுக்கும் உறுதி, மனதுக்கும் உறுதி. சூரிய நமஸ்காரம் செய்பவர் ஆணானாலும் பெண்ணானாலும் சாத்விக உணவே உண்ணவேண்டும். பெண்கள் வீட்டுக்கு விலக்காயிருக்கும்போதும், கர்ப்பமாகி மூன்று மாதத்திற்குப் பிறகும் சூரிய நமஸ்காரம் செய்யக்கூடாது. மற்ற நாட்களிற் செய்யலாம். ஆண்கள் தினம் நமஸ்கரிக்கலாம்.

சூரிய நமஸ்காரத்தின் நோக்கம் உடம்பில் சூரிய ஒளி படுவதும், உள்ளே அது புகுந்து பரவுவதுமே.

சூரிய மந்திரம்

மந்திரம் ஆரியம், தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய எந்த மொழியிலும் சொல்லலாம். அதிகம் பாடம் பண்ண முடியாதவர்கள் "சூர்யஜோதி சக்தி ஓம் சுத்த சக்தி ஓம்" அல்லது "சூரியா, ஓம், வீறு தா" என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே கதிரை வணங்கலாம். அல்லது ஆதித்ய ஹ்ருதயம் ஒப்பிக்கலாம்.

பானோ பாஸ்கர மார்த்தாண்ட
சண்ட ரஸ்மீ திவாகர :
ஆயுரா ரோக்ய மைச்வர்யம்
தேஹிமே பாஸ்கரப்ரபோ

என்ற இரண்டு வரிகள் மட்டும் ஆவர்த்தனம் செய்தாலும் போதும். அல்லது "ஸூர்யஸ்சமாமந்யுஸ்ச மன்யுபதயஸ்ச மன்யு க்ருதேப்ய:" என்ற மந்திரம் ஒப்பிக்கலாம். அல்லது காயத்ரிமஹா மந்திரத்தைச் சொல்லி "ஓம் சுத்தஜோதி சக்தி ஓம்" என்று வணங்கலாம். "ஓம் சுத்த சக்தி" என்ற மந்திரத்திலேயே மற்ற மந்திர தத்துவங்கள் அடங்கும். எதையும் கருத்துடன் ஜபித்தால் பலனுண்டு.

சூரிய நமஸ்காரம் காலை ஏழரைமணி முதல் ஒன்பது மணிக்குள்ளும், மாலை ஐந்துமணி முதல் ஆறுமணிக்குள்ளும் செய்து முடிப்பது நல்லது. காலை அரைமணி நேரம்; மாலை அரைமணி நேரம்.

தடவைக்கு இருபது அல்லது முப்பது நமஸ்காரங்கள் செய்யலாம். பலமுள்ளவர்கள் நூறுகூடச் செய்யலாம். சூரிய நமஸ்காரம் வெறும் தண்டால் பஸ்கிபோல் இருக்கக்கூடாது; அது ஒரு யோக சாதனம். சூரியனிடம் உள்ள சுத்த சக்திக் கதிர்கள் நரம்புகளிலும் அந்தக்கரணத்திலும் கலந்து, உடல்நலனும், உயிர் நலனும், உள்ள நலனும் தர ஒரு பயிற்சி.

நான் எந்த வேளையிலும் சூரிய வணக்கம் செய்வதுண்டு. இந்த உலகில் கடவுளின் பிரதிபிம்பம் சூரியனே; சூரியனைத் தியானித்தே அக்னி காரியமும் நடத்துவது உண்டு. சூரியன் என் உயிர்த்தோழன். நான் எனது ஜபமந்திரத்தையும் சாதனத்

தையும் சூரியனிடமிருந்தே பெற்றேன். ஆதலால் எனது சாதன முறை அலாதியாயிருக்கும். அதில் முடிந்தமட்டும் உனக்குச் சொல்லுகிறேன்; முடிந்தமட்டும் செய்துவா:—

1. மனதை நிம்மதியாக வைத்துக்கொள். கீதை, யோக சித்தி அல்லது வேறு புண்ணிய நூல்களில் பத்து வரி படித்துச் சிந்தனை செய். சித்தத்தை அலையாது வைத்துக் கொள்.

2. மானத்தை மறைக்க, கோவணம் மட்டும் உடுத்து, இடுப்பு வேட்டியைக் கச்சம் கட்டிக்கொள். ஆனால் இடுப்பை இறுக்கி விடாதே. அடிவயிறு வெயிலில்படும்படியிருக்கட்டும்.

3. காற்றுடும் வெளியில் ஏகாந்தமாக சூரியனைப் பார்த்து நேரே நில். கடவுளையே இந்த ஜோதி வடிவாகப் பார்ப்பதாகக் கருது.

4. "ஓம் சுத்த ஜோதி சக்தி ஓம்" என்று சூரிய ஒளியை இடது மூக்கினால் உறுஞ்சு; சூரியனையே பார்த்து ஏகாக்கிரத்துடன் காற்றைப் பூரகம் செய்தால் சூரிய மின்சாரமும் உள்ளே புகும். உடனே வலது நாசி வழியாக "ஓம் சுத்த சக்தி ஓம்" என்று மூச்சை விடு; அதே மாத்திரை யளவு மூச்சிழுக்காது சும்மா இரு; கழுத்தை இறுக்கிக்கொள். பிறகு மறுபடி வலது நாசிவழியே மூச்சிழு; இடதுநாசி வழியேவிடு. இந்தப் பயிற்சியை நிதானமாகச் செய். ஐந்தே நிமிஷம் போதும். இது நாடிசுத்தி தரும்.

5. பிறகு சூரியனைப் பார்த்து நிமிர்ந்து நில்; விரல்களைக் கொண்டு இரண்டு கண்களையும் மறைத்து விரல் இடுக்குகள் வழியே சூரியனைப்பார்—அரை நிமிஷம்.

6. பிறகு கண்ணை மூடிக்கொள்; தலையை இப்புறமும் அப்புறமும் ஆட்டு. சூரிய வெளிச்சம் முகத்திலும் உடலிலும் நன்றுகப்படட்டும்.

7. பிறகு இடுப்பை இப்புறமும் அப்புறமும் ஒய்யாரமாக அசைத்துச் சூரியனைப்பார். இந்த அசைவால் சூரிய மின்சாரம் உடம்பில் புகும்.

8. பிறகு கைகளைத் தூக்கு—மந்திரத்தை உச்சரி. முழங்கால் வளையாமல் இடுப்பு குனிந்து கையால் தரையைத்தொடு; கால்களைப் பின்னே இழுத்துக்கொள். சாஷ்டாங்க நமஸ்காரம் செய்; அப்போது "சூரிய பகவானே! உன் ஒளி என்னுட் புகுந்து சக்தியும், பலமும், வீரியமும் ஆரோக்யமும், நீண்ட ஆயுளும் தருக" என்று மனதார நினை. வாயை விட்டுச் சொல்லாதே. இப்படி இருபது தடவை ஏகாக்கிரத்துடன் நமஸ்காரம் செய்.

9. பிறகு மூச்சைச் சமன்செய்துகொள். அதாவது உஸ்-புஸ் என்று கட்டைவண்டிமாடு மாதிரியோ துருத்தி மாதிரியோ மூச்சு விடாதே; மூச்சு மூக்குக்குள்ளேயே அடங்கி உலாவும்படி அமைதி செய். இந்த அமைதியுடன் "ஓம் சுத்த ஜோதி சக்தி ஓம்" என்று எட்டு வைத்து இங்கு மங்கும் சூரிய ஒளி மேலே படும்படி உலாவு—ஐந்து நிமிஷம்.

10. பிறகு நிம்மதியாகச் சூரியன் முன் துண்டை விரித்துப் பத்மாசனத்தில் உட்கார்; ஜபமாலையை உருட்டு; 108 ஆவர்த்தனம் காயத்திரியுடன் "ஓம் சுத்த சக்தி" ஜபம் செய்.

ஜபம்ஏகாக்ரமாக நடக்கட்டும். இந்த ஜபத்தாடு உனக்கு வேண்டிய வரங்களையும் மானசிகமாகக் கருது. ஜபம் முடிந்ததும் அபிவாதையே சொல்லி (அதாவது, நான் இன்னபெயர், இன்னான் மகன், இன்னவரத்திற்காக உன்னை வணங்குகிறேன்—அல்லது எவ்விதமான ஆசையுமில்லாமல் யோக சித்திக்காக வணங்குகிறேன்) வணங்கு.

11. உடனே "கேசவா, நாராயணா" சொல்லி ஆசமன்யம் செய்—அல்லது இதற்கும் சுத்த சக்தி மந்திரத்தையே கொள்க. இவ்வளவுதான் சூரியநமஸ்கார சாதனத்தில் உனக்குச் சொல்லமுடியும்.

கேவலம் தேக பலத்தை மட்டும் விரும்பி இந்தக் காலம் சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள். சூரியன் முன் தண்டால் எடுப்பது, புஜங்காசனத்திலிருந்து சூரியனைப்பார்ப்பது, குனிந்து நிமிர்வது முதலிய பல பயிற்சிகள் உண்டு. பிராணாயாமசித்தி பெற்ற யோகிகள் சூரிய ஒளியை உள்ளே இழுத்து அதிலுள்ள ஜீவசக்தியை ஜீரணிப்பார்கள்.

உனக்கு இவையெல்லாம் முறையாகச்செய்ய நேரமில்லையானால் உடம்பில் சூரியவெளிச்சம் படும்படி "ஓம் சுத்த சக்தி ஓம்" என்று ஜபம்செய்துகொண்டே காலை அரைமணி நேரம் மாலை அரைமணி நேரம் உலாவு. உலாவி முடிந்ததும் உடம்பைத் தேய்த்துக்குளி. இதுவே சூரிய மின்சாரத்தை உடம்பில் பாய்ச்சவல்லது.

ஒரு சுத்தமான மண்பானையில் நீர் நிரப்பி வெயிலில் சூடேற வைத்து அதையே குடிப்பது சுகாதார மாகும். சூரிய வெப்பத்தால் சூடான நீரில் குளித்தால் நரம்பு நோய்கள் தீரும்.

சூரியனை உண்ணலாம், பருகலாம், அணியலாம்—சூரிய ஜோதிதான் சமயசஞ்சீவி ரசம். காசு பணம் செலவில்லாது, வைத்தியர் உதவியில்லாது, கடவுள் இந்த ஜோதி—பண்டிதனை நமக்கு தினம் அனுப்புகிறார். அறி—செய்—நன்றாயிரு! அன்பு. ஓம் சுத்த ஜோதி ஓம்!

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 3-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை

அமரத்யாகி
ஜீவநாடி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்
ரூ. 1-2
படகோட்டி

அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
ப்ரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
அணா. 8
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
அணா. 6.
உளுத்த இதயம்

மஞ்சள் குங்குமப்

வஸுமதி ராமஸ்வாமி

“வா, கலா! இரண்டு மாதமாய் கண்ணிலே காணோம். ஊரிலிருந்துவந்து இரண்டு வாரங்களாச்சுபோலிருக்கிறதே!”

“அதோ பர்வதம், கமலா எல்லோரும் வருகிறார்களே மாமி! எல்லோரும் ஊருக்குப் போயிருந்தார்களா?”

“ஆமாம் கலா! ஊரில் பந்துக்கள் வீட்டிலும், சினேகிதர்கள் வீட்டிலும் நிறைய கல்யாணங்கள். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் திறப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்தான் வந்தேன். வந்தும் பிரயோசனமில்லை.” என்றாள் கமலா.

“அப்படி என்ன கமலா? குழந்தைகள் எல்லோருமே பரீக்ஷையில் தேறிவிட்டார்களல்லவா? மேல்வகுப்பு தானே?”

“என் பெரிய பிள்ளைக்கு வைத்திய கல்லூரியில் சேர ஆசை. எனக்கோ பிடிக்கவில்லை. வீட்டு புருஷர்கள் அங்குதான் சேர்க்கணுமென்றார்கள். கடைசியில் இடம் கிடைக்காமல் திண்டாடினோம். பெண் லலிதாவுக்கு ஒரு காலேஜிலும் இடம் கிடைக்கவில்லை. லக்ஷணமாக வீட்டுவேலைகளை எனக்கு உதவியாகச் செய்துவா யென்றால் அழுது மூஞ்சிவீங்குகிறாள். என்ன அர்த்தமற்ற மேல்படிப்போ? எல்லாம்கிடக்க சின்னப் பெண் ரமாவுக்கு அந்த ஸ்கூல் பிடிக்கவில்லை. கடைசிப்பையன் சுண்டு செய்யும் விஷமம் தாங்காமல் மாண்டிஸோரி ஸ்கூல் பேபி வகுப்பில் சேர்க்கப்போனால் இடமே கிடைக்கவில்லை என்னபடிப்பு வேண்டியிருக்கிறது. படிக்காமல் இருந்தால் என்ன? அதுவும் பெண்களைப் படிக்கவைக்காமல் இருப்பதே சிலாக்கியம்; சலித்துப்போச்சு போ!”

“அப்படிச் சொல்லாதே பர்வதம்! நம் நாட்டில்தான் படிக்கத் தெரியாதவர்கள் அதிகம். கல்வி அறிவு மற்ற நாடுகளை எவ்வளவோ துறைகளில் மேன்மைப்படுத்தியிருக்கிறது. இன்னும் கேட்டால் நம் நாட்டிற்கு கட்டாயக்கல்வி வேணுமென்றல்லவா பாடுபடணும்.”

“போதும் கலா! பர்வதம் சொல்வதுபோல் இந்தப் பெண்கள்—படிப்பு அநாவசியமே. இவர்களும் படிப்பதனால் ஆண்களுக்கு இடமில்லை. ஏதோ எழுதப் படிக்கத் தெரியட்டும். பட்டங்கள் எதற்கு? படிக்கத்தான் போகிறார்கள். எவ்வளவு நோட் புஸ்தகங்கள், எவ்வளவு எடுபிடி சாமான், காசைப் பறிக்கிறார்களே! ஒரு பெண்ணைப் படிக்கவைத்து, கல்யாணமும் செய்தால் ஆள் பிறகு தலைதூக்க முடியாது”

"நீ முதலில் சொன்னபடி பெண்களுக்கு பட்டம் படிப்பு அநாவச்யமென்று சொல்லமாட்டேன். பெண்கள் மூடமாக வாழ்ந்தகாலம் போச்சு. இப்பொழுது மெய்வாழ்வு வாழ அஸ்திவாரம் படிப்பு. ஆனால் பெண்கள் அந்தப்படிப்பினால் இன்னும் பண்படையனுமேயன்றி பெண்மையை இழக்கக் கூடாது. "காதலனொருவனைக் கைபிடித்து, அவன் காரியம் யாவிலுங் கைகொடுத்து" என்று பாடினார் பாரதியார். அவர் கண்டகனவு அவ்வளவுமே நினைவாகிவிட்டது. அவர் புதுமைப் பெண் எப்படி இருப்பாளென்று மனக்கண்ணால் கண்டார். அம்மாதிரி பெண்களையே நம் பாரதத்தாய் வேண்டுகிறாள். பெண்கள் படிக்கவேண்டும். நிராதரவான பெண்கள் அல்லது பணவசதியற்ற பெண்கள் ஒருதொழில் புரியவேண்டியபடி படிக்கவேண்டியதுதான். ஆனால் நீ இரண்டாவது சொன்ன விஷயத்தை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். சின்னவகுப்புக் குழந்தைகளுக்குக்கூட ஊர்ப்பட்ட புஸ்தகங்கள் நோட்டுகள்! கரும்பலகையில் எழுதுவதே கிடையாது!"

"ஆமாம் கலா! என் குழந்தைகளுக்கு புஸ்தகமும் சம்பளமும் 150 ரூபாயாச்சு. குடும்பம் எப்படி கட்டும்? ஒரு பண்டிகை பருவமென்றால் பெண்குழந்தைகள் உதவியாக வேலைசெய்தாலல்லவா ஸௌகர்யம்? அன்று அவர்கள் பள்ளிக்கூடத்திலும் பண்டிகை கொண்டாடுகிறார்கள். அதற்கு வேறு காசு கொடுக்கணும்,"

"பழைய காலத்தில படிப்புஎல்லாம் செய்யுள் ரூபமாக இருந்ததால் வாத்தியார்சொல் குழந்தைகள் மனப்பாடம் செய்துகொள்வார்கள் ...னை ஞாபகம் வைத்துக்கொள்ளும் அப்பியாஸமும் ஏற்படும். செய்யுளில் பொருள் பொதிந்து ...ற்கும். இப்பொழுதோ எல்லாம் வசனநடை. ஆயிரம் புஸ்தகத்தில் எழுதி குழந்தைகளை வேலை வாங்குகிறது. கடைசியில் அவர்களுக்கு ஞாபகசக்தி குறைகிறது.' என்றாள் கமலா.

"ஆமாம் கமலா! பழையகாலத்து போதனா முறையே தனிப்பட்டது. குரு சிஷ்ய பரம்பரை, குருகுல வாசமென்று ஆயுளில் இளமைபகுதியை வகுத்துவிட்டார்கள். மேல் நாட்டு நாகரிகம் பரவி அந்த முறை மறைந்தது. சமுதாயம் மாறுவதில் நாமும் புதிய முறைகளை வரவேற்கவேண்டியதே. பெண்கள் படிப்பு இன்றியமையாதது. உலக விஷயம் விவகார ஞானம் எல்லாம் வேணும். புருஷன்கையை எதிர்பார்க்காமல் வீட்டு வேலைகளைத் திறன்பட நடத்தபடிப்பு அவசியம். ஆனால் போதனாமுறை பாடங்கள் மாறணும்."

"அதுசரி கலா! படிப்பு வேணுமென்கிறாயே. படித்தால் உத்தியோகம் கைமேல் கிடைக்கிறதா? அதுவுமில்லை. சின்ன ஆஸ்திக்காரர்கள் எல்லாவற்றையும் விற்று 15 வருஷம் படிக்க வைத்து கடனாளியாகப்போய் சிரமப்படுவதுதான் மிச்சம். படித்த பையன்வேலைக்கு அலைந்துஉயிரை விடுகிறான்பாவம்!"

"ஆமாம் கமலா! நீ சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். எல்லாம் அரைகுறையில் வரும் துன்பம். இன்னும் படிக்க நிறைய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் தேவை. படிப்பு முறை இன்னும் எளிமையாகவும் வசீகரமாகவும் இருக்க வேணும். வாழ்வில் பயன்படும்படி அமைக்கவேணும். ஆண்களுக்குத் தேவையானவைகளை அவர்களுக்கும் கிரகலக்ஷ்மியான பெண்களுக்குத் தேவையானவைகளை பிரத்யேகமாக போதிக்கவேண்டும். பொதுக் கல்வி சிலது இருந்தால் பல விஷயங்களில் பேதமிருக்கிறது. உத்தியோகம்போகும் பெண்களுக்கு சிலபடிப்பு தனியாக கற்பிக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் விழாக்கள், கொண்டாட்டங்கள் இம்மாதிரி செலவினங்களை ஏன் குறைக்கக்கூடாது? அதெல்லாம் சீர்திருத்தங்கள்...

"எங்கள்பாட்டி அ,ஆ தெரியாமல் போஜசரித்திரம், நளமகாராஜன் கதை, அல்லி அரசாணிமாலை இவைகளை எவ்வளவோ அழகாய்ப் பாடுவாள். ஒரு கல்யாணம் கார்த்திகை என்றால், கணீரென்று லக்ஷ்மீ கல்யாணம் பாடுவாள். இந்த காலத்து பெண்கள் ஆயிரம் புஸ்தகம் படிக்கிறார்களே, ஒரு சரித்திரம் உருப்படியாகத் தெரியுமா? நாலுபாட்டு நறுக்குனு பாடத்தெரியுமா? வாத்தியாரைவைத்து அல்லல்படுகிறோம்..."

"அப்படியில்லை பர்வதம்! தற்காலத்து பெண்களில் சிலர் வெகு அபூர்வமாகப் பாடுகிறார்கள். நல்ல பண்புடன் ஒழுங்கான நடவடிக்கைகளுடன் நடந்துகொள்வார்கள். நாம் எப்பொழுதும்பழைய காலத்தைப் போற்றி தற்காலத்தை இகழ்வது சரியல்ல. பாரதநாட்டு சமுதாயம் காலச்சக்கரத்தின் போக்கின்படியே நாகரீகத்தின் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. காலத்தை அனுசரித்தே போகணும். படிப்பில்லாததனால் பழைய காலத்தில் சமூகத்தில் சில கொடுமைகள் இருந்தன. அவைமறைந்துவருகின்றனவென்பதைமறுக்கமுடியாது.'

"அடாடா, மாமி! போய்வருகிறோம். மாமா வந்தால் கோபித்துக்கொள்வாரல்லவா?"

"இல்லை! மாமா நேற்றுகூட உன் சிநேகிதிகளை வெகு நாளாக காணோமேயென்று விசாரித்தார்...மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொள்ளுங்கள்."

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய
காந்தி கீர்த்தனம்
350 பக்கங்கள். ரூ. 3—8—0.
உயரிய கிளேஸ் புதிப்பு.
இதைப் படித்து நல் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
இப் பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே!

"ப்ரேமாச்ரமம்"

வை. மு. கோ. ௭௨-வது நாவல்

அளவுக்கு மீறினால் அனர்த்தமே விளையும்.

"உலகத்திலேயே இல்லாத சிங்கநரிதம் உனக்குத்தான் கூத்தாடுகிறது. இப்போதுதான் கிழக்கு வெளுத்திருப்பதாக எண்ணமோ? மணியைப் பாரு, 8 அடிக்கப்போகிறது! இப்படியும் ஒரு பெண் தூங்கு

வாளா! இம்மாதிரி தூக்கம் மூதேவித்தனமல்லவா? அதுமட்டுமா! தேகஆரோக்யத்திற்கும் மகா கெடுதலாச்சுதே! எழுந்திருடீ! மெனக்கெட்டு எழுந்துவந்து குழந்தைகளை அடித்து இம்ஸித்துவிட்டு மறுபடியும் படுக்கிறாயே. இதென்ன அனியாயம்?" என்று ருக்மிணியம்மாள் தன் மகள் கௌஸல்யாவைப் பார்த்துத் திட்டினாள்.

படுக்கையிலேயே கௌஸல்யா இழுத்துப் போர்த்திக்கொண்டுஅப்படியும்இப்படியும்நெளிந்தபடியே, "போதும்மா! விடியற்காலையில் நிச்சிந்தையாகச் சற்று தூங்கவிடாமல் பீடைகள் லொடலொடவென்று பேசுவதும் சண்டையிட்டு விளையாடி அழுவதும் சகிக்கமுடியவில்லை. அறுவத்திமூவர் போன்ற இந்தச் சனியன்களுக்குத் தூக்கம் வராதோ!...என்னைத் தொந்தரவு செய்யாதே. இன்று சனிக்கிழமை; ஸ்கூல் கிடையாது. நான் சற்று கழித்துத்தான் எழுந்துவருவேன்" என்று முகத்தையும் மூடியவாறு சொன்னாள்.

ருக்மிணி:—சீச்சீ அதிகப்ரஸங்கி! குழந்தைகளைப்பார்த்து அறுவத்திமூவர் என்கிறாயே! நாக்கைப்பாரு, நாக்கை! ரத்னம்ரத்னமான குழந்தைகளின் ஆனந்தத்தைப்பார்த்துச் சந்தோஷத்துடன் விளையாடிமகிழாமல் சிள்ளுபுள்ளென்று சீறிவிழுகிறாயே. என்ன மிருகஜென்மம் இது?

ஜோ:—அம்மா! மிருகஜென்மம் என்று சொன்னால் பொருந்தாது. மிருகஜாதிகளும் பக்ஷிஜாதிகளும் தங்கள் தங்கள் குழந்தைகளிடம் விளையாடும் அழகைப் பார்த்தாலல்லவா தெரியும்; வேளாவேளைக்கு ஆகாரத்தைத் தேடிக்கொண்டுவந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டி மகிழும் அழகைப் பார்த்தால் நாம்கூட அத்தனை அழகாக ஊட்டவில்லை என்றுதான் தோன்றுகிறது. கடவுள் கிருபையில் இந்த கௌஸல்யாவுக்கு டெஜன் கணக்கில் குழந்தைகள் பிறந்து இந்த அராக்கட்டைத்தனத்தைப் பரீக்ஷைசெய்து போக்கவேண்டும். ஒரு குழந்தைக்காக கோடானுகோடி தவம்கிடக்கிறார்கள் சிலர். பகவான் நமக்கு இம்மட்டுமாவது...

கௌ:—இம்மட்டுமாவது நாயின்பின்னே நாலு, பன்னியின்பின்னே பத்து என்று வருஷம் மூன்றுகுட்டிகள் இரட்டையும் ஒத்தையுமாய் உங்களுக்கு...

"ஏய் அதிகப்ரசங்கி! எழுந்துவாடீ! பேசுகிறாள் பேச்சு! ...என்று கூறிக்கொண்டே ருக்மிணி சமையலகட்டிற்குப் போனாள்.

ருக்மிணியம்மாள் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள். பெரிய சம்சாரி. நான்குபெண்களும் மூன்றுபிள்ளைகளும் உண்டு. எல்லோருக்கும் கடைசி பெண் கௌஸல்யா; கடைசிகுட்டி ரொம்பநாள்கழித்துப் பிறந்ததால்—அதிலும் மிக்க அழகாகப் பிறந்திருப்பதால், மேலும் அத்ருஷ்டக்காரி என்று

பட்டப்பெயர் பிறந்தஅன்றே பெற்றிருப்பதால்—அவளை எல்லோரும் மிகச்செல்லமாக வளர்த்து தலைக்குமேல் ஏற்றிக்கொண்டு அவள் இஷ்டப்படியெல்லாம் நடத்தி, கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுத்து அஸாத்ய சலுகை காட்டிவிட்டார்கள்.

அதன் பலன் அவளுக்கு வயதுவந்த பிறகும் ஆதியில் முளைத்த பிடிவாதக் குணமும் சர்வாதிகார புத்தியும் சற்றும் மாருமல் கூடவே வ்ருத்தியாகிக்கொண்டுவந்தன. முதலில் கொடுத்த செல்லத்தின் முறைப்பு நாளுக்குநாள் ஏறிவருவதைக்கண்டு திருத்த முயன்றதெல்லாம் வீணுகியது; சதா சிள்ளுபுள்ளென்று சீறிவிழுந்து புத்திசொல்வதையே தாயார் தன் தொழிலாகக்கொண்டாள்! பெண்ணோ, தானே சகல அம்சத்திற்கும் முதன்மை ஸ்தானம் வகிக்கவேண்டும்; தான் சொல்கிறபடிதான் சகலமும் நடக்கவேண்டும். அதை யாராவது தடுத்தால் அசாத்ய கோபம் வந்துவிடும்—சாப்பிடாமல் உண்ணுவ்ருதம் ஆரம்பித்துவிடுவாள்! அந்த உபத்திரவத்திற்காகத்தாய் தகப்பன்மார்கூடமானவரையில் அவளுக்குக் கோபம்வராமல் பார்த்துக்கொள்வதோடு இஷ்டமான படியும் நடத்தி ஒரு ஆண்பிள்ளையைப்போல் பழக்கினுர்கள்.

மூன்று பெண்களும் இரண்டுமருமகளும் மாறிமாறி யாராவதொருத்தி தவருமல் மாதம்மாதம் ப்ரஸவித்துக்கொண்டே இருப்பதால்வீட்டிலுள்ள முன்னணிக்குழந்தைகள் அழுவதும், வருவார் போவார்களின் பேச்சும் சலாட்டாவும் கௌசல்யாவுக்குச் சற்றும் பிடிக்காது, சதா சண்டையும் முணமுணப்பும் அவளுக்குப் பிறப்புரிமையாகிவிட்டன.

இந்த செல்லம்கொடுத்துவளர்த்த விபரீதத்தில் ஒருவரிடமும் பயமோ, பக்தியோ, மரியாதையோ, பணிவோ சகலத்திலும் அந்த 'காலமே' பூஜ்யமாகிவிட்டது. வீட்டிற்கு யாராவதுவந்தாலும்கூட தூக்கிப்போட்டு அலக்ஷிய மாகப்பேசுவதை அவள்குற்றமாகவே உணருவதில்லை தங்கள் வீட்டிற்கு யாராவது விருந்தாளிகள் வந்தால் சற்றும் வாய் கூசாமல்... "சேச்சே... இதென்னகும்பல்! கையிலிருக்கிற கிருஷ்ணமூர்த்தி, வயித்திலிருக்கிறவாஸுதேவன், தொட்டிலிலிருக்கிற துரைசாமி, தோள்மீதிருக்கும் தோண்டுராயன், பக்கத்திலிருக்கும் பரமசிவன், எதிரில் நிற்கும் ஏகாம்பரம்... அப்பப்ப... இத்தனையும் இழுத்துக்கொண்டு வெட்கமில்லாது வந்திருக்கிறதைப் பாரு! ஒன்றுக்குசோறு, ஒன்றுக்குபாலு: ஒன்றுக்கு திண்டிபக்ஷணம், ஒன்றுக்குத்தொட்டில்...என்று வெக்கமில்லாது கேட்பதைப்பார்த்தாலே பிடிக்கவில்லை!... என்று அவர்கள்காதுகேட்க உரத்துக்கூறிக் கொக்கரிப்பாள். இதைக்கண்டித்து பெற்றோரும் உடன்பிறந்த அண்ணன்மார்களும் திட்டுவார்கள். பிறகுகேட்கவேண்டுமா! ஒரே சகளைதான். இதுவிஷயமாக மூத்தஅண்ணனுக்கும் இவளுக்

கும் சதாசண்டைதான். இந்த ஆத்திரத்தில், அவனுடைய குழந்தைகளை சதா அடித்துத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதில் அவளுக்கொரு இன்பம்.

"பெருக்கப்பெருக்கப் பேயும் குரங்காகும்—என்றபழமொழி சரியாகிவிட்டது. இப்படியா ஒரு தடிக்கடாவை வளர்ப்பது?" என்று எல்லோரும் சதாஆசீர்வாதம் செய்வதை அவள் லக்ஷியமே செய்யமாட்டாள்: அத்தகைய செல்ல மகள் தன் தாயார் உள்ளே சென்றபிறகு எழுந்திவராது படுத்திருந்தாள். வீட்டில் இரண்டாவதுபெண் ப்ரஸவித்திருப்பதால் அந்தக் குழந்தை குவ்வாகுவ்வாஎன்று கத்துகிறது. பச்சைக்குழந்தையின் ஒப்புயர்வற்ற அந்தக் குரலின் இன்ப ஒலியைக்கேட்டு, "டேய்! என் தம்பி அழுகிருண்டா...குட்டி அத்தான் அழுகிருண்டா...அவனுக்கு அப்பிச்சிவேணுமாம்... இல்லேடா! சின்னசட்டைவேணுமாண்டா..ஊஹூம்..அதெல்லாம்இல்லே. ஆட்டாகுதிரை வேணும்னுகேட்டு அழுகிருன்.... போடா....அதில்லெடா! நான்எடுத்துக்கிணமாம். அண்ணு கிட்டேபோகணும்னு அழுரான்பாரடா..."என்று தம்தம் போக்காக வெகு குஷியுடன்பேசிமகிழும் கூச்சல் கௌஸல்யாவுக்குமறுபடியும்ஆத்திரத்தை ப்ரமாதமாகமூட்டிவிட்டதால், தடபுடலாக எழுந்து வாசலுக்கு ஓடினுள். அந்த குழந்தைகளின் கூட்டத்தில் எதெது துரதிர்ஷ்டம்பிடித்திருந்ததோ, அந்தக்குழந்தைகள் இந்த அகங்காரதேவதையின் கையில் அகப்பட்டுக்கொண்டுசரியானஉதைவாங்கிவிட்டதுகள்பாவம்!

"ஐயையோ! அத்தைவருகிருள்... சித்திவருகிருள்... பிசாசுவருகிறது" என்று பெரியகுழந்தைகள் சொல்லிக்கொண்டே எழுந்து வீதியில்இறங்கி எதிர்வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் புகுந்துகொண்டு மற்றகுழந்தைகள் அடிபடுவதைப் பார்த்துப் பரிதாபப்பட்டன. குழந்தையுள்ளத்திலும் கவலை படிந்து பாதித்தது.

அடிபட்டுவீறிடும் குழந்தைகளின் பேரொலியைக்கேட்டு அதன் தாயார்கள் வந்து தூக்கிக்கொண்டு இவளை வழக்கம் போலத் திட்டினுர்கள். ப்ரஸவித்திருந்தவள் தன்சவலைக் குழந்தையின் அழுகுரலைக்கேட்டு பெத்தமனம்பதறிப்போய் வாசல் என்பதையும் பாராமல் பச்சைஉடம்புடன் தலையும் வேஷமுமாக ஓடிவந்து தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கண்ணீர்பெருக "தடிக்கழுதை!...நீ பெண்ணு? பேயா! இந்த வயதில் இத்தனைஆணவம் இருந்தால் உன்னை எந்தமடையன்கட்டிக்கொண்டுபோவான்? ஏற்கெனவே துர்ப்பலமாய் சவலைப்பட்டுக்கிடக்கும் குழந்தையை இப்படியா அடிப்பது? 'சீச்சீ! புத்திகெட்டுப்போய் இந்த வீட்டிற்கு வந்தேனே! என் மாமியார்வீட்டில் நான் இருந்திருந்தால் எப்படியோ பார்த்துக்கொள்வார்கள்; என்னமோ அம்மா கூப்பிடுகிருளே என்றுதான் வந்தேன். அம்மா! இனி நான்

அரைக்ஷணங்கூட இங்கிருக்கமாட்டேன். நான் இப்போதே கடிதம்போட்டு என்கணவரை வரவழைத்து போய்விடுகிறேன். ஆள்கண்டபிடாரியான இவளே இங்கு அதிகாரம் செலுத்தட்டும். இந்தராக்ஷஸியுடன்கூட ஒருவரும் வாழமாட்டார்கள். அடங்காப்பிடாரி'' என்று திட்டியவாறு குழந்தையைச் சமாதானம் செய்தாள்.

''இத்தனை ரோஷப்படுகிறவளை யார் வரச்சொன்னாள்? வாயைப்பாருவாயை'' என்றுகௌஸல்யாமுணுமுணுத்தவாறு மறுபடியும் படுக்கையில் படுத்தாள். தான்செய்ததுதான்சரி என்றும் தன் சகோதரி சொல்வது குற்றமென்றுந்தான் அவள் மனத்தில் தோன்றியது.

2

சிதைந்த குடும்பமும் சீர்கெட்ட முறையும்

''இவள் அடிக்கவருவதையறிந்து, அலறிக்கொண்டுகுழந்தைகள் தாறுமாறாக ஓடி, சில எதிர்வீட்டில் புகுந்தன. உடல்நலம் சரியில்லாது அங்கு படுத்து, வாசல் ஜன்னலால் பொழுதுபோக்கிற்காக வீதிப்பக்கமே பார்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மி, குழந்தைகள் தாறுமாறாக ஓடிவருவதைக்கண்டு, எங்காவது அடிபட்டுவிடப்போகிறதே என்கிற பயத்தினால் எழுந்துவந்து குழந்தைகளைத் தாவியணைத்துச் சமாதானப்படுத்தியவாறு உள்ளேசென்றாள்.

பாவம்! அவள் கண்கள் தானாக மழைபொழிவதுபோல் ஜலத்தைக் கக்கின. அவளுக்குச் சகலவிதமான பாக்கியங்கள் இருந்தும் ஒரு குழந்தைஇல்லாத குறையினாலேயே அவள் உள்ளம் துக்கத்தில் தோய்ந்து ஏங்கி இருப்பதால், இக் குழந்தைகளை அணைத்தவுடனே எங்கிருந்தோ ஒருபுதிய இன்பஉணர்ச்சி இதயத்திலிருந்து பொங்கிப்பீறிக்கொண்டு வந்தது. இந்தப் பேரின்பத்தை என்றுதான் கடவுள் தனக்குக் கொடுத்துப் பூரிக்கச்செய்வாரோ! என்கிற மகத்தான சோகம் வந்து ஒரு குலுக்குக்குலுக்கியது.

குழந்தைகள் முதுகையொன்றும் காலையொன்றும் இடுப்பையொன்றுமாகச் சுற்றிக்கொண்டு ''மாமீ! பிசாசு போலே அடிக்கவரா மாமீ! ஐயோபாவம்! ராஜூவைரொம்ப அடிச்சுட்டா மாமீ! அவனுக்கு வலிக்காதா மாமீ!'' என்று அவர்கள் அதை நினைத்தே அழவாரம்பித்துவிட்டார்கள். லக்ஷ்மி, தன் மனக்கலக்கத்தில்கூட குழந்தைகள் ஒன்றுக்கொன்று எப்படி அன்புசெலுத்தும் என்பதைக்கண்டு ஆனந்தமடைந்தாள். இத்தகைய சொர்ணவிக்ரகக் குழந்தைகளுக்குத்

தான் தவமிருந்து சாகிறதும், இதே குழந்தைகளின் அருமை தெரியாமல் முரட்டுத்தனமாய் இப்படி அடித்து இம்சிக்கும் ராக்ஷஸகுணமும் இருக்கிறதே....என்று ஏங்கியவாறு குழந்தைகளுக்குப் பிஸ்கேட்டும் பெப்பரமிண்டும் கொடுத்துச் சமாதானம்செய்து விளையாடிக்கொண்டிருந்தாள்.

மூத்த மருமகள் தன் குழந்தைகளை நாத்தனார் அடித்ததைத் தாளாமல் மிகுந்தகோபத்துடன் கணவனிடம்போய் “இதோ குழந்தைகளின் முதுகையும் கன்னத்தையும் பாருங்கள்! இப்படியா அடித்துக் கொல்வது? ராக்ஷஸி என்றும் தாடகி, சூர்ப்பணகி என்றும் சொல்வார்களே! அந்த உருவங்களை எல்லாம் சேர்த்து இந்த மனிதமிருகத்தினிடம் பார்க்கிறேன். குழந்தை சுருண்டு செத்துவிட்டதென்றால் என்னசெய்வது? இப்படியா ஒருசெல்லம்கொடுத்துவளர்ப்பது! இந்த ருத்ரதாண்டவத்தையும் இதன் விபரீதத்தையும் பார்த்துக்கொண்டு உங்கம்மாவும் அப்பாவும்பேசாமலிருந்தால் அந்தத் தடிச்சிறுமியின் கொழுப்பு அதிகமாகாமல் என்ன செய்யும்? போதும்! போதும்! இந்த உபத்திரவம் என்னால் படமுடியாது. நான் என் பிறந்தகத்திற்குப்போய் நாலுமாதமாவது இருந்துவருகிறேன். இல்லாவிட்டால் வேறு குடித்தனம்போக உடனே ஏற்பாடுசெய்யுங்கள். இந்தப் பிசாசினிடம் குழந்தைகள் அடிபட்டுச்சாவதை என்னால் பொறுக்கமுடியவில்லை. இப்படியுமா ஒரு அதிசயச்செல்லம் கொடுத்து அனர்த்தத்தை விளைவிப்பது” என்று சண்டைபிடிக்கவாரம்பித்தாள்.

ஏற்கெனவே அந்தத் தங்கையினிடம்அதிககோபங்கொண்டுள்ள ராஜுவுக்கு இந்த தாபத்தின்வேகமும், குழந்தைகள் கன்னத்திலும் முதுகிலும் உள்ள தழும்புகளின் கோரமும் ஒன்றுகூடி அசாத்தியமான ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டன.

தடதடவென்று கௌஸல்யா படுத்துள்ளவிடுதிக்குவந்து மூடிமுக்காடிட்டுக்கொண்டு படுத்திருந்த அவளது கையைப் பிடித்துஇழுத்து...‘‘மூதேவி’ ராக்ஷஸப்பீடைக்கு கௌஸல்யாவாம்! ஸுப்ரஜாராமாவாம்! பேரைப்பாரு பேரை! துடைப்பக்கட்டைக்குப் பட்டுக்குச்சுகட்டியதுபோலிருக்கிறது! பிடாரி, ருத்ராதேவி, துராங்காரி என்று பெயர்வைத்தால்பொருந்தும். இப்படியா குழந்தைகளை அடிப்பது? குழந்தைகளின் முதுகையும் கன்னத்தையும் பாரு! கண் அவிந்துவிடவில்லை! கொட்டைகொட்டையாய் நல்ல ஆந்தையின் கண்ணைப்போல் இருக்கிறது. நன்றாகத்திறந்துபாரு! ஈவிரக்கமற்றகட்டை! துராங்காரப்பீடை!” என்று கூறியவாறு அவளை உலுக்கி முதுகில் நாலறை அறைந்தான்.

அவ்வளவுதான்! இனிமேல் வேறுவினையே வேண்டாம். வீட்டில் ஏதோ பெரிய யுத்தம் நடப்பதுபோன்றும் ஏதோ விபரீதம் நடந்துவிட்டதுபோன்றும் பெரிதாகக்கத்தி ஆகாத்யம் செய்து அழுதுகொண்டே தன் தாயாரிடம் ஓடி, லபோ

திபோ என்று அடித்துக்கொண்டு "உன் பிள்ளையழகைப்பாரு. என்னை அடித்துக் கொன்றுவிட்டான். இப்படி அடிபட்டுச் சாகவா நான் பிறந்தேன்! இப்படியா ஒரு படுபாவி செய்வான்! என்றால் பொறுக்கமுடியாது. அந்த நீலியும் இவனும் சேர்ந்து என்னைக் கொன்றுவிடவே பார்க்கிறார்கள். வசவச வென்று பத்துகுழந்தைகள் செய்யும் உபத்திரவத்தை யார் பொறுப்பார்கள்? நான் எங்காவது குளத்திலோ கிணற்றிலோ விழுந்து செத்தால்தான் இந்தப் பாவிகளின் மனது குளிரும் அம்மா! நான் போகிறேன்" என்றவாறு தலைகால்தெரியாது ஓடினாள்.

பெத்த பாசத்தின் போக்கே ஒரு அலாதி. அதிலும் கடைசீ காலத்தில் மிகச்செல்லமாய்ப்பிறந்து அதிக சலுகை காட்டி வளர்க்கும் பெண்ணின் நிலைமையைக் கூற வேண்டுமா! பெற்றவளுக்கு இந்த முரட்டுப் பெண் என்ன செய்துவிடுமோ என்று பயமும் கவலையும் உண்டாகிவிட்டன. "என்னமோ சிறிசு ரெண்டாங்கெட்டான்தனமாய் ஏதோ சொல்லிவிட்டதுஎன்று பேசாமல்போகாது, தன் குட்டிகளைத் தூக்கிக்கொண்டுபோய் கணவனிடம் கலகம் செய்வது என்ன சித்திராங்கித்தனமடீ! அவாவா பெத்த குழந்தைகளிடம்அப் படித்தானே பாசமிருக்கும்;குடியைக்கெடுக்கவாடீ பார்த்தாய்! ...ஐயோ! இந்த பெண் எங்கே போயிற்றோ தெரியவில்லையே" என்று மருமகளைத் திட்டியவாறு பெண்ணைச் சமாதானம் செய்ய பின்னாலேயே துரத்திக்கொண்டு ஓடினாள். இதற்குள் தகப்பனாரும் வந்துவிட்டார். வீடு படும் கலாட்டாவைக் கண்டு அவரும் தன் மகன் மருமகள்மீதே குற்றங்கண்டு வைதவாறு பின்னாலேயே ஓடினார்...

இச்சம்பவத்தின் பலன் வெகு விரைவிலேயே குடும்பத்தில் பிளவுகள் உண்டாகி மூத்தமகனும் மருமகளும் அதே ஊரில் தனிக்குடித்தனம் போனார்கள். இரண்டாவது மகன் மனைவியுடன் வேட்டகத்திற்கே போய்விட்டான். பெண்கள், ப்ரஸவித்தவள் உள்பட, மாமியார்வீடுகளுக்கு மனஸ்தாபத்துடன் போய்விட்டார்கள். இப்போது வீட்டில் கௌஸல்யாவும் அவள் பெற்றோருந்தான் என்றால் மிகையாகாது. மூன்றுவது பையனும் படிப்பு விஷயமாக ஹாஸ்டலில் சேர்ந்து படிக்க வெளியூர்போய்விட்டான்.

கலகலவென்று குழந்தையும்குட்டியுமாய் வீடுநிறைய மக்கள்மனிதர்களுடன் இருந்து வழக்கமாகிவிட்ட ருக்மிணியம்மாளுக்கும் கோபாலனுக்கும் வீட்டில் இருப்பேகொள்ளவில்லை. "பிடாரிக்குணம் படைத்த பெண்ணால் இப்படியும் விரோதமவருமா! வீடு வீடாகவா இருக்கிறது?காடுபோலிருக்கிறதே!" என்று சதாசலித்துக்கொண்டு கௌஸல்யாவிடத்தில் கோபிக்கவும் ஆரம்பித்தாள்.

ருக்மிணியம்மாவின் தமயன் பரமசிவம் அன்று தன் குடும்பத்துடன் வந்திறங்கினார். அவர்வருவது இவர்களுக்குத் தெரியாது. ருக்மிணியம்மாள் கோயிலுக்குப்போயிருந்தாள். கௌஸல்யா தாழ்வீட்டில் தன்சிநேகிதியுடன் கேரம் விளையாடிக்கொண்டிருந்தாள். இவர்கள்வந்திறங்கியதைப்பார்த்ததும் முகத்தைச்சுளித்துக்கொண்டு "பெருவெள்ளம் வந்துவிட்டதா! வசவசவென்று குழந்தைகளை இழுத்துக்கொண்டு இந்த அறுவத்திமூவர் குடும்பத்தை யார் வரச்சொல்லியது? இரண்டு நாள்கூட நிம்மதியாய் இருக்கவிடாது இதென்ன சனியன் பிடித்தஉறவுவேண்டிக்கிடக்கிறது! என்றுமுணுமுணுத்தாள்.

அதே சமயம் மாமாவின் குழந்தைகள் கேரம்போர்டையும் காய்களையும் காணாதுகண்டதுபோல் எடுத்து, மூலைக்கொன்றாக வீசிவிளையாடவாரம்பித்ததைக்கண்ட கௌஸல்யா வந்தவர்களை வாவென்று கூப்பிட பவிஷு இல்லாவிடினும் அந்தக் குழந்தைகளை தடார்புடார் என்று அறைந்து இழுத்துத் தள்ளிவிட்டுத் தன் காய்களையும் போர்டையும் எடுத்து உள்ளேவைத்தாள்.

வீட்டிற்குள் நுழையும்போதே அடியும்தடியும் குழந்தைகளின் அலறலும்கண்டு மாமி உண்மையில் நடுங்கி, குழந்தைகளை அணைத்துச் சமாதானம்செய்தவாறு "அம்மாஎங்கே கௌஸல்யா? வீட்டில் என்ன ஒருவரையும் காணவில்லை? எல்லோரும் எங்கே?" என்று மரியாதையாய் வணக்கத்துடன் கேட்டுமுடிப்பதற்குள் ருக்மிணியம்மாள் வந்துவிட்டாள்.

தான் சற்றும் எதிர்பாராதவிதமாய் தன் தமயன் குடும்பத்துடன் வந்திருப்பதைக்கண்டு அளப்பரிய சந்தோஷத்துடன் "வாருங்கள்! வாருங்கள்...அண்ணா! ஏது இப்படி குடும்பத்துடன் ஆச்சரியமாய் வந்தது! ஏன் இவர்கள் அழுகிறார்கள் மன்னீ!" என்று அடுக்கடுக்காய்க்கேட்டவாறு, ஒரு குழந்தையைத் தான்எடுத்துச் சமாதானம் செய்தாள்.

பரமசிவன் "திடீரென்று திருப்பதிக்குப்போகும் ப்ரயாணம் நிச்சயமாகிவிட்டது. அதனால் கடிதம் எழுதித் தெரிவிக்கவும் நேரமில்லை. நம்மதங்கைவீடுதானே என்று குடும்பத்துடன் வந்துவிட்டோம். வீட்டிலென்னவோ ஒருவரையும் காணவில்லை! கௌஸல்யா பேசவேமாட்டேன்என்கிறாள். முகத்தாலடித்து முணுமுணுக்கிறாள். குழந்தைகளை வந்ததும் வராததுமாய் தடார்புடார் என்று அடித்துவிட்டாள். அதனால்தான் அவர்கள் அழுகிறார்கள். கௌஸல்யாவுக்கு என்ன உடம்பு? பார்த்தால் ஏதோ மூளைக்கலக்கக்காரர்கள் நடந்துகொள்வதுபோல் நடக்கிறாளே, இதென்ன காரணம்?...ஏன் ருக்மிணி! உடம்பு ஒன்றுமில்லையே? அவளைப்பார்க்கும்போது ஏதோமாதிரி இருக்கிறதே!' என்று மிகவும் அங்கலாய்ப்புடன் கேட்டார்.

அதேசமயம் சங்கரியும் "ஆமாம் அக்கா! எங்களைப் பார்த்தவுடனே 'அறுவத்திமூவர்போல் வந்துவிட்டார்கள். சனியன் இரண்டுநாள்கூட நிம்மதியா இருக்கமுடியவில்லே.'... என்று ஏதேதோ திட்டியதோடு குழந்தைகளையும் அடித்த தனால் நானும் சந்தேகப்படுகிறேன்" என்றாள்.

ருக்:—ஐயோ கண்ராவியே! அதுவேறுஒன்றுவேண்டுமா! கடைசிகாலத்தில் இந்தப் பெண்ணைக்கொடுத்து பகவான் என்னை சோதிக்கிறான்; ஆள்கண்டபிடாரி என்று ஏதோ ஒரு தேவதைக்குச் சொல்வார்கள். அதுவே ப்ரத்யக்ஷமாக எனக்கு வந்திருக்கிறது.

பரம:-ஏன்! என்ன பண்ணுகிறாள்? அத்திம்பேரும் நீயும் இந்தக்குழந்தையை ஆதிமுதல் செல்லம் கொடுத்துத் தலைக்கு மேல் ஏற்றிக்கொண்டு விளையாடி இவளைக் குட்டிச்சவராக்கி விடுகிறீர்களே என்று நான் நினைத்தேன்; அது சரியாகிவிட் டது...அப்புறம்...

ருக்:—ஆமாம் அண்ணா! நீ ப்ரமாதமாய் குற்றங்கண்டு பிடித்திருக்கிறாய்! ஏதோ சொர்ணப்பதுமைபோல் குழந்தை அழகாயிருப்பதால் அதைக்கண்டு சற்று கொஞ்சுகிறோம். இம்மாதிரி குணமெல்லாம் பிறவிக்குணமாகவன்றோவருகிறது.

பரம:—ருக்மிணி! அப்படிச்சொல்லாதே! நாம் வளர்க்கும் முறையில் சில நற்குணமும் தீக்குணமாகிவிடுகிறது. துர்க் குணமும் நற்குணமாகிவிடுகிறது. ஏன்? நம்ம சித்தப்பாவின் பெண்ணை அவர்கள் வளர்த்தமாதிரி உனக்கு மறந்துவிட்டதா? அந்தப்பெண் எந்தசமயம் எதைவேண்டுமென்றுகேட்கிறதோ, அதை வாங்கிக்கொடுத்தும் அது எந்தசமயம் எங்குபோக வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறதோ அப்படியே நடத்தி யும் அவளுடையதிமிரை அதிகமாக்கிவிடவில்லையா? அது மட்டுமா! வீட்டில் திவசம் நடக்கும் நாளில் திவசம்ஆவதற்குள் அந்த பக்ஷணங்களைக் கொடுத்துத் தானாக வேண்டுமென்ற போது அவ அம்மா, திவசத்தையும் லக்ஷியம் செய்யாமல் பாப புண்ணியத்திற்கும் கட்டுப்படாமல் பக்ஷணத்தைக்கொடுத்து அதன் பிடிவாதத்தை வளர்த்தாளே அதைக்கண்டு நீ எம்மாத் திரம் தூஷித்தாய்? இப்போது உனக்கே அந்த செல்லம் வந்துவிட்டதா?

சங்கரி:—ஏன் அக்கா! வீட்டில் ஒருவரையும்காணுமே? எங்கே?...

ருக்:—நான் என்ன சொல்லுவேன் போ...இந்த முரட்டுப் பெண்ணினால் நான்படும் துன்பம் சொல்லிமுடியாது. நீங்கள் வந்ததும்வாராததுமாயிருக்கையில் உங்கள்குழந்தைகளை அடித் தாள் என்று சொல்லவில்லையா! இப்படித்தான் தினம் வீட்டில் குழந்தைகளை இம்ஸித்து வந்தால் யார் பொறுப்பார்கள். பெண்கள் புக்ககம் போய்விட்டார்கள். பெரியவன் தனிக்

குடித்தனம் போய்விட்டான். சின்னவன் மாமியார் வீட்டுடன்போய்விட்டான்.

பரம:—பேஷ்! பேஷ்! வெகுலக்ஷணமாயிருக்கிறது விஷயம். சில பணக்காரர்கள்வீட்டில் பெற்ருேர்கள் ஒரு குடும்பம், பிள்ளைகள் தனித்தனியே வேறுகுடும்பம்என்று நடத்துகிருர்களே அதுபோல் உன்குடும்பத்திற்கும் வந்துவிட்டதா? சரிதான். இனி நீ உன் பெண்களுக்குக் கல்யாணம் செய்யும்போது உன்மகனையும், மருமகளையும் "என் பெண்ணுக்குக் கல்யாணம். வாருங்கள்" என்று நீ அழைக்கவேண்டும். அவன் குழந்தைகளுக்குக் கல்யாணம் வந்தால்"அம்மா...என் குழந்தைக்குக் கல்யாணம் வாருங்கள்" என்று உங்களை அவன் கூப்பிடவேண்டும். பேஷ்! வெகுஅழகுதான்...ருக்மிணீ இந்தமாதிரி பிரிவினைகள் நம் குடும்பத்தில் இதுவரையில் இருந்ததே இல்லை. இதென்ன வேடிக்கை? இப்படியா குடும்பமே சிதறிப்பிரியும்படியாக இந்தப்பெண்ணை வளர்ப்பது? உண்மையில் இந்தப்பெண்ணுக்கு ஏதோ மூளைக்கோளாறுதான் இருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் புத்திதெரிந்த பெண் பிறரை உபத்திரவிக்குமா! அப்படி உண்மையில் இத்தகைய பிடிவாதமும் துர்க்குணமும் துராங்காரமும் இருக்குமானுல் அதை உடனே வேருடன் அறுத்தெரியவெண்டும். பெண்குழந்தைக்கு வேண்டிய அடக்கஒடுக்கம் பணிவு முதலிய உயர்ந்த குணங்கள் வேண்டாமா? இப்படிஇருந்தால் இவளை யார் கட்டுவார்கள்? இதோபாரு ருக்மிணீ! நான் திருப்பதிக்குப் போய்வந்து திரும்பிப்போகும்போது என்னுடன் இவளை அனுப்பிவிடு. ஆறுமாதகாலம் நான் வைத்துதிருத்திப்பார்க்கிறேன். அதிலும் அடங்காவிட்டால் பார்த்துக்கொள்வது.

சங்க:—ஏன்? வயதென்னவோ ஆகிறது. நல்லவரனைப் பார்த்து உடனேவிவாகத்தைச்செய்துவிட்டால் என்ன? அந்த காலத்தைப்போல் கல்யாணமாகிவிட்ட தென்றுல் எல்லாம் சரியாகிவிடுமெல்லவா...

ருக்:—உம். அவளுக்கா! இப்போது கல்யாணமா! சரிதான். அதோடுகாரியம் சகலமும் கெட்டுவிடும். ஏதோ! க்ரகசாரந்தான் இந்தப்பெண் இப்படிப் பிறந்திருக்கிறது. எல்லாம் அனுபவிக்கிறேன்...சரி! சரி! நீங்கள் ஆகாரம் எடுத்துக்கொண்டு வாருங்கள்...

பரம:—ருக்மிணீ! அதற்கென்ன பிறகுஆகட்டும். எனக்குத்தெரிந்த பெரியடாக்டர் ஒருவர் இருக்கிருர். அவரிடம் இவளைக்காட்டவேண்டும்என்று தோன்றுகிறது. அத்திம்பேர் வரட்டும். அவரிடம் கேட்டுச்செய்கிறேன்....என்று இவர்கள் முன்கட்டுக் கூடத்தில் பேசிக்கொண்டிருக்கையில் கௌஸல்யாஉள்ளிருந்து..."அம்மா! இதென்ன சந்தைக்கடைபோல் சளசளவென்று இரைச்சல் சகிக்கமுடியவில்லையே...

நான் எங்காவது துலைந்துபோகிறேன்'' என்று பெரிதாகச் சத்தமிட்டுக் கத்தினாள்.

ருக்:—கௌஸல்யா! இதோபாரு. மாமா, மாமி எல்லோரும் வந்திருக்கிறார்கள். வந்தவர்களை விசாரிக்காமல் இதென்ன தனிமை வேண்டிக்கிடக்கு. இங்குவா...என்று கூப்பிட்டாள். பதிலேஇல்லை. இழுத்துபோர்த்துக்கொண்டு படுத்திருப்பதைப்பார்த்த ருக்மிணியம்மாளுக்கு மனது கலங்கியது. "தமயன் சொல்லியதுபோல் ஏதாவது மூளைக்கோளாறுதான் இருக்குமோ! அப்படியிருக்குமானால் சரியானப்ரபல வயித்தியரிடம் காட்டிக் குணப்படுத்தவேண்டுமே என்னசெய்வது? என்கிறகவலை திடீரென்று அதிகரித்துவிட்டது.

3

காளிகாதேவியின் கேலிக்கூத்து

மாமா வீட்டுக்குடும்பம் திருப்பதிக்குப்போய் வந்தது. சனிக்கிழமையன்றுஏழுமலையானுக்குமாவுவிளக்கேற்றி தொழுது சந்தர்ப்பணம் செய்யபூஜையும் பஜனையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிகாலையில் பரமசிவன் குழந்தைகளை ஸ்நானம்செய்வித்து மடியாய் உட்காரவைத்து பஜனைநாமாவளியைச் சொல்லிக்கொடுத்து பஜனைசெய்ய வாரம்பித்தார்.

கபடமறியாத பச்சிளங்குழந்தைகள் மிகவும் உத்ஸாகத்துடன் கைகொட்டித் தாளம்போட்டவாறு நாமாவளிகள் பாடி ஆனந்தப்படுவதைக் கண்ட ருக்மிணியம்மாளுக்குத் தன் பேரன் பேத்திகளின்மீது எண்ணம் தாவியது. ஏக காலத்தில் இந்தக் குழந்தைகளின் இனிய குரலின் ஓசை ஒரே ஸ்தாயியில் ஜம்மென்று நாத அலையை எழுப்பிக் கேட்போர் மனத்தில் புலகாங்கிதத்தை யுண்டாக்கி மயிர்க்கூச்செறியச் செய்தது. பக்தியோ ஞானமோ இல்லாத நாஸ்திகர்களைக் கூட சில சமயம் இந்த நாதத்தின் வசீகர சக்தி சற்றுவது ஆட்டியேவிடும் என்றால் மற்றவற்றைக் கேட்கவேண்டுமா?

பரமசிவமும் சங்கரியும் மெய்மறந்து நின்றார்கள். சமாராதனைக்கும் பூஜைக்கும் அழைத்திருந்தவர்களில் சிலர் அதிகாலையிலேயே வந்தார்கள். ஏழுமலையானுக்கு ஏற்றியுள்ள மாவு திருவிளக்கு ஜகஜ்ஜோதியாய் சுடர்விட்டு ப்ரகாசித்து இந்த பஜனாம்ருதத்தைப் பருகிச் சிரக்கம்பம் செய்து தானும் குதித்து ஆடும் அத்புத சேஷ்டிதங்களைப் பிறருக்கு சூசிகையாய்க் காட்டுவதுபோல் கொழுந்துவிட்டு எரிந்து இப்படியும் அப்படியும் ஆடி அங்குல உயரம் உயர்ந்து

காட்சியளிப்பதைக் கண்ட பெரியவர்கள் தம்மை மறந்து "கோவிந்தா! கோவிந்தா! என்னப்பனே! என் மலையானே! கோவிந்தா... அலர்மேல்மங்காபதே!"...என்று வாய்விட்டுக் கூறிப் பரவசமுற்றார்கள்.

எந்த சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் ஆனந்தத்தையே அனர்த்தமாகவும் இனிய நாதத்தையே பேய்க்கூச்சலாகவும் வெறும் கூத்தடிப்பாகவும் ரஸாபாஸமான முறையில் எண்ணி வெறுத்து அதைப்பற்றித் தம் அபிப்ராயத்தையே ப்ரமாதமாய்ப் பிறரிடத்தில் பேசி ப்ரசாரம் செய்யும் புண்யாத்துமாக்களும் உலகில் இல்லாமலில்லை. அம்மாதிரியொருவராவது இருந்து உத்க்ருஷ்டமான காரியத்தை தூஷித்து வெறுத்துத்திட்டி விரோதத்தைத் தாமே கிளப்பித் தாண்டவமாடினால்தான் அந்த உத்தமமான காரியம் தானாகவே இன்னும் உரமடைவதோடு இத்தனைநேரம் மெய்மறந்து ஆனந்தத்திலீடுபட்டிருந்தவர்களுடைய மனத்தில் பக்தியும்ஆனந்தமும் இன்னும் ஆழமாகப் பதியவைத்துப் பலத்தைக் கொடுக்கும். இதுதான் உலகத்தில் பல இடங்களில் பல செய்கைகளில் காணும் ப்ரத்யக்ஷ உண்மை.

இத்தகைய குதூகலத்தைஎழுப்பி எங்கும் "கோவிந்தா! கோவிந்தா!" என்கிற நாமதாரகத்தின் சப்தம் பரவி எல்லோரும் மகிழும்சமயம் உள்ளே தூங்கும் கௌஸல்யா ஆத்திரமும் கோபமுமடைந்து இதே ஆனந்தத்தை பெருந்துன்பத்தைக்கொடுக்கும் பேய்க்கூச்சலாக எண்ணினாள். மூதேவியின் ப்ரஸாதமான தூக்கத்திலிருக்கும் அபாரமான இன்பத்தைக் கலைத்துவிட்ட ஆக்ரோஷத்தில் இப்படி அப்படி புரண்டு படுத்துப்பார்த்தாள். பெரியவர்களும் சேர்ந்து கோவிந்தா என்று கத்தும் குரல் கேட்டதும் அவளுடைய நிபரயபான எண்ணத்தில் இந்த மகத்தானபஜனை பெருங்குற்றமாகத் தோன்றி, முக்கண்மூர்த்தியைப்போல் கண்கள் சிவக்க எழுந்து கதவுகளை தடார்புடார் என்று அறைந்து திறந்தவாறு தூங்கிஎழுந்த சுப்ரதீப அலங்காரத்துடன் இந்த கூட்டத்திற்கு வெறிபிடித்த காளைமாடு ஓடிவருவதுபோல் வந்தாள்.

தூரவிருந்து இதைப்பார்த்த ருக்மிணியம்மாளின் குடல் நடுங்கியது. தான் ஸ்நானம்செய்து மடியாகஇருப்பதையும் மறந்து இவளை இப்படியே மடக்கி அழைத்துக் கொண்டுபோய்விடவேண்டுமென்கிற எண்ணத்துடன் எதிர்கொண்டோடிவருவதற்குள், கௌஸல்யாகூடத்திற்கு ஓட்டமாக வருவதைக்கண்ட குழந்தைகள் ஏற்கெனவே இந்த மகாதேவியிடம் ஊரிலிருந்துவந்த நிமிஷம்முதல் அடிபட்டு விஷயமறிந்திருப்பதால், நாமாவளிபாடும் ஆனந்த உணர்ச்சி ஒரேக்ஷணத்தில் மறைந்துபோய் "அம்மா......அப்பா....அத்தை...... ஐயையோ! அத்தங்கா அடிக்கவருகிறாளே" என்று கத்திக்

கொண்டு எழுந்துவந்து அலறும் பஜனையிலீடுபட்டுவிட்டன. கௌஸல்யா கோபத்துடன் "இதென்ன! வீடா அல்லது சாமியார்மடமா? வீடே இடிந்துவிடும்படி என்ன பாட்டும் கூத்தும் பஜனையும் வேண்டிக்கிடக்கு! இதற்காகத்தான் இவர்கள் ஊரிலிருந்து இங்குவந்தார்களா அம்மா!"...என்று ஏதோ சொல்ல ஆரம்பிப்பதற்குள் இவளை ருக்மிணியம்மாள் கட்டிப்பிடித்து உள்ளே அழைத்துச்சென்று...கௌஸல்யா! உனக்கு என்றுதான் புத்திவரப்போகின்றதோ? உன்னால் வீடு

தற்போது வெறும் காடாகக்கிடக்கிறது. இவர்களாலாவது சற்றுகலகலப்பாயும் ஆனந்தமாயும் இருக்கிறதே என்று நான் பூரிக்கிறேன். அதையும் நீ நாசமாக்குவதோடு பகவத் அபசாரத்தையும்செய்கிருயே? உன்னிடம்எத்தனை தரந்தான் நான் முட்டிக்கொள்வது ? நீஎன்ன சின்னக்குழந்தையா!... கௌஸல்யா! நான் சொல்வதைக்கேளு. நீயும்போய் குளித்து விட்டு இன்றைய வைபவத்தில் கலந்துகொள்ளம்மா...நீ இப்படி தூர்வாஸா என்று பெயர் வாங்கினல் என்வயிற்றில் சங்கடம் செய்கிறது. நீ வளரும்பயிர். உன்னை உலகத்தார் மதித்து நல்லபெண் என்று கொண்டாடும்படியாக நடந்து கொள்ளம்மா! ...துர்த்தேவதை...ஆத்திரப்பிசாசு...மூர்க்க குணப்பீடை...என்று உன் உடன்பிறந்தவர்களே சொல்லி மனக்கலக்கம் அடையும்படி நீ செய்தது போதும். இனியாவது நியாயமான வழியில் திருந்தி உன்னை நீயே சரிப்படுத்திக் கொள்ளம்மா!...என்று இவள் சொல்லும் உபதேசம் அவள் காதில்விழாமல், சில முரட்டுப்பெண்கள் தன் நியாயத்திற்கே தான் தொண்டை கிழியக்கத்துவதும் ராக்ஷஸியைப்போல் அழுது ஆகாத்யம் செய்வதும் சுபாவம்போல்,கௌஸல்யாவும் தாயாரின் வார்த்தையைக் காதில் வாங்காமல் தாம் தூம் என்று கத்திக்குதித்து எல்லோரையும் திட்டிவிட்டு பல்கூடத் தேய்க்காமல் தடதடவென்று வெளியேபோய்விட்டாள்.

"பேயிக்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில்தானே ஏறவேண்டும்" என்பது பழமொழி. அதுபோல் பேய்க்குண முடைய பெண்ணைப்பெற்றதுடன் இல்லாமல் விபரீதமுறையில் செல்லங்கொடுத்து வளர்த்துவிட்டதன் பரிபவம்ருக்மிணியைப்பிடித்தாட்டுகிறது. "முரட்டுப்பீடை எங்காவது குளத்தில் கிணற்றில் விழுந்துவிடுமோ!" என்றபயத்தினல் அலறிக் கொண்டு ஓடினாள். நாத்தனர் ஓடுவதால் கூடவே சங்கரியும் ஓடினாள். இவர்களுக்குப்பின்னல் பரமசிவனும் கோபாலும் ஓடினர்கள்.

"அடடா! ஆனந்தமாய் உள்ளம்உருகி மெய்மறந்து பூரித்துக்கொண்டிருந்த பஜனைக்கூட்டம்ஒரேஅமர்க்களமாகி சளசள வளவள என்ற வெறும் வெட்டிப்பேச்சுடன் யார் யாருக்கு என்னென்ன தோன்றுகிறதோ அம்முறையில் ப்ரசார சம்பாஷணைகளும் உண்டாகிவிட்டன...

"அவர்கள் வீட்டுப்பெண்ணுக்கு அப்படியிருந்தது. கடைசீயில் மந்திரவாதி பிசாசு என்று மந்திரம் செய்து விரட்டின பிறகு சரியாயிற்று...இவர்கள் வீட்டுப் பிள்ளைக்கு இப்படி இருந்தது. தகுந்த மூலிகைமருந்துகள் கொடுத்ததில் குணமாகியது...இன்னொருவீட்டுப் பெண் தான் பெரிய உத்யோகஸ்தன் மகள் என்கிற கர்வத்தில் தலைதுள்ளியது. அதற்கு விவாகத்தைச் செய்துகொடுத்து இரண்டுகுழந்தைகளைப் பெற்றபிறகு தானாக அடங்கிவிட்டது...மற்ரெரு

வீட்டுப் பெண்ணுக்கு இதேமாதிரி செல்லங்கொடுத்து வளர்த்து தலைக்கேறவிட்டுக்கொண்டார்கள். அதுயாருக்கும் அடங்காமல்ருத்ரகாளியைப்போல் படாதபாடு படுத்திஇம்ஸித்து வந்தது. யார் என்ன புத்திமதிசொல்லியும் கேட்காமல் வெகு விபரீதமாகப் போய்விட்டதால் அதன் தாயார் அந்தக் கொடுமையைச் சகிக்காது விஷத்தைத் தின்று இறந்துவிட்டாள். அந்தப் பிடாரிப் பெண்ணின் மடியிலேயே தாயின் ப்ராணன் பறந்துபோயிற்று. இத்தகைய ஒரு அதிர்ச்சி உண்டாகியவுடனே ஒருவருமே கனவிலும் நினையாதவிதம் குணம்மாறிப் பிறகு குடும்பத்தையே அவள் நிர்வகித்து இப்போது நான்கு குழந்தைக்குத் தாயாகியும் இருக்கிறாள்.

செல்லம் கொடுப்பதிலும் ஒரு கட்டும் வரம்பும் வேண்டாமா? இப்படியா கொடுப்பது? இவர்களுக்குமட்டும் இவள் ஓரே பெண்ணு? இத்தனை குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு இந்த பெண் என்ன உசத்தி? கடைக்குட்டி என்றால் இன்னும் சற்று குலாவுவதுதானே. மிஞ்சினால் நிறைய ஆடை ஆபரணங்கள் போடுவதுதானே "வயிற்றில் வாழையைப் புதைப்பது" தானே...இவைகளைவிட்டுப் போகிற வழியே விட்டு இம்மாதிரி பத்திரகாளி தேவதைபோல் செய்தது பெற்றோர்களின் குற்றமல்லவா? நன்றாக அனுபவித்துத் தான் தீரவேண்டும்.

இவைகளை எல்லாம் தெரிந்துதான் பெரியவர்கள் மக்களை எம்மாதிரி வளர்க்கவேண்டும், அதிலும் பெண்மக்களை எப்படிப் பழக்கவேண்டும் என்று ஒரு வரையறுத்துத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஆனால் இப்படியா ஒரு பெண்ணை வளர்ப்பது? அப்பப்ப! பார்ப்பதற்கே பிசாசுபோல் தோன்றுகிறதே!" என்று சத்விஷயமான பஜனைநடந்த இடத்தில் உபயோகமற்ற இந்த வார்த்தைகளைக் கொட்டியளக்கத் தொடங்கினார்கள். ஆனந்தமெல்லாம் எகிறிப்போய் குழப்பமும் கலவரமும் எப்படியோ புகுந்து விகார உணர்ச்சியையே கொடுத்தது.

4

அபூர்வநேசியும் அதிசய விஷயமும்.

"ஒருவர்பின் ஒருவராக வீதியில் ஓடுவதைக்கண்ட அக்கம்பக்கம் இந்தப் பெண்ணின் குணம் தெரிந்தவர்கள் வேடிக்கைபார்த்துச் சிரித்தார்கள். எப்படியோ சமாதானம்செய்து பெண்ணை அழைத்துக்கொண்டு வந்தார்கள். ஒருவிதமாகச் சமாராதனை உத்ஸவம் முடிந்தது.

சங்கரி:—அக்கா! நீங்கள் கண்ணீர் விடுவதால் என் மனம் கலங்குகிறது. இந்தப் பெண்ணைப் பார்த்தால் கட்டாயம் காத்து கரப்பு சேஷ்டையைப்போல்தான் தோன்றுகிறது. ஏனெனில் காத்துகரப்பு இருந்தால்தான் பகவத்விஷயமாய் எதைப்பார்த்தாலும்சரி, சத்விஷயமாய் எதைக்கேட்டாலும் சரி, இப்படி ஆவேசம் வரும். தலைகால் தெரியாமல் குதிப் பார்கள். என் சித்தியின் விஷயத்தில் நான் இதை ப்ரத்யக்ஷ மாகப் பார்த்திருக்கிறேன். நீங்கள் இவளை அழைத்துக் கொண்டு என்னுடன் வாருங்கள். மந்திரக்காரன் மிகத்தேர்ந் தவன் எங்கள்ஊரில்இருக்கிறான். அவனிடம்ரக்ஷைகட்டினால் சரியாகிவிடும். பயப்படாதீர்கள். நாளைமத்தியானம் போகி றோம். கூடவே வாருங்கள் இம்மாதிரி நிலைமையைவளர்க்கக் கூடாது. வயதுவந்தபெண்ணாகையால் உடனே நாம் இதற் கோர் ஏற்பாடு செய்யவேண்டும்.

பரம:—அக்கா! எனக்கென்னதோன்றுகிறதுதெரியுமா! சரியானவரனைத்தேடி விவாகத்தைச்செய்து புக்ககத்திற்கு அனுப்பிவிட்டால் பெண்களுக்குள்ள இயற்கையான அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு முதலியகுணங்கள் உணர்ச்சி பெற்றுப் பொறுப்பறியச்செய்யும்.செல்லங்கொடுக்காத பிறரிடம்அவள் வாஸம் செய்தால் அதனால் கட்டாயம் சற்றுதிருந்துவாள் என்று தோன்றுகிறது. அதற்கு ஏற்பாடுசெய்யலாம்...

ருக்:—என்னமோப்பா! அகாலத்தில் பிறந்து என் மானத்தை வாங்குகிறது. மூத்தபசங்களுக்கே பிடிக்கவில்லை. அவரவர்கள் ஓடிவிட்டார்கள் என்றால் திடீரென்றுபோகும் புக்ககத்தினரிடம் சண்டையும்சச்சரவும் விபரீதமாகிவிட்டால் பிறகு அந்த வடுவை...கரும்புள்ளியை, மாற்றவே முடியாமல் என்னுயிருக்கும் அவதிப்படநேர்ந்துவிட்டால் என்னசெய்வது என்று நினைக்கும்போதே பயமாயிருக்கிறது. எந்த ஒரு அநர்த்தகுணமும் நம்முடன்மட்டும் தெரிந்திருப்பதுபோதும்! பிறர் அறிவானேன்என்று பார்க்கிறேன்.

சங்கரி:—அக்கா! நீங்கள் அப்படி நினைக்கவேண்டாம். என்னுடைய மூத்ததமயனின் மகன் ராஜாவடிவாய் வெகு புத்திசாலியாயிருக்கிறான். ஆனால், அவனும் பக்காமுரடன்; வீட்டில் அடங்குவதே இல்லை. என் மன்னிமிகவும் வருத்தப் படுகிறாள். அந்தப் பையனுக்கு இவளை எப்படியாவது மணத்தைச்செய்துவிட்டால்...

ருக்:—போதுமேம்மா! ஒரு முரட்டுடன் இன்னொருமுரட் டைக் கட்டுவது இரட்டைமாட்டுவண்டிக்காரனின் கதியாகி விட்டால் என்னசெய்வது? அதோடு, உன்பெரியமன்னி ஒரு மாதிரிசுபாவம் உடையவள். பிறரைப்பற்றிவம்புபேசுவதிலும் குற்றங்கண்டுபிடித்து த்வேஷத்தைஉண்டாக்குவதிலும் கல கம் செய்து ஒருவரையொருவர் பிரித்துவைப்பதிலும் மிக்க ருசியுள்ளவளாயிற்றே! அதனால்தானே அவளுடைய பெண்ணை

நம்ம ராமுவுக்குக் கொடுப்பதாகச் சொல்லியபோது நான் வேண்டாம் என்று தடுத்தேன். இன்று ஒருவர் வேண்டியவர்களாகஇருப்பார். நாளையே அவர்களைத் தூற்றித்தெருவில் இழுத்துவிடும் புண்ணியவதியாயிற்றே. அப்பப்பா!...அந்த மகராஜியின் சம்மந்தம் எனக்கு வேண்டவே வேண்டாம்... எனக்கென்ன தோன்றுகிறதென்றால் இவளுக்கு விவாகத்தைச் செய்துவைத்துத் துன்பப்படுவதைவிட தனக்குஎப்போது இஷ்டமோ அவளேசொல்லட்டும். அப்போது நல்லவரனைத் தேடிச்செய்யலாம்...

பரம:—அக்கா! நீ என்ன எண்ணத்துடன் பேசுகிறாய்? சிலபேர் கண்ணைமூடிக்கொண்டுவயதைவளர்த்திவிட்டுப்பிறகு வரனுக்காக அலைகிறார்களே! அது மறந்துவிட்டதா! நீ பேசாமலிரு அக்கா! இந்தப்பெண்ணால் நம்குடும்ப கண்ணியமே குலைந்துபோய்விடும்போலிருக்கிறது. இதற்கு ஏதாவது வழிசெய்தால்தான் தேவலை.

ருக்:—ஏதோப்பா! எனக்கு மனநிம்மதியைஒழிப்பதற்கே இந்தப் பெண்பிறந்திருக்கிறது.ஏதாவதுநல்லவரனைப்பார்த்து ஏற்பாடுசெய். ரக்ஷாமந்திரம் என்கிறீர்களே அதையும் பார்த்துவிடலாம்—என்று ஒருவாறு தீர்மானித்தார்கள்.

கௌஸல்யா வீட்டில்இந்தநிலைமையில் இருக்கிறாளே; பள்ளிக்கூடத்தில் எப்படிஇருப்பாளோ!—என்று மாமன்மாமிக்கு அதையறிய ஒருஆசை தூண்டியது. கௌஸல்யாவுக்குத் தெரியாமல் அவள்படிக்கும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று விசாரித்தார்கள்.

அங்கு வகுப்புமாணவிகளுடன் சேருவதேகிடையாதென்றும்,தன்பாடம் உண்டு,தான் உண்டுஎன்று இருப்பதும், வகுப்பில் ஒன்றும் நடக்காதபோது ஒரு மரத்தடியில் தன்னந்தனியாய் உட்கார்ந்திருப்பதாயும், வகுப்பில் உபாத்தியாயினி சில முக்கியவிஷயங்களை ப்ரஸங்கம் செய்தால் அதைக்கூடக் கேட்காமல் போய்விடுவாள் என்றும்,உபாத்தியாயினி கண்டித்துஉட்காரும்படி சொல்கிறபோதுவிளக்கெண்ணெய்குடிப்பதுபோல் உட்கார்ந்திருப்பதாயும்,வகுப்புமாணவிகள் வலுவில் பேசவந்தால் உடனே சண்டையில்முடிந்து தலைமைஉபாத்தியாயினிவரையில் போய்விடும் என்றும் விஷயங்கள் தெரிந்தன. பள்ளிக்கூடத்தின்மூலமாயும் இவளுடைய மூர்க்கத்தனத்தை மாற்ற ஒன்றும் வழிதெரியவில்லை.

அவர்கள் ஊருக்குப்போய்விட்டார்கள். ருக்மிணியம்மாள் தமயன் சொல்லியதுபோல் வரன்வேட்டையாடத் தொடங்கினாள். என்னவேடிக்கை! எந்த வரன் வந்தாலும் "இந்தப் பிடாரிப்பெண்ணா? அது எங்களுக்குவேண்டாம். இந்த மூர்க்கதேவதையை மணம்செய்வித்து அவஸ்தைப்

படிவதைவிட ப்ரம்மசாரியாய் எங்கள் பிள்ளை இருக்கட்டும்" என்றுசிலர் பகிரங்கமாகவே சொல்லிவிட்டார்கள்.

வீடுமட்டுமிருந்த கௌஸல்யாவின் ப்ரபாவம் இப்போது ஊர்முற்றும் பரவிவிட்டது. இப்படியே பின்னும் இரண்டு மூன்றுவருடங்கள்கழிந்துவிட்டன. கௌஸல்யாவும் S.S.L.C. பாஸ்செய்துவிட்டாள். பிறகுமேலே என்னசெய்வதென்று யோசனைபிறந்துவிட்டது. இத்தனை வைபவத்திலும் கௌஸல்யாவுக்கு ஒரேஒரு சினேகிதை அபூர்வமாகஇருந்தாள் அவளும் இவளுடன் பாஸ்செய்தாள். பெற்றோர்களை வடக்கேவெகுதூரத்தில் மாற்றிவிட்டதால் அவர்கள் அங்கு போய்விட்டார்கள். இவளுடையசினேகிதை விமலாமட்டும் உறவினர்வீட்டிலிருந்துபடித்துமுடித்தபிறகு ஊருக்குக்கிளம்பினாள். சொல்லிக்கொண்டு போவதற்காக கௌஸல்யா வீட்டிற்கு வந்தாள்.

அவளைப் பார்த்த ருக்மிணிக்கே ஆச்சரியம் தாங்கமுடியாதுபோய்விட்டது. கௌஸல்யாவைத் தேடிக்கொண்டுகூட ஒரு சினேகிதை வந்திருக்கிறாள் என்றால், உண்மையில் அதை அவளால் நம்பவே முடியவில்லை. "வாம்மா!...உட்காரு. கௌஸல்யா தூங்குகிறாள்; எழுப்புகிறேன் இரு" என்றாள்.

விமலா:—எழுப்பவேண்டாம் மாமீ! நான் பிறகு வருகிறேன்.

ருக்:—கௌஸல்யாவுக்குக்கூட ஒருதோழிஇருப்பதைநான் இன்றுதான் காண்கிறேன். எனக்கு ஏதோ புதையல்கிடைத்த மாதிரி சந்தோஷமாயிருக்கிறது. கௌஸல்யாவின் குணம்...

விம:—ஏன்மாமீ! அவள் குணத்திற்கென்ன? சற்று முன் கோபி; எதையும் பொறுக்கமாட்டாள். எந்த இரைச்சலோ, கூட்டமோ ஒன்றுமே அவளுக்குப் பிடிப்பதில்லை. எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பெரிய டாக்டர் மாதம் ஒருமுறை வந்து எங்களை எல்லாம் பார்க்கிறார். அவர் கௌஸல்யாவைப் பார்ப்பதற்குமுன் எங்கள் உபாத்தியாயினி அவளுடைய குணத்தைப்பற்றி நன்றாகச் சொன்னார்கள். பிறகு டாக்டர் பரீக்ஷித்துப்பார்த்தார். அவருக்குச் சரியாகவே கௌஸல்யா பதில் சொல்லமாட்டேன் என்று மறுத்தாள். டாக்டர் வெகு கெட்டிக்காரர்; நயமாய் தமாஷ் செய்தபடியே கேள்விகளுக்குப் பதில்பெற்றுவிட்டார். உபாத்தியாயினியிடம் தனிமையில்சொன்னாராம்...உலகத்தில் நூற்றுக்கொருவர்கூட தேருவது கஷ்டம் இம்மாதிரி ஒரு பிறவி... இவளுடைய மூளைக்குப்பக்கத்தில் ஒரு தனிநரம்பு சிறு குழந்தைமுதல் வளர்ந்துவருகிறது. அது வெகு மூர்க்க குணத்தையும் பிடிவாதத்தையும்கொடுத்து புரட்டு மனிதர்களாகவே செய்துவிடும். இந்த நரம்புக்கு எப்படி சிகிச்சை செய்வது என்பதைப்பற்றி மேல்நாடுகளில் ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இலேசாக தலையில் ஆபரேஷன்

செய்து இந்நரம்பை நறுக்கிவிட்டால் இவர்களைப்போன்ற குணவான்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். மகா மேதைகளாய் இருப்பார்கள். அதுபோல் இவளுக்குச் சிறு நரம்பு இப்போதுதான் வளருகிறது. பயப்படாமல் அதை ஆபரேஷன் செய்துவிட்டால் மிகவும் நன்றாகஆகிவிடுவாள்... என்றாராம். கௌஸல்யாவின் விஷயத்தில் தானே ப்ரத்யேக மாய் கவனிப்பதாகவும் சொன்னாராம். இதெல்லாம் அவளுக்கு ஒன்றுமே தெரியாது; நீங்களும் சொல்லவேண்டாம் மாமீ!.

ருக்:—என்னமோம்மா: என்வயிற்றில் செய்யும் சங்கடம் சொல்லமுடியவில்லை. கடைசீகாலத்தில் ஒரு பெண் பிறந்து நான் படுந்துன்பம் போதாமல் அவள் தலையை ஆபரேஷன் செய்து......ஐயையோ! நினைக்கவே சரீரம் நடுங்குகிறதே... ஏம்மா...யூனனிவைத்தியம், ஆயுர்வேதவைத்தியம் இவை களில் ஏதாவது பச்சிலை மூலிகைகள் தைலங்கள் முதலிய வைகள் இருக்காதா? அதை விசாரித்துப்பார்க்கிறேன்.என் மனம் கலங்கித்தவிக்கிறது. நீயாவது அவளுக்கு ஒரு சினே கிதை என்று இருக்கிறாயே அதுவே போதும். தினம்நீ அவளு டன்இருக்க......

விமலா:—மாமீ! நான் ஊருக்குப்போவதைச் சொல்லிக் கொள்ளத்தான் வந்தேன். எங்கப்பாவுக்கு வடக்கே வெகு தூரத்திற்கப்பால் வேலை; எனக்கு இனி படிப்புக்குஅங்குதான் வழிசெய்யப்போகிறார்கள். நாளை இரவுவண்டிக்குப் புறப் படுகிறேன். கௌஸல்யாவும் என்னுடன் வருவதாகவேறு சொல்லியிருக்கிறாள். அவள்வருவதாயின் முன்னதாகவே சொல்லவேண்டுமே என்று இன்றேவந்தேன். அவளை என் னுடன் அனுப்புங்கள் மாமீ! எங்கப்பா அம்மா மிகவும் நல்ல வர்கள்; அவளையும் என்னைப்போலவே பார்த்துக் கொள்வார்கள்.

ருக்:—நன்றாயிருக்கிறது. நீ இருக்கும்மாதிரியைப்பார்த் தாலே உன் பெற்றோர்களின் குணமும் எனக்குத் தெரிய வில்லையா? .. அவளுடைய மூர்க்க குணமும் பிடிவாதமும் உனக்குத்தெரியுமேம்மா! அதனால்தான் நான்பயப்படுகிறேன்.

விம:—மாமீ! நீங்கள் பயப்படவேண்டாம் எங்களுடன் இந்த லீவுவரையில்இருக்கட்டும்; அதிலேயே அவள் கொஞ்சம் மாறுதலையடைவாள் என்று எனக்குத்தோன்றுகிறது. எங்க டீச்சரும் அதையே சொல்கிறார். எங்கள் டீச்சர்கூட ஊர் பார்ப்பதற்காக எங்களுடன் வரும்படி எங்கம்மா அழைப் பனுப்பி இருக்கிறாள். அவர்களும் வரப்போவதால் உங்களுக்கு பயமேவேண்டாம் மாமீ......அதோ கௌஸல்யா வந்து விட்டாளே...வாம்மா கௌஸல்யா!...தூக்கத்தில் எழுப்ப வேண்டாம் என்று பேசாமலிருக்கிறேன்.

கௌஸ:—நீ வந்து வெகுநேரமாகிவிட்டதா விமலா! ஏன் அம்மா என்னை எழுப்பவில்லை?...என்று தாயைக் கடிந்து கொண்டாள்.

விம:—அம்மாவை எழுப்பவிடாது நான்தான் தடுத்தேன். நாளை இரவு நான் ஊருக்குப்போவது தீர்மானமாகிவிட்டது. நம் உபாத்தியாயினியும் வருகிறார்கள். நீ வருவதாகச் சொன்னாயே அதைப்பற்றிக் கேட்கவே வந்தேன்.

கௌஸ:—அம்மா! நான் இவளுடன் போய்வருகிறேன். அப்பாவை இன்றுகாலையிலேயே கேட்டேன்; அவச்யம் போய் வரும்படிச் சொல்லிவிட்டுப் பணமும் இன்றேகொடுப்பதாகவும் வேண்டியசாமான்களை வாங்கிக்கொள்ளவும் சொன்னார். விமலா!......நான் கட்டாயம் வருகிறேன்.....,என்னென்ன சாமான்கள் வேண்டும். நீ வாங்கும்போது எனக்கும் வாங்கி விடு...என்று முடிவு கட்டிவிட்டாள்.

ருக்மிணியம்மாளுக்கு இத்தனை சங்கடத்திற்கு மத்தியில் தானும்கூடப்போய் விமலாவைத் தன் மூன்றாவது மகனுக்கு ஏற்பாடு செய்யலாமா! என்றும் ஒரு எண்ணம் தோன்றியது. உடனே அதை அடக்கிக்கொண்டு...“விமலா! உன்னைப்பார்த்தால் எங்க ஜெயத்தைப் பார்ப்பதுபோலிருக்கிறது. என்ன மோம்மா! நீயாவது அவளுக்குத் தோழி என்று இருக்கிறாயே அதுவேபோதும். உன்னுடன் அனுப்புகிறேன்;நீ கட்டாயம் இவள்நிலைமையைப்பற்றி தினம் ஒரு கடிதம் எழுது. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளு. அவளை நாங்கள் தனிமையில் எங்குமே அனுப்பியதில்லை. உங்கள் உபாத்தியாயினியும் பெரிய துணையாக வருவதால் அனுப்புகிறேன்” என்று ஒப்புக் கொண்டாள்.

“ஆண்டவனே! இந்த ஊர்ப்ரயாணத்தின் பலனாகவாவது அவளுக்கு நல்லகாலம் ஏற்பட்டு நன்றாயிருக்க அருள் புரிய வேண்டும்” என்று வேண்டினாள். ஆனால், மனம்மட்டும் சமாதானமடையாமல் தவித்தது.

5

கோரக்காட்சி—பயங்கரக்கூக்குரல்

“இரவு 8 மணிக்கு விமலா கௌஸல்யா இருவரும் ரயில்வே ஸ்டேஷனுக்குவந்தார்கள். வீட்டிலுள்ள சிறிது இரைச்சலையே தாளாத கௌஸல்யாவுக்குப் பெரிய ஜங்ஷனிலுள்ள இரைச்சலை எப்படிச் சகிக்கமுடியும்? சாதாரண மனிதர்களுக்கே ஜங்ஷனில் அடிக்கடி ப்ரயாணிகள்வரும் ரயில்

களின் இரைச்சலும், ப்ரயாணிகள் பேசும் இரைச்சலும், அதைவிட விற்பனையாளர்களின் விதவிதமான குரலின் அலறல்களும், போர்டர்கள் செய்யும் பேரிரைச்சலும் கூட்ஸ் வண்டிகளின் பயங்கரசப்தமும் ஒன்றுகூடித் தலைநோவையே உண்டாக்கிவிடும். இத்தகைய ஜங்ஷனில் வந்த கௌஸல்யாவுக்குக் காதே செவிடாகிவிடும்போலாகிவிட்டது. உபாத்தியாயினி கூடவிருப்பதால் சற்று பயமும் தோன்றியது. எனினும் கோவத்தை அவளால் அடக்கமுடியாது "இதென்ன சனியன் பிடித்த இரைச்சல்! போகிற கழுதைகள் பேசாமல் போவதற்கென்ன? ப்ரமாதமாய் கத்திக்கொண்டு ஓடவேணுமா? ...பெருத்த உபத்திரவமாக இருக்கிறதே! இதே சத்தத்திலா இன்னும் காத்துக்கிடக்கவேண்டும்?" என்று இரையத் தொடங்கினாள்.

இவளுக்குப்பள்ளிக்கூடத்தில் பார்த்துச்சொல்லிய அதே டாக்டரும் வெளியூருக்குப்போவதற்காக அங்கு போவதைக் கண்ட உபாத்யாயினிக்குச்சற்று சந்தோஷமாகவேஇருந்தது. இவர்களுக்கென்று ரிஸர்வுசெய்துள்ள வண்டிக்கு இவளை அழைத்துப்போய் "கௌஸல்யா! பெரிய ஜங்க்ஷனை நீ பார்த்ததேஇல்லையா! ப்ரமாண்டமான சமுத்திர அலைபோலத்தான் இருக்கும். இதற்காகவா இப்படி இரைவார்கள்? வா...நம் வண்டியில் உட்கார்ந்துவிடலாம்" என்று அவளை உட்காரவைத்துக்கதவுகள் எல்லாவற்றையும் போட்டுவிட்டு மின்சார விசிறியைத் திருப்பினாள்.

கௌஸ:—அப்ப......இப்போதுதான் சற்றுநிம்மதியாக இருக்கிறது. அந்தஇரைச்சலில் நிற்காமல் திரும்பிப்போய் விடலாமா என்றுகூட நினைத்தேன். இனிமேல் அப்படி இரைச்சல் வராதே.

உபா:—ஏன் கௌஸல்யா! இரைச்சல்வந்தால் உனக்கென்ன செய்கிறது? எதற்காகப்படபடவென்று கத்தினாய்?

கௌஸ:—அதென்னமோ டீச்சர்! இரைச்சல் காதில் கேட்கும்போதே எனக்கு அடங்காதகோபம் வந்துவிடுகிறது. உடம்பெல்லாம் குபீரென்று சூடுகையுடன்பொங்கி ரத்தம் கொதிக்கிறது. கூச்சலிட்டுவிட்டால் தேவலைபோல்தோன்றுகிறது. என்னால் அடக்கவேமுடிவதில்லை. என்னையறியாமலேயே வாயில் படபடத்துவந்துவிடுகிறது. இதற்கு நான் என்னசெய்வேன்? இதைபிசாசுஎன்றுஎன்னைமந்திரவாதியின் முன் உட்காரவைத்தார்கள். அவனை நன்றாகத் திட்டிவிட்டு அவன்வைத்துள்ள சாமான்களை உடைத்து த்வம்ஸம்செய்துவிட்டு "டேய்! பிசாசு இப்படித்தான் செய்யும் தெரியுமா? இந்த பிசாசை உன்னால்ஓட்டமுடியாது. உன் பிசாசை நான் ஓட்டிவிடுவேன்' என்றுகூறிவிட்டு வந்துவிட்டேன். அதோடு என்னை அத்தகைய வேலைக்குக்கொண்டுபோவதேஇல்லை... என்று சொல்கையில் இந்தவண்டியில் உபாத்யாயினியும் இவ

ளும்ஏறியதைப்பார்த்த அந்த டாக்டரும் இதில்வந்தமர்ந்தனர். அவள் படபடத்துப்பேசுவதையும் மற்றசகலமான அம்சங்களையும் அவளுடன் பேச்சுக்கொடுத்தபடியே டாக்டர் வெகு கூர்மையாகக் கவனித்தார்.

தான் எப்படியாவது இவளுடைய தலையில் ஆபரேஷன் செய்து இந்த நரம்பைஎடுத்து இவளுக்கு சொஸ்தப்படுத்தித் தான் நல்லபெயர் எடுக்கவேண்டும். பெண்ணோ, ரதியைப் போலிருக்கிருள். இந்த ஒரு கொடுமையினால் இவளுடைய குடும்பமே பாழாகிவிடுவதென்றால் பரிதாபமாக இருக்கிறது... என்று தனக்குள்ளேயே ஒருபெரும் நிச்சயப்புள்ளியைப் போட்டுவிட்டார்.

வண்டிகிளம்பும் நேரத்தையறிவிக்கும் மணியடித்ததும் டாக்டர் இறங்கித் தன்வண்டிக்குப்போய்விட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டிவெகுஉத்ஸாகத்துடன்கிளம்பியது. ஜிலுஜிலுப்பான காற்றுவருவதற்காகக் கதவைத்திறந்துவிட்டு சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். வண்டியின் ஆட்டம் தொட்டிலாட்டுவதுபோலிருந்தது. பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் மூவரும் நன்றாகத் தூங்கிவிட்டார்கள். விமலாவும் கௌஸல்யாவும் உயரப்பலகையில் ஆனந்தமாகப் படுத்து மெய்மறந்து தூங்குகிறார்கள்.

விடியற்காலை 4மணியிருக்கும்: திடீரென்று கடகடவென்று ஒருசத்தம்........ப்ரமாண்டமாய் டமடமவென்று முறியும் சத்தம்....ஒன்றோடொன்று மோதியடித்து இடித்துத்தள்ளி ஒரு விபரீத பயங்கர ப்ரளயமேவந்ததுபோலாகிவிட்டது. “ஹா...ஹா...ஆபத்து! ஆபத்து...ஐயோ!” என்ற பெருங் கூக்குரல் ஒரேயடியாய் ஆகாயத்தைஅளாவிஎழுந்தது. தண்டவாளம் நகர்ந்துவிடவே, ரயில்புரண்டுபோய் எஞ்சினுக்கு அடுத்த மூன்று நான்கு பெட்டிகள் அப்படியே கீழேவிழுந்து மகாகோராமையைவிளைவித்துவிட்டது. மற்றவண்டிகள் இந்த அதிர்ச்சியால் பெருந்தாக்குதலுடன் ஒரேயடியாக மோதியடித்து பலத்தசேதத்தை உண்டாக்கிவிட்டதால் பயங்கர த்வனியையும் அலறலையும்தவிர வேறுஎதுவுமே காணவில்லை.

கௌஸல்யா ஏறியிருந்த வண்டிக்கு முன்வண்டி பாதி சாய்ந்து கோணமாணலாகநின்றவேகத்தில் இந்தவண்டியும் ஒரு சிறிது புரண்டுவிட்டதால் பலகைமீது படுத்திருந்த கௌஸல்யாவை உருட்டியடித்துக் கீழே தள்ளி கதவுதிறக்கப் பட்டு வெளியேயும் தள்ளியது. அங்கிருந்த பெட்டிகள் சாமான்கள் முதலியவைகளும் தாறுமாறாக விழுந்து சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறிவிட்டன. விமலாவை உருட்டியடித்துத் தள்ளிக் கதவிடுக்கில் அழுத்திவிட்டது உபாத்தியாயினியின் கால்மீது பெரியட்ரங்குவிழுந்து ஒரேதுடியாய்த் துடிக்கிறாள்.

நடந்த விபத்தோ ஒரேஒரு க்ஷணத்தில் நடந்துவிட்டது. இருட்டுக் கருக்கல். இடமோ நடுக்காடு. பின்னால் போகப்போக வண்டிகளின் ஆட்டத்தினால் மோதிக்கொண்டு சிறிது காயமேற்பட்டதேயன்றி முன்வண்டிகளுக்கு ஏற்பட்டவிபத்து மிகவும் பயங்கரமாகவும் கண்கொண்டு காணச்சகிக்காததுமாகிவிட்டது. ஒரே கூக்குரல் அலறல் அவச்சொல்சப்தம்...

பின்வண்டியிலிருந்த டாக்டருக்கு அதிர்ச்சியினால் உடம்பில் சிறிது காயம்தான் ஏற்பட்டது எனினும் அவர் உள்ளம் துடித்தது. அந்த கும்பிருட்டில் நடக்கமாட்டாது இறங்கி வந்துபார்க்கும்போது கண்ட அலங்கோலம் அவர் உயிரைக் கலக்கியது. உபாத்தியாயினியும் மற்றவர்களும் ஏறி இருந்த வண்டியை அவரால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. டார்ச்சு வைத்திருப்பவர்களின் விளக்குகள் பாதிக்குமேல் தூள் தூளாகிவிட்டன. சில அரைகுறையாக இருந்ததை எடுத்துப் பார்த்தார்கள்.

ஒரே அல்லகல்லோலமான நிலைமையில் யார்யார் என்ன ஆனார்கள் என்பதையே கண்டுபிடிக்கமுடியவில்லை. சமீபத்திலிருந்த க்ராமத்தினருக்கு விபத்து தெரிந்து கைவிளக்குகளுடன் ஓடிவந்தார்கள்.

இதற்குள் கிழக்கும் வெளுக்கத்தொடங்கியது: அதிகம் விவரிப்பானேன்? கோராமை...கோராமை! நரகலோகத்தில் பிணக்குவியலுக்குமத்தியில் உயிருடன் இருப்பவர்களில் அங்கஹீனர்கள், துடியாய்த்துடிப்பவர்கள் முதலிய பலரகப்பட்ட கண்ராவிக் காட்சியைத்தான் பலரும் கண்டார்கள். அனியாயமே...ஆபத்தே......ஐயோ...இந்தக் கூக்குரலின் பரிதாபம் இதயம் படைத்தவர் யாவரையும் உருக்கிவிட்டது.

டாக்டர் வெகு மும்முரமாய்த் தேடிக்கொண்டு வருகையில் கதவுக்கு வெளியே கரடுமுரடான தரையில் கௌஸல்யா தள்ளப்பட்டு ரத்தப்ரவாகத்தில் மிதந்து கிடப்பதைக்கண்டு நடுநடுங்கினார். கதவின் இடுக்கில் நசுங்கும் விமலாவையும் காலே உடைந்துள்ள உபாத்தியாயினியையும்கண்டு டாக்டர் துடிதுடித்தவாறு இவர்களுக்கு உயிர் இருக்கிறதா! என்று முதலில் பார்த்தார். ஏதோ மயிரிழை ஊசலாடுவதையறிந்ததும் அந்தரமானக் காட்டில் தாம் இப்போது என்ன செய்வது என்று பயந்து பரந்துபரந்து ஓடுகிறார்.

இதற்குள் விஷம்பரவுவதுபோல் விஷயம் பரவி போலீஸ் படைகளும், மருத்துவ சாரண கோஷ்டியினரும் ஸ்பெஷல் ரயிலிலும் பஸ்ஸிலும் லாரியிலும் திரள்திரளாக வரத் தொடங்கினர். வெட்டவெளியில் கூடாரங்களமைத்துப்ரயாணிகளை விதவிதமாகக்கொண்டு விட்டார்கள். டாக்டர்கள் பலபல கருவிகளுடன் உதவிபுரிய ஓடிவந்தார்கள்; இந்த டாக்டரும் ப்ரயாணிகளை ஒவ்வொருவராகப் பார்த்து கூடாரத்தில் கொண்டுகிடத்தி உதவிசெய்கிறார். கௌஸல்யாவையும் விமலா

வையும் உபாத்யாயினியையும் தனித்தனியே கூடாரங்களில் கிடத்தினர். சற்று முன்பு வரையில், தான் கௌஸல்யாவுக்கு எந்த வைத்யத்தைத் துணிந்துசெய்து பெருமைபடைய எண்ணிப் புள்ளிபோட்டாரோ, அந்தவைத்யத்தை காலக் கொடுமையின் சூறுவளியே முந்திக்கொண்டுசெய்தது. மண்டையில் பலத்த அடிபட்டுக் கிழிந்துபோய் ரத்தம் பெரும்பாலும் போய்விட்டதால் தாது இறங்கிக்கொண்டே வருவதைக்கண்டு சற்றும் தாமதிக்காமல் கௌஸல்யாவுக்கு வேண்டிய சிகிச்சைகளைச்செய்தார்.

விமலாவுக்கும் உபாத்யாயினிக்கும் அதேபோல் தகுந்த சிகிச்சையைச்செய்தார். தன் காயங்களை லக்ஷியம்செய்யாமல் பரந்துபரந்து வேலைசெய்தார்..எத்தனைபேர்களின்கதறல்,எத்தனைகுழந்தைகளின் பரிதாபமான அழுகை! எத்தனையோ தாய்மார்களின் உயிர் நீங்கிவிட்டன. குழந்தைகள் பரதேசியாய்க் கதறுகின்றதைப்பார்க்க எத்தகைய பாவிகளின் கொடிய உள்ளமும் நீராக உருகிவிடும். எந்த இடத்திலும் ஓரே அலறலைத்தவிர வேறில்லை. அவசப்தமே வானையளாவி மேல் உலகத்தவரையும் கதிகலங்கச்செய்தது.

6

பூகம்ப அதிர்ச்சி—புதிய உணர்ச்சி

"பிற்பகல் 4 மணிக்கு மேலாகிவிட்டது; விமலாவுக்கு அப்போது தான் ப்ரக்ஞைவந்து கண்ணைத்திறந்தாள். சரீரம் பூராவும் நல்லகாயம். சில எலும்புகளும் சிறிது முறிந்துவிட்டதாகத்தெரிந்தது. ஓரே அயோமயமான நிலைமையில் தாங்கள் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு படுத்ததுதான் மெல்ல நினைவிற்கு வந்தது. கௌஸல்யாவின் நினைவும் உபாத்தியாயினியின் நினைவும் சிறுகச் சிறுகவந்ததும் பயங்கர விபத்தின் நினைவும் வந்துவிட்டது. வாயைத்திறக்கமுடியவில்லை. கண்களையும் திறக்கமுடியவில்லை. குமுறிக்குமுறிக் கத்தினள்.

அதேடாக்டர் தேவராஜன் ஓடிவந்து "என்னம்மா... என்ன வேண்டும்" என்றார்... அவளுக்குப்பலத்த அடியினால் பலஇடங்களில் கட்டுகள் கட்டியிருப்பதால் அவளால் அசையக்கூட முடியவில்லை...கௌஸல்யா...டீச்சர் என்றபதங்களை மிகமிக ப்ரயாஸைப்பட்டு திக்கித்திணறிச்சொன்னாள்.

அவளுக்குச்சரியான சமாதானத்தைச் செய்து ஆகாரம் கொடுத்துவெகுஅக்கரையுடன் கவனித்துப்பின் கௌஸல்யாவிடம் ஓடிவந்தார். கையில்தாதுவும் இதயத்தில்சிறிதுபலமும்

வருவதையறிந்து அவளிடம் அடிக்கடி வந்து கவனித்தார். இரவு 8 மணிக்கு கௌஸல்யா சற்று கண்திறந்து பார்த்தாள். ஆனால், ஒன்றுமே பேசமுடியவில்லை.

போலீஸாரும் மற்ற உத்யோகஸ்தர்களும் ஒன்றுகூடி அடுத்த ஜங்ஷனிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு சற்று பயமில்லாத அபாயமில்லாதவர்களை பத்திரமாகக்கொண்டு போனார்கள். அபாயமானவர்களுக்குச் சகலவித சௌகர்யங்களையும் கொடுத்து கூடாரத்திலேயே சிகிச்சையை மும்முரமாகச்செய்துவந்தார்கள். இரவு நடுநிசிக்கு கௌஸல்யா மறுபடியும் கண்திறந்து பார்த்தாள்.

மங்கலான விளக்குமட்டும் தெரிந்தது. தான் எங்கிருக்கிறோம் என்ன செய்கிறோம் என்றதே தெரியாமல் சிறிது உணர்ச்சிமட்டும் பெற்று ஒருமாதிரி பார்த்தாள். தீனக்குரல்களில் "ஐயோ! அம்மா" என்ற அலறல் காதில் விழுந்ததும் இதயத்தில் ஏதோசெய்கிறது. தேகம்பூராவும் வலியால் பரமசங்கடத்தைக்கொடுக்கிறது. சிறுகச்சிறுகத் தான் ரயிலில் வந்ததும் தூங்கியதும் நினைவுக்குவந்தது.

அதேடாக்டர் தேவராஜன் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பதைக்கண்டு "டாக்டர்...விமலா...உபாத்யாயினி...... ரயில்"...என்று இழுத்து இழுத்துக்கேட்டாள். இவளுடைய தெளிவைக்கண்டு சந்தோஷித்ததேவராஜன் "கௌஸல்யா!.. எல்லாரும் சவுக்கியமாயிருக்கிறார்கள்; நீ பேசாமல் தூங்கு"... என்று ஹிதமாய்க்கூறி அவளுக்கு நோய் தெரியாதிருப்பதற்காக இரண்டு மூன்று ஊசிகள்குத்தி பக்கத்திலேயே நர்ஸை வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிச் செய்த பின்தான் மற்றவர்களைக் கவனிக்கச் சென்றார். மறுநாள் பொழுதும் புலர்ந்தது. முன்னிலும் சற்றுதெம்பும் அபிவ்ருத்தியும் உண்டாகியிருப்பவர்களையெல்லாம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஏற்பாடு செய்தார்கள்.

கௌஸல்யாவுக்கு காலைகதிரவனின் கிரணம்கிளம்பியதும் ஏதோஒருவிதமான தெம்பும் சிறிது பலமும் உண்டாகியது. நர்ஸ் காலை ஆகாரத்திற்குப் போயிருந்தாள். இவள் சற்று சமாளித்துக்கொண்டு எழுந்து மெல்லதட்டித்திணறி அந்த டேராவை முற்றிலும் பார்த்தாள். "ஐயோ! அப்பா!" என்கிற அலறலுடன் சிலர்; பின்னும்சிலரோ...'ஐயோ! எங்கம்மா என்ன ஆனாள்?...என் மனைவி என்ன ஆனாள்?' என்று தம் தம் மக்கள் மனிதர்களைப்பற்றிக் கேட்டுக்கண்ணீர்விடும் பரிதாபத்தைக் கண்டதும் இத்தனை பலவீனத்திலும் இவளுக்குச் சிறிது சுருசுருப்பு காணப்பட்டது.

அங்குள்ளவர்களையும் பார்த்துத் தன்னிலைமையையும் கண்டு ரயில் விபத்தையொருவாறு மனத்தில் நிர்ணயித்துக்கொண்டு கூடாரத்தைவிட்டு வெளியேவருவதற்கு முயற்சிப்பதற்குள்

183163

நர்ஸ் வந்து கண்டித்துப் படுக்கவைத்துவிட்டாள். நர்ஸ் மூலம் சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டதும் அவளையறியாத ஏதோ ஒரு வேதனை நெஞ்சையள்ளியது.

இதற்குள் இந்தரயில்விபத்தைக் கேள்விப்பட்டும் பத்திரிகையில் படித்துமுள்ள ஜனங்கள், யார்யாருடைய மக்கள் மனிதர்கள் இந்தரயிலில் ப்ரயாணமானார்களோ அவர்களைச் சேர்ந்தவர்கள் கூட்டம்கூட்டமாக வந்து கதறவாரம்பித்தனர். ருக்மிணியம்மாளும் அவள் கணவரும் இந்த ரயில்விபத்தைக் கேள்விப்பட்டு எரிமலையே தங்கள் தலைமீது விழுந்துவிட்டது போல் தத்தளித்து துடித்தவாறு அடுத்த க்ஷணமே கிளம்பி விட்டார்கள்.

இதற்குள் கௌஸல்யாவையும் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போக வந்துவிட்டார்கள். டாக்டர் தேவராஜனிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு அந்தஇடத்தைஎல்லாம் தான்பார்க்கவேண்டும், விமலாவையும் உபாத்யாயினியையும் பார்க்கவேண்டும் என்று பிடிவாதம்செய்தாள்.

தேவராஜனுக்குமட்டும் இவளுடைய இந்த அதிர்ச்சியினால் பழயகுணம் மாறியிருக்கிறதோ! அப்படியேயிருக்கிறதோ! என்பதை பரிக்ஷிக்க ஆசை. அதற்காகவே இவளைகூடாரத்தில் வைத்திருக்க ப்ரயத்தனம் செய்தார்.

அந்த எண்ணத்தைப் பரிக்ஷிப்பதற்கு நோயாளிகளை உட்காரவைத்துத் தள்ளிச்செல்லும் வண்டியில் ஜாக்ரதையாக உட்காரச்செய்து சிறிதுதூரம்உள்ள பரிதாபத்தைக் காட்டினார். முக்யமாக அவைகளைப்பார்க்கப் பார்க்க இவளுடைய மனம் உருகிக் கண்ணீர் ஆறாய்ப்பெருகவாரம்பித்துவிட்டது.

ரயிலில் வந்த சில பொதுமக்களும் உதவிப்படையினரும் ஸேவிகைகளும் அங்கு அருகிலுள்ள சிறுசிறுக்ராமங்களுக்கு நடந்தோடி ஆகாரங்கள் தயாரித்துக்கொண்டுவந்து இங்கு உள்ளவர்களுககுக்கொடுப்பதும் அங்கு பரதேசிகளாய் உள்ள குழந்தைகளுக்குப் பரிந்துபரிந்து ஊட்டுவதும், அக்குழந்தைகளோ 'எங்கம்மா எங்கே?...எங்க அப்பா எங்கே?'...என்று தம் தம் உறவுமுறைகளை வைத்துக்கேட்டு அழுதுபிடிவாதம் செய்வதும் சிலகுழந்தைகளுக்கு இந்த அதிர்ச்சிதாளாமல் உடம்புக்குவந்துவிட்டதும் அடாடா! அந்தபரிபவக்காட்சியை எப்படித்தான் வர்ணிப்பது?..."கௌஸல்யா! இதோ இந்த கூடாரத்திலுள்ள இத்தனை குழந்தைகளையும் பகவான் எப்படியோ உயிர்ப்பிச்சைகொடுத்துக் காப்பாத்தியிருக்கிறார். இவர்களுடன் வந்தவர்களில் பெரும்பாலோர் போய்விட்டனர். சிலருக்கு கைகால்கள்தெறித்தேபோய் ஆஸ்பத்ரிக்கு அனுப்பியிருக்கிறோம். பத்திரிகையில் பார்த்து வார்ஸுகாரர் யாராவது வந்து கொண்டுபோவார்களோ என்றதனால் இவர்களை சர்க்கார்பாதுகாப்பில் இங்குவைத்திருக்கிறது" என்று டாக்டர் சொல்லும்போது அங்கு ஒரு குழந்தை வீறிட்டு "அம்மா!

அம்மா!" என்று கதறியதைப்பார்த்த கௌஸல்யாவுக்கு எங்கிருந்தோ துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. தான் தன்னையே மறந்து ஒரே குதிகுதித்து இறங்கி அக்குழந்தையிடம் போய்ச்சேர்ந்து வாரிஎடுத்துக்கொண்ட காட்சியைப்பார்த்ததும் தேவராஜனுக்கு ஆச்சரியமாகிவிட்டது.

இந்த அதிர்ச்சிதாளாது மறுபடியும் கௌஸல்யா ஒருமாதிரி மயக்கத்திலாழ்ந்துவிட்டதால், படுக்கையில்கொண்டு கிடத்திச் சிகிச்சைசெய்தார். கௌஸல்யாவின் பெற்றோர்கள் வெறும் பிணத்தைதான்காணநேருமோ அல்லது அதுகூட உருத்தெரியாமல் போயிருக்குமோ என்றபயத்துடன் துள்ளித் துடித்தவாறு வந்தனர்.

திக்குதிசைஎதுவும்தெரியாத இந்நரகத்தைப்பார்த்துக் கதறித் துடிப்பவர்களை அடையாளம் காட்டுவதற்கென்று இருக்கும் மனிதர்கள், உயிருடன் இருப்பவர்களைக் காட்டி, அவர்களுள் தங்கள் மனிதர்கள் இல்லை என்றால் பிணக்குவியலில் சிறிதாவது அடையாளம் கண்டுகொள்ளும்படியான நிலைமையிலுள்ளவர்களைக் காட்டிவந்தார்கள்.

அதேபோல் ருக்மிணியம்மாளையும் கோபாலனையும் அழைத்துவந்து கூடாரம்கூடாரமாகக் காட்டும்போது விமலா படுத்திருப்பதைப் பார்த்த ருக்மிணி கதறியவாறு அவளருகில் சென்று"விமலா"...என்றாள். மேலேபேசமுடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. அதற்குள் தந்திபோய் ப்ளேன் மூலம் அவளுடைய பெற்றோர்கள் பறந்துவந்துவிட்டதால் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

இவளைப்பார்த்த விமலா..."மாமீ! உங்கள்வயிற்றில் பாலை வார்த்தார் பகவான். உங்கள் கௌஸல்யா ஆபத்திலிருந்து பிழைத்துவிட்டாள். அவளை அன்றுநான் சொல்லியடாக்டர் வெகுநன்றாகப் பார்த்துக்கொள்கிறார். தெற்கு மூன்றாவது கூடாரத்திற்குப் போங்கள். அங்குபடுத்திருக்கிறாள். எங்கள் உபாத்யாயினிக்குத்தான் காலில் எலும்பே முறிந்துவிட்டதாம். ஆஸ்பத்திரியிலிருக்கிறார்" என்று சொல்லிமுடிப்பதற்குள் புத்திரவாத்ஸல்யத்தின் தூண்டுதலால் ஒரே ஓட்டமாக மூன்றாவது கூடாரத்திற்குள் சென்று ஒவ்வொரு கட்டிலாகப் பார்த்துக்கொண்டுபோனார்கள்.

தலையில் பெரியகட்டுடன் முகத்தில் பல இடங்களில் ப்ளாஸ்திரியும் போட்டிருப்பதால் சட்டென்று ஆள்புரியவில்லை. எனினும் பெயரைச் சொல்லிக்கேட்டதும் நர்ஸ் காட்டினாள். கண்ணைமூடிக்கொண்டு படுத்திருந்த கௌஸல்யாவைப்பார்த்ததும் பெற்றோருடைய உணர்ச்சி கட்டுமீறிப் பொங்கிவிட்டது. அதையடக்கவேமுடியாது தேம்பித்தேம்பியழுதவாறு "கண்மணீ கௌஸல்யா"...என்று ருக்மிணியம்மாள் அலறியவாறு தடவிக்கொடுத்தாள்.

அப்போதுதான் அங்குவந்த தேவாராஜன் இவர்கள்தான் பெற்றோர்கள் என்பதை அறிந்து...“ஸார்...நீங்கள் கவலைப் படவேண்டாம்...அம்மா! அழாதீர்கள். இந்த விபத்து ஒரு பூகம்பம்போலாகிவிட்டது. ஒருபக்கம் பயங்கரமான அதிர்ச்சியும் சேதமும் மற்றொருபக்கம் சிலருக்கு நன்மையும் க்ஷேமமும் கிடைத்திருக்கிறது. உங்கள் மகள் விஷயத்தில் நான் எந்த ஆபரேஷன்செய்து ஒரு பரீக்ஷைபார்க்க எண்ணினேனோ, அந்த வேலையை பகவானே செய்துமுடித்துவிட்டார். அவளுக்கு இப்போதுள்ள மாறுதலைக்கண்டு நானே வியப்படைகிறேன். இப்போதுதான் சற்று மயக்கமாயிருக்கிறாள். இப்போதுதொந்தரவுசெய்யவேண்டாம். உயிருக்குப்பயமில்லை; இப்படி உட்காருங்கள்” என்று சமாதானம்செய்தார்.

இதைக்கேட்ட ருக்மிணியம்மாளின் வியப்புக்கு அளவே இல்லை. என்னென்னமோ எண்ணங்கள் தோன்றி மனத்தில் அலைமோதுகிறது...எப்போது கண்திறந்து பார்ப்பாள்? என்று ஆவலேவடிவாய் உட்கார்ந்தாள். ருக்மிணியம்மாளுக்கு இப்போதுதான் தனக்கொரு பெண் மறுபடியும் பிறந்ததாகத் தோன்றியது.

7

மனமாற்றமும் மனஉருக்கமும்

அன்றுசெல்ல மறுநாள் கோஸல்யாவை ஆஸ்பத்திரிக்கே கொண்டுவிட்டனர். இங்கு தகவலில்லாத பிணங்களை அதிகாரிகளே அடக்கம்செய்து, திக்கே இல்லாத குழந்தைகளை ஆஸ்பத்திரியில் ஒருதனி விடுதிக்கு மாற்றினர். ரயிலின் ரிப்பேர்வேலையையும் மும்முரமாக முடித்தார்கள்.

கௌஸல்யா அன்று உண்டான ஒருபுதிய உணர்ச்சியின் தாக்குதலால் மயங்கியபிறகு கண்திறந்து தெளிந்துபார்க்கும்போது அவ்வளவாக நன்றாகத்தெளிவுகாணவில்லை. தன்பெற்றோர்களைப்பார்த்ததும் ஏதோஒருமாதிரி சந்தோஷப்பட்டுப் பேசுகிறாளேயன்றி சரியானபடி தெளிவுகாணாததைக் கண்டு டாக்டருக்கு மறுபடியும் சிறிது கலக்க முண்டாகியது. அடிக்கடி...“ஐயோ! அத்தனைபேருமா இறந்துவிட்டார்கள். அத்தனை குழந்தைகளுக்குமா அம்மாஇல்லை...எனக்குமட்டும் அம்மா இருக்கிறாளே. எங்காத்தில் எல்லாருக்கும் அம்மா இருக்கிறார்களே!”...என்றுசொல்லவாரம்பித்தாள்.

“ஐயோ! நாம் அங்கு அழைத்துச்சென்றதே குற்றமாகிவிட்டதா?”...என்றுகூட டாக்டருக்குத்தோன்றியதால் அவளை இனி அந்தப்பக்கமே அழைத்துப்போகாமல் சிகிச்சைசெய்ய

வாரம்பித்தார். ஆனல் கௌஸல்யாவுக்கு முதல் இரண்டு மூன்று நாட்கள் ஒன்றும்சொல்லவோ கேட்கவோ தெரியவில்லை; இதேநிலைமையில் ஒருவாரமாயிற்று. எழுந்து உலாவும் சக்திவந்தது. பெற்ருேர்களிடமும் ஆஸ்பத்திரி அதிகாரியிடமும் கௌஸல்யாவை ஒப்படைத்துவிட்டு தேவராஜன் அவசரவேலையாய்ச் சென்ருர்.

இவள்சற்று உலாவும் சக்திவந்ததும் எழுந்து தானே மெல்ல நடக்கவாரம்பித்தாள். இதற்குள் இவ்விஷயம் இவளுடைய உடன்பிறந்தவர்களுக்கெல்லாம் தெரிந்து எல்லோரும் ஓடிவந்தார்கள். இவளிடம் குழந்தைகளுடன் வருவதற்குப்பயந்துகொண்டு வெளியில் குழந்தைகளை விட்டுவிட்டு உள்ளேவந்து அன்பும் அநுதாபமும் த்வனிக்க "கௌஸல்யா! எப்படியம்மா இருக்கிருய்!...என்பதற்குள் கௌஸல்யா "ஐயோ!...பார்வதி! குழந்தைகள் எங்கே?"...என்று கேட்டதும் எல்லோரும் வியப்புக்கடலாடினுர்கள். "ராஜீ எங்கே... அண்ணு!மன்னி...உங்களுக்கு...குழந்தைகளுக்குமட்டும்தாயார் இருக்கிருர்களே! இங்குள்ள அத்தனை குழந்தைகளுக்கும் தாயார் இல்லையேபாவம்!...ஐயோ! எனக்குக்கூட அம்மா இருக்கிருளே!...அந்த குழந்தைகளுக்குமட்டும் ஏன் அம்மா செத்துப்போய்விட்டார்கள்?"...என்றுதானும் கண்ணீர்விடவாரம்பித்தாள்.

இதற்குள் டாக்டர் வந்து "தயவுசெய்து இவளைஒன்றும் அதிர்ச்சியாகும்படிக் கேட்காதீர்கள். அங்கு கண்ட பரிதாபத்தினல் இப்படியிருக்கிறது. இன்னும் போகப்போகத் தெளிந்துவிடும். சீக்கிரமே வீட்டிற்கனுப்பிவிடுகிருேம். இப்போது அதிகம் பேச்சுக்கொடுக்காமல் பார்த்துவிட்டுப் போகலாம்" என்ருர்.

ருக்மிணியம்மாளைத்தவிர மற்றபடி எல்லோரும் சென்றுவிட்டார்கள். எத்தனை தடுத்தும் தானேஎழுந்து குழந்தைகளிருக்கும் வார்டுக்கு ஓடுவாள். அதனல் இன்னும் ஏதாவதாகிவிடுமோ என்றுபயந்த நர்ஸ்கள் அவளைத்தடுத்து இழுத்துக்கொண்டுவந்துப் படுக்கவைப்பார்கள். ஆனல் மறுபடியும் மறுபடியும் எழுந்து ஓடுவதைக்கண்ட பெரியடாக்டர் "நீங்கள்தடைசெய்யவேண்டாம். அவள்அங்குபோய் என்ன செய்கிருளோ அதைப் பார்த்துக்கொள்ளுங்கள் போதும். குழந்தைகளுக்கு ஏதாவது துன்பத்தைச்செய்தால் உடனே வலுவில் கொண்டுவந்து விடுங்கள். முதலில் குழந்தைகளின் வார்டுக்குப் பக்கத்தறையில் இவளுடைய படுக்கையை மாற்றுங்கள். ஏதாவது விசேஷமிருந்தால் உடனே டெலிபோன் செய்தால் நான்வருகிறேன்" என்றுசொல்லிச்சென்ருர்.

அதேபோல் அவளைக் குழந்தைகள்இருக்கும் அறைக்குப் பக்கத்தறையில் மாற்றினுர்கள். இங்குகட்டிலில்படுத்தபடியே "பாப்பா..பாப்பா..என் ராபண்றங்கோ..உங்கம்மாவந்தாளா?..

...உங்கப்பா வந்தாரா...அழாதேம்மா! இதோநான் வறேன்." என்று தானேபேசுவது, மறுபடி குழந்தைகள் விடுதிகருள் வருவது, கதவருகிலேயே தான் நின்றுபார்ப்பது குழந்தைகளு டன் குழந்தையாகத் தானும் தவழ்வது, தத்திநடப்பது, மழலைபேசுவது; சிரிப்பது, ஓடுவது; அவர்கள் என்னசெய்கி றார்களோ அப்படியே தான் செய்வது, இம்மாதிரி இருப்பதில் மிகவும் இன்பங்கொண்டாள்.

ரயில்விபத்திற்குஆளாகி உயிர்துறந்த அபாக்யப்பிண் டங்களின் மக்களுக்கு வேறுதிக்கேஇன்றி அனுதரவானநிலை மையில் இருக்கும் இந்தகுழந்தைகளைத்தவிர அந்தவிபத்தில் அடிபட்டு கைகள், கால்கள், இடுப்பு முதலிய அங்கஹீன மாகி அதற்கும் நாதியற்றப் பரதேசி நிலைமையில் இருக்கும் குழந்தைகளை வேறொருஇடத்தில் வைத்திருந்தார்கள்.

இந்தசாதாரணகுழந்தைகளின் போஷணைக்காக 5, 6 பெரிய வயதான கிழவிகளே தாதிகளாகஇருப்பதால் பொறு மையுடன் அன்பாய் தயாளகுணத்துடன் இக்குழந்தைகள் விரும்பும்படி விளையாடவிடுவது அவர்கள் தாய்தந்தைகளை நினையாதவிதம் பலாக்குக்காட்டி, கதைகள், பாட்டுகள் சொல்லி நினைவைமாற்றி நல்லஎண்ணங்களை உண்டாக்கி வளர்ப்பது—இப்படிசெய்வதைக் காணக்காண கௌஸல்யா வுக்கும் அவளையறியாத ஒருதனி இன்பம்உண்டாகியது.

விடியற்காலையில் இந்த குழந்தைகளுக்கு கிழவி பல் தேய்த்து முகங்கழுவி நெத்திக்குஇட்டுப் பின் ஆகாரம் வரும் வரையில் ஒன்றாக உட்காரவைத்து, பல ஸ்தோத்திரப்பாடல் களைப் பதம்பதமாகப்பிரித்து அழகாகச் சொல்லிக்கொடுத் துச் சிறிய இளந்தளிர் உள்ளங்களில் பக்தி என்கிற விதையை விதைத்துவரும் ஆனந்தத்தைக்கண்ட அந்தப்பெரியடாக்டர் கூட சந்தோஷத்துடன் ஆமோதித்தார்.

குழந்தைகளின் பக்கத்து அறையில் கௌஸல்யாவை மாற்றியபிறகு அவளும் சொல்லிக்கொள்வதைப் பார்த்த ருக்மிணியம்மாளின் வியப்பு கரைகடந்ததாகிவிட்டது. அன்று வீட்டில் குழந்தைகள் பஜனைசெய்து ஆனந்தப்பரவசத்தை உண்டாக்கியபோது உக்ரதாண்டவமாடிய அதே பெண்ணா இன்று தானும்அமைதியாகச் சொல்லிக்கொள்கிறாள்? என்ன விசித்திரம்! என்ன பகவானின் மாயை! எப்படியாவது கூடியவிரைவில் இந்தப்பெண் சரியானபடி உடம்புகுணமாகி விட்டால்போதும், உடனேஊருக்கு அழைத்துப்போய்விட லாமென்று எண்ணித்தான் இங்கிருந்தாள்.

பிரிந்துபோன தன் குடும்பத்தை பழயபடிபோல் ஒன் றாகச்சேர்த்துக் குடும்பத்தை மருமகளிடம் ஒப்படைத்துவிட் டுத்தான் இவளுக்காக மாதக்கணக்கானாலும் இங்கிருக்கத் தீர்மானித்தாள். கௌஸல்யாவின் போக்கு நன்றாகத்தெரிக் திருப்பதால் ஊனமாயுள்ள குழந்தைகளின் விடுதியையும் இவ

ளுக்குக்காட்டினல் அதைப்பார்த்ததும் புத்திநன்ருகத் தெளிந்துவிடுகிறதா பார்க்கவேண்டும் என்பது ருக்மிணியம் மாளின் எண்ணமாகையால் அந்தப் பெரிய ஆயாவின்மூலம் அந்த ஆவலைப்பூர்த்திசெய்ய அவளுடன் ஏற்பாடுசெய்து கொண்டாள்.

அன்று பிற்பகல் ஆகாரமாகியபிறகு கௌஸல்யா பசங் களுடன் விளையாடும்போது "ஐயோ பாவம்! உங்களுக்கு எங் கும் அடிபடவில்லையே...உவ்வா ஒன்னும் இல்லையே? எனக்குப் பாரு எத்தனை அடிபட்டுவிட்டது. உம்மாச்சி உங்களைஎல்லாம் காப்பாத்தினர். இல்லையா?"...என்றபோது,அதில் 5 வயதான ஒரு பையன் "மாமி! எங்கஅக்காவுக்கு கால்உடைந்துபோய் விட்டது. அவள் வேறுஇடத்திலிருக்கிருள். மாமி! நான் பாவம் செய்யவே இல்லையாம். அதனுல் உம்மாச்சி எனக்குக் காலே உடைக்கவில்லையாம். அக்கா பாவம் செய்திருக்கிருளாம். அவளை உம்மாச்சி தண்டித்துவிட்டாராம். இனி யாருமே பாவம் செய்யக்கூடாதாம். உம்மாச்சிமேலே பக்தியாயி ருந்தாக்கா எங்கம்மாவைக்கொண்டு கொடுப்பாராம்." என்று இந்த ஆயாபாட்டி சொன்னு....எங்கம்மா எப்பவருவாமாமி! சதா உம்சாச்சிமேலே பக்தியாயிருக்கிறேனே" என்று சொல்லும்போது அக்குழந்தை தன்னைமீறிய துக்கத்தினுல் அழுதுவிட்டது.

இதுகண்ட கௌஸல்யாவுக்கு மனது உருகிப்போய்விட் டது "கண்ணு! உனக்கு அம்மா நான்தானம்மா! உனக்குத் தெரியவில்லையா! என்னைதான் நீ...ஏன்?...நீங்கள் எல்லோ ரும் அம்மான்னு வைத்துக்கொள்ளுங்கள்...நான் உங்களுக் குப் பிடிக்கவில்லையா...அப்படீன்னு இன்னெருகுழந்தை விடுதி யிருக்கிறதா? ஆயா...தயவுசெய்து என்னை அங்கு அழைத்துப் போங்கள். நான் பார்க்கவேண்டும்" என்ருள்.

இந்த சந்தர்ப்பத்தில் அவள் தான்தான் தாயார் என்று சொல்லியதே புத்தி நன்ருகத்தெளிந்துவருவதைக் காட்டிய தால் ருக்மிணியம்மாள் பரமசந்தோஷமடைந்து ஆயாவுடன் தானும் சென்று அந்த வார்டைப்பார்க்க ப்ரியப்படுவதாக ஜாடைசெய்தாள். உடனே கௌஸல்யாவை அழைத்துக் கொண்டு அங்குபோனுள்.

என்ன பரிதாபம்...என்ன சோகக்காட்சி! கையில்லாத முடமும் காலில்லாத நொண்டியும் இடுப்பில்லாத நிலைமையும் அடாடாடா...பார்ப்பவர்களின் உள்ளங்களை உருக்கிக் கண்ணீ ராகவடித்துக்கதறும்படியாக இருந்ததுகண்ட கௌஸல்யா கதறியேவிட்டாள்.

அந்தக் குழந்தைகள் தன்னிஷ்டப்படி ஆனந்தமாய் ஓடி யாடவும் வேண்டியவற்றை வயிருரத்தானேவாங்கித்தின்ன வுமாகச் சகலவிதத்திலும் சுதந்தரத்துடன் இருப்பதும், இக் குழந்தைகள்"ஆயா...தாகம்...தாகம்...ஆயா.....தண்ணீர்...

தண்ணீர்...ஆயா...காலில் தினவுஎடுக்கிறது சொறி; ஆயா... கண்ணில் தண்ணீர்வருகிறது. துடைத்துடு; ஆயா....ஈமொய்க்கிறது ஓட்டுஆயா''...

என்றுமிகவும் பரிதாபகரமாய் தம்தம் தேவைகளைத் தெரிவித்துப்பிறர்கைகளை எதிர்பார்த்துப்படுத்துள்ளபச்சைக் குழந்தைகளைப்பார்த்ததும் எத்தகைய பாவிகளின் மனது தான்துடிக்காது? ''ஐயோ! இப்படியும் ஒருகண்றாவிஉண்டா! இந்தபெரும் விபத்திற்கு இலக்காகிய இவர்களில் இம்மாதிரி கோராமையும் சேர்ந்திருக்கிறதா!'' என்றுருக்மிணியம்மாளின் உள்ளம்துடித்தது.

கௌஸல்யாவின் இதயத்தில் சங்கடம் கூறத்திறமே இல்லை. கண்ணீர் ஆறுய்ப்பெருகி உருக்குகிறது. இதுகாறும் கண்டறியாத பச்சாததாபமும் அன்பும் எங்கிருந்தோ கரை காணமுடியாதவிதம் பொங்கிவிட்டதால் பரபரப்புடன் குழந்தைகளின் தேவைகளின்படி தானே சொறிகிருள். தண்ணீர் குடிப்பிக்கிருள். ஈ ஓட்டுகிருள். தடவிக்கொடுக்கிருள். கன்னத்துடன் கன்னம்வைத்துத் தன்னுடைய உணர்ச்சியைக்காட்டுகிருள். இத்தனை நாட்களைவிட மிகத் தெளிந்தநிலைமையில் இவள்இருப்பதைக்கண்டு நர்ஸுகளும் ஆயாக்களும் சந்தோஷப்பட்டார்கள்.

''ஆயா! நான் இனிஇந்த விடுதியில்தானிருக்கப்போகிறேன். எனக்கு அதைவிட இதுதான்பிடிக்கிறது. உதவியைக்கோரி எதிர்பார்க்கும் நிர்ப்பாக்யப்பிண்டங்களுக்கு உதவிசெய்வதுதான் கடவுளுக்கு ப்ரியமேயன்றி உதவியை நாடாதவர்களுக்கு உதவிபுரிவது அதிசயமில்லையல்லவா! எனக்குஇனிஉடம்பு ஒன்றுமேஇல்லை. நான்இங்குதானிருக்கிறேன்... அம்மா... நீகூட ஊருக்குப்போய்விடு. நான்இங்கேயே நர்ஸாக இந்தகுழந்தைகளுக்கு உழைத்துக்கொண்டுசந்தோஷமாயிருக்கிறேன்''...என்று மிகவும் படபடத்துக்கூறினுள்.

இதற்குள் ஆயா கௌஸல்யாவைத் தட்டிக்கொடுத்து ''குழந்தாய்! நீஇத்தனைதெளிவுடன் பேசுவதைக்கேட்டுநான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இருப்பினும் உனக்குச்சரியானபடி தெளிந்துவிட்டால் உன்னைவீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். நீ ஆனந்தமாய் வீட்டுக்குப்போய் தக்ககணவனைத் தேடி விவாகமசெய்துகொண்டு அழகாக மக்களைப்பெற்று மங்களகரமாய் மகிழ்வுடன் இருக்கவேண்டும்...

இந்தகுழந்தைகளை இங்கேயேசாச்வதமாய் வைத்திருக்க மாட்டார்கள். உடம்புகுணமாகும்வரையில் சிகிச்சைசெய்வார்கள். பிறகு வார்ஸுகள் யாராவது வந்தால் அவர்களிடம் ஒப்புவிப்பார்கள். அதுவும்கடைசிவரையில் ஒருவரும்இல்லை என்றுல் எந்தெந்த இடங்களில் அனுதைநிலையங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் குழந்தைகளை அனுப்பிவிடுவார்கள். இந்த ஆஸ்பத்திரியில் நிரந்தாமாக வைக்கவும்மாட்டார்கள்.

திடீரென்று உன்னை டிஸ்சார்ஜ் செய்யவும் வைக்கமாட்டார்கள். எந்தெந்த முறையில் சிகிச்சைகள்செய்தால் உன்னுடைய உடல் நலம் சரியாகும், மூளையின்நல்லநிலைமைவரும் என்று வைத்ய முறைக்காக பெரியடாக்டரே உனக்கு இம்மாதிரி இப்போது உத்திரவுகொடுக்கிறார். ஆகையால் நீ சந்தோஷமாயிருப்பதை விட்டு ஏனம்மா இந்தகண்ராவியில் உழலவேண்டும்" என்று சொல்லிக்கொண்டுவருவது ஒன்றுமே கௌஸல்யாவின்காதில் விழவில்லை. ஏதேதோ யோசனையில் மனதுசென்றதால் பல வீனப்பட்ட நிலைமையில் ஒருமாதிரிமயக்கமுண்டாகிவிட்டது. தடதடவென்று தானேதன்விடுதிக்கு ஆவேசத்துடன்சென்று படுத்துவிட்டாள். மறுபடியும் ஒரு கோளாறும் இல்லாதிருக்க வேண்டுமே என்ற கவலை ருக்மிணியம்மாளைப் பாதித்தது.

8

பரிகாஸச்சொல்லும் ப்ரேமாதிசயமும்

மேலும் நான்கைந்து தினங்களாயின. கௌஸல்யா ஆஸ்பத்திரியைவிட்டுப் போகலாம் என்றுபெரியடாக்டரே சொல்லிவிட்டார். அவளுக்கு இந்த அனாதைக் குழந்தைகளை, அதிலும்அங்கஹீனமான குழந்தைகளை விட்டுப் போக மனமேஇல்லாததால் அவள் மிகவும் வணக்கத்துடன் "டாக்டர்! இந்த அனாதைக்குழந்தைகளை என்னுடன் தயவு செய்து அனுப்புகிறீர்களா? நான் எங்களூரில் எப்படியாவது ஒரு அனாதைநிலையத்தை நிறுவி இக்குழந்தைகளை அதில் வைத்துப்போஷிக்க ஏற்பாடுசெய்கிறேன்"...என்று முடிப்பதற்குள் கடகடவென்று டாக்டர் சிரித்தார்.

"உலகானுபவம் இல்லாதபேதை. அதிலும்புத்திஸ்வாதீனமற்றிருந்த சின்னஞ்சிறுமி ஏதோ தத்துபித்தென்று உளறுகிறாள்." என்றுஎண்ணி அவளையே உற்றுநோக்கி:, "உம் ...அனாதைக்குழந்தைகளை வளர்க்க நிலையம்வைப்பது என்ற காரியம் அத்தனை சாமான்யமாய் எண்ணிவிட்டாயாம்மா! நீ என்ன கோடிஐச்வர்யக்காரியா! இத்தனைமாதங்கள் இங்கிருந்து வைத்யம் செய்துகொண்டதற்கே உன் பிதா பரம சாமான்யராகையால் தர்மத்திற்கு வைத்யம் நடத்தும்படி முதலிலேயேசொல்லி ஏற்பாடுசெய்துவிட்டாரே! அது உனக்குத்தெரியுமா! நீஇங்குவந்து ஆறுமாதங்களுக்குமேலாகிறது. இனியும் நீ இங்கிருப்பது சரியல்லவென்று அனுப்புகிறோம். சின்னஞ்சிறுமி நீயா இம்மாதிரி மனக்கோட்டை கட்டுவது?

வீணனயோசனையினால் நீ உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே. இத்தகைய சாதனங்கள் சாமான்ய காரிய மல்ல..பெரிய பெரிய மேதைகளாலேயே, லக்ஷாதிபதிகளான சீமான்களாலேயே இம்மாதிரி பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாமல் திணறுவதை நான் பழம்பெருச்சாளியாகையால் கண்டு அனுபவித்துக் கூறுகிறேன். நீ சந்தோஷமாய் வீட்டிற்குப்போய் சுகமாயிரு''...

என்று கூறிப்போவதற்குள் கௌஸல்யா வழிமறித்து "டாக்டர்! டாக்டர்! தயவுசெய்து நிற்கவேண்டும். உலகத்தின் போக்கை நீங்கள் கண்டிருக்கலாம். இருப்பினும் இந்தவிஷயத்தில் மிகுந்த தைரியத்தையும் 'உன்னால் சாதிக்கமுடியும்' என்கிற உறுதியான நம்பிக்கையையும் என்னிதயத்தில் பகவான் புகுத்துகிறான். நல்லவேளையாக எங்களுடைய க்ராமம் இருக்கிறது; அதில் ஒரு சாதாரண வீடு இருக்கிறது. அங்கு இவர்களைக்கொண்டுவைத்து...

''போதும். நிறுத்தும்மா... நீ ஏதோ குழந்தை விளையாட்டாகச் சொல்லிவிடுகிறாயே. சாமான்ய ஸ்தாபனங்களை ஆரம்பித்தாலே அதைநடத்தி உன்னதநிலைமைக்குக்கொண்டுவர உதவிபுரியாவிடினும் அதைஉடைத்துச் சிதறவடித்துக் கலகங்களையும்வித்யாஸமனோபேதங்களையும்உண்டாக்கிவீணை சண்டையாகக் கிளறிப்பாழடித்துவிடத்துணியும் இக்காலத்தில் கேவலம் எந்தவிதமான பலமும் இல்லாத நீ அனாதை நிலையம் நிலவுவதாம்,குழந்தைகளை வளர்ப்பதாம். உனக்கு க்ராமத்தில் வீடு இருந்துவிட்டால் அந்த வீட்டைவைத்துக்கொண்டு நீ என்னசெய்யமுடியும்?வீடு,குழந்தைகளின்போஷணைக்கான ஆகாரத்தைக்கொடுக்குமா! மற்ற இதர சௌகரியங்களைக் கொடுக்குமா! வீடுதான் உனக்கென்ன சாச்வதம்? உன்பெற்றோர்கள் உத்திரவுகொடுப்பதே துர்லபம். ஒரு நிலயத்தை வைத்துநடத்தவேண்டுமானால் மாதாமாதம் குறைந்தது 500 ரூபாய் இருந்தாலல்லவாமுடியும்? பேதையே! உலகமறியாமல் பேசாதே. இதையாராவதுகேட்டால்உனக்குமூளைகலக்கம்இன்னும் சரியாகத் தீரவில்லை என்றுதிட்டமாகச்சொல்வார்கள்...

கௌஸல்யா மிகுந்த மரியாதையும் வணக்கமும் த்வனிக்கும்குரலில்"டாக்டர்!நீங்கள்சொல்வதெல்லாம்மிகவும்உண்மை ஏதோமனத்தில் இத்தகைய பெரிய எண்ணத்தைப்புகுத்தியுள்ள ஆண்டவன் அதை எப்படியாவது நிறைவேற்றியே தீருவான் என்பது எனக்கு ஏதோஒரு நம்பிக்கைதோன்றுகிறது. பிறர்என்னைப்பயித்தியமென்றேநினைக்கட்டும்;அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்குமூளைக்கோளாறு எதுவும் இல்லைஎன்பதை தாங்கள்கூறினால்போதும்...நான்மிகவும் மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். இந்த ஏழைஅனாதை அங்கஹீனக்குழந்தைகளுக்காக பிச்சைஎடுக்கவும் தயாராகஇருக்கிறேன். டாக்டர்! எப்படியாவது இந்தகாரியத்தை நான்

செய்து என் கடமையைப்பூர்த்தியாக்கிக்கொள்ள மிகவும் ஆசைப்படுகிறேன். உங்கள்தயவும் ஆதரவும் அத்யாவச்யமாக வேண்டும். என்னுடைய முயற்சியில் நான்தோல்வியடைந்தால்அதையும்உடனே தெரிவிக்கிறேன். இக்குழந்தைகள்எந்த நிலையத்திலிருக்கிறதோ அங்கு ஆபாவேலைபாவது எனக்கு கொடுத்து உதவும்படி இப்போதே கேட்கிறேன்'' என்றாள்.

''இவளுடைய மூளைஒரேநிலையில் ஆசைப்படுவதால்அதை இப்போது எதைச்சொல்லியும் தடுக்கவேண்டாம். சரிஎன்று சொல்லி, முதலில் அனுப்பிவிடுவோம்'' என்று தீர்மானித்தவராய் ''அம்மா! உனக்காக இன்னும் ஒருமாதகாலம்வரையில் நான் அக்குழந்தைகளை இங்கேயே வைத்திருக்கிறேன். உன் கடிதத்தைப் பார்த்துச் சகலமும் செய்கிறேன்'' என்று ஹிதமாகவே பதில்சொல்லிச் சமாதானம் செய்து ஊருக்குப்போக உத்திரவுகொடுத்துவிட்டார்.

முதலில் ரயிலேறியபோது எப்படிஇருந்தாள், இப்போது எப்படி இருக்கிறாள் என்பதைக்காண ருக்மிணியம்மாளுக்கு ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் வியப்பும் தாண்டவமாடியது. அந்தக்குழந்தைகளைவிட்டுப் பிரியமனமின்றி அவர்களுடன் கொஞ்சிக்குலாவிவிட்டு நிறைய தின்பண்டங்களை வாங்கிக்கொடுத்து மகிழ்ந்தபின் ஊருக்குக் கிளம்பினாள். சரீரம்மட்டும் ப்ரயாணம்செய்ததேயன்றி அவளுடைய மனது சற்றும் அந்த அங்கஹீனக்குழந்தைகளைவிட்டுப் பிரியவே இல்லை. தனது கனவு நினைவாகவேண்டுமே என்ற பெரும் ஏக்கமே குடிகொண்டது.

9

உத்தம ஸேவைக்கு உதவிமேல் உதவி

கௌஸல்யாவுக்குக்கூட இத்தகைய நல்லபுத்தி வந்துவிட்டதையும் அவள் ஒரு பெரிய ஸாதனத்தை நிலவுவதற்காக இரவுபகல் அரும்பாடுபட்டு வீடுவீடாகஏறிஇறங்கி அங்காங்குகிடைக்கும் தூஷணம், பூஷணம் திட்டு முதலியவைகளைச் சற்றும் வித்யாசமின்றி ஸமநோக்குடன் பகிர்ந்துகொண்டு பாடுபடுவதையும்கண்ட அனைவரும் வியப்புற்றுப் பலர் ஆதரவளிக்கவும் இதற்காகப் பாடுபடவும் முன்வந்தார்கள்.

அன்று பல இடங்களுக்குச்சென்று அலுத்து வீடு வந்ததும் தனக்குவந்திருந்த கடிதங்களை முதலில் படிக்கவாரம்பித்தாள்.

"அன்புமயமான கௌஸல்யாவுக்கு உபயக்ஷேமங்கள். உன்னை உன் புத்தி சரியாயில்லாத சமயத்தில் விட்டுப் பிரிந்துவந்தது முதல் உன் நினைவாகவே இருந்தேன். யாருக்குக் கடிதமெழுதி என்ன செய்வது என்றும் தோன்றவில்லை. அதோடு இந்த ரயில் விபத்தில் எனக்குண்டான பெரும் விபத்தினால் ஸிமெண்டு ப்ளாஸ்த்ரியில் எழுந்திருக்கமுடியாதவாறு முதுகு இடுப்புமுதல் கட்டுப்போட்டு என்னையும் கட்டிப்போட்டுவிட்டதால் படுத்த படுக்கையில் ஆறுமாதகாலமும் கழிந்தது. ஒரு வாரத்திற்கு முன்புதான் ப்ளாஸ்த்ரியை எடுத்தார்கள். எனினும் ஊனம் ஊனந்தான். கால் நேராக நின்று இடுப்பு வளையாத நிலையில் பழையபடி நடையும் போய்விட்டது. விதிசெய்யும் கூத்தில் ஊனத்தைக்கொடுத்து என்னுயிரையும் தள்ளிவிட்டுப் போய்விட்டது. எத்தனையோ மனக்கோட்டை கட்டிய என் பெற்றோர்கள் இடிந்து விட்டார்கள். சாய்கால் நடையுடன் நான் குன்றிப்போய்க் கண்ணீர்விடும் சமயம் உன் கடிதம் கிடைத்தது.

அதைப்படிக்க என் மனது பரம சந்தோஷத்தை யடைந்து என் பெற்றோரிடம் காட்டினேன். இத்தகைய சிறந்த ஸேவையில் உன் மனது ப்ரவேசித்துச் செய்யும் நிலையை உனக்களித்த பகவானை நான் மிகமிக வணங்குகின்றேன். அந்தக் கடவுள் உன் விருப்பத்திற்கு அருள்புரிந்து வெற்றியைக் கொடுத்து உன் லக்ஷியத்தை ஈடேறச் செய்வார் என்று நம்புகிறேன்.

நேசி! அங்கஹீனமாகியபிறகு என்னையே நான் வெறுக்கிறேன். உன்னுடைய உருக்கமான கடிதம் என் வைராக்யத்தைப் பின்னும் உறுதியாக்கிவிட்டது. நீ வீடுவீடாக ஏறிப் பிச்சையும் எடுப்பதையும் அங்கு கிடைக்கும் வசைகள், நன்மொழிகள் இவைகளையும் தத்ரூபமாய் எழுதியிருந்ததைப் பார்க்க நீ விரைவிலேயே சிறந்த எழுத்தாளர் ஜாபிதாவில்கூடச் சேர்ந்துவிடுவாய் என்று சந்தோஷப்படுகிறேன்.

இத்தகைய உத்க்ருஷ்டமான சிறந்த கைங்கர்யத்திற்கு உதவாத பொருள் எதற்குவேண்டும் என்றுதான் தோன்றிவிட்டது. "இத்தனை நாட்களாய் ஊனமற்ற சரீரத்தை அலங்கரித்து வந்த ஆபரணங்களை இனி இந்த ஊன சரீரத்திற்கு நான் போடப் போவதில்லை. இவைகளை விற்றால் கட்டாயம் இந்த காலவிலைக்கு வெகு எளிதில் 10000 ரூபாய் கிடைக்கும். இதைக்கொண்டு நான் கௌஸல்யாவின் உத்தமமான ஸ்தாபனத்திற்கு மூலதனமாக உதவியளித்து நானும் அங்கேயே வேலை செய்து மகிழப்போகிறேன்; எனக்கு உலக வாழ்க்கை வேண்டாம்." என்று கண்டிப்பாக என் பெற்றோருடன் சொல்லி உத்திரவும் பெற்றுக் கொண்டேன்.

என் பிதாவே என் வேண்டுகோளைப் பூர்த்திசெய்வதாக வாக்களித்ததோடு பெரிய உத்யோகஸ்தர்களிடமெல்லாம் இதுவிஷயமாக நன்குஎடுத்துக்கூறி சுமார் பத்தாயிரம்ரூபாய் வரையிலாவது வஸூல்செய்து அனுப்புவதாக உனக்கு உறுதியாக எழுதச் சொன்னார். இன்னொரு விஷயம். இப்போது ரயில் விபத்தினால் கிடைத்த குழந்தைகள்மட்டும் சுமார் 100 குழந்தைகளுக்குமேல் இருக்கிறார்கள் என்று எழுதி யிருக்கிறாய். இவர்களைத் தவிர இம் மாதிரி அனாதைகளாய் வேறு வந்தால் அவர்களுக்கும் சேர்த்து

நாம் தயாராக ஏற்பாடு செய்யவேண்டும். என் பிதா மிகவும் அனுபவசாலி. அவர் உனக்கு ப்ரத்யேகமாய் இதை வற்புறுத்தி எழுதச் சொன்னார். முதலில் சௌகர்யமான குடிசை இடமாவது சொந்தத்தில் தயார் செய்துகொண்டு பிறகு காரியத்தை ஆரம்பித்தால்தான் சிறப்பாக நடக்கும் இல்லாவிட்டால் பலவித தொல்லைகள் உண்டாகும். ஆகையால் அரசாங்கத்தினிடமே இவ்விவரங்களைத் தெரிவித்து இடவசதியைச் செய்துகொள்ளச் சொல்லு. இதற்கான உதவியை தானும் செய்கிறேன் என்று எழுதச் சொன்னார்.

நீ நமது பள்ளிக்கூட உபாத்யாயினிகளை எல்லாம் போய்ப் பாரு. டாக்டர் தேவராஜன் அவசரமாக யுத்தத்தில் ஸேவை செய்ய அழைத்ததாயும், உடனே போய்வருவதாயும் நாம் அடிபட்டு ஆஸ்பத்ரியில் கிடந்தபோது என்னிடம் சொல்லிச்சென்றார். சண்டையிலிருந்து வந்துவிட்டாரா என்று தெரியவில்லை. அவரையும் போய்ப்பார். அவருடைய உதவி நமக்கு அவச்யம் தேவை. உன் முயற்சி வெற்றிபெறுமாறு பகவானை வேண்டுகிறேன். இதோடு எங்கப்பாவின் நன்கொடையாக 5 ஆயிரம் ரூபாயிக்கு செக்கு அனுப்பி இருக்கிறேன். அடுத்தவாரம் நானே வந்துவிடுகிறேன். முதலில் இடத்தைப் பார்த்துக்கொண்டு மற்றதைச் செய்.

உன் ப்ரியமுள்ள
விமலா''

உடனே தன் சந்தோஷத்தையும் எதிர்பார்ப்பையும் பற்றிக் கடிதம் எழுதி விமலாவுக்கு அனுப்பிவிட்டாள். உபாத்யாயினிகள் முதலிய சகலரையும் பார்த்தபிறகு தேவராஜனைப்பற்றி விசாரித்ததில் அவர் அந்த ஊரிலில்லை, வெளியூரிலிருப்பதை யறிந்து அங்குசென்றாள்.

அவள் அங்கு கண்ட காட்சி...அவள் கண்களையே நம்ப முடியாமல்,துள்ளித்தீயில்குதித்ததுபோல்அலறினாள்...'டாக்டர்! டாக்டர்!''...என்றுகத்திக்கொண்டே எதிரில் சென்றாள். டாக்டர் வியப்புடன் இவளைநோக்கி "ஹா...கௌஸல்யாவா... வாம்மா! வாம்மா நீ நன்றாகத்தெளிவுபெற்று குணமாகிவந்தாயா...உட்காரு...'' என்று விசாரித்தார்.

அந்த டாக்டருடைய பரிதாபநிலையைக்கண்டு உண்மையில் கௌஸல்யாவால் பேசவேமுடியவில்லை. இடதுகால் முழங்கால்வரையில் காணவில்லை. வலதுகை முழங்கை வரையில்காணவில்லை. இதென்ன அலங்கோலம் டாக்டர்! நீங்கள்யுத்தஸேவைபுரிய அவசரமாகச் சென்றதே எனக்குத் தெரியாதே...

டாக்:—உம்...அதைப்பற்றி இப்பொழுது எதற்கம்மா பேச்சு. உன்னுடைய நிலைமையே அப்போது மகாமோசமாயிருக்கையில் நான் இதை உன்னிடம் எதற்குச்சொல்ல வேண்டும் என்றுதான் சொல்லவில்லை. நான் வெகுஆசையுடன் சேவைசெய்ய ஓட்டமாகப்பறந்துதான் சென்றேன். ஆனால் எதிரிகளின் குண்டு இக்கதிக்காளாக்கி உதவாக்கரை

மனிதனுகச்செய்து ஆஸ்பத்திரியில் தள்ளிவிட்டது. என்னுடைய நிலைமை சற்றுசுமாரானதும் நான் வந்துவிட்டேன். அதுகிடக்கட்டும்...நீ சௌக்யமாயிருக்கிருயா...கடவுள் கிருபையினுல் நீ சரியான நிலைமையில் குணமாகியதோடு பெரிய விஷயத்தைச்சாதிக்க முயன்றுவருகிருய் என்றுகேள்விப்பட்டுப் பரமசந்தோஷத்தையடைகிறேன்....

கௌஸல்யா வியப்புடன் "யார்சொன்னது டாக்டர்"... என்று படபடத்துக்கேட்டாள்.

டாக்:—உன்னை நான் எந்த டாக்டரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றேனே அதேடாக்டர் எனக்கு சென்றவாரந் தான் கடிதம் எழுதினுர். அவர் உன் முயற்சியில் நம்பிக்கை கொள்ளாமல் வேடிக்கையாய் கேலியாக எழுதியிருக்கிருர்.

கௌஸ:—டாக்டர்! எந்தவிஷயத்தைத்தான் மக்கள் முதலில் கேலிசெய்யாமலிருக்கிருர்கள்? அதைச்சொல்லுங்கள் நமது மாபெரும் ஸ்தாபனமாகிய காங்கிரஸையும் தலைவர்களையும்கூட உலகம் கேலிசெய்து நகைத்தபோது நான் ஒரு பயித்தியக்காரி ஏதோ உளறுகிறேன் என்று ஏன் பரிகாசம் செய்யமாட்டார்கள்?உலகத்தின் இந்த ஸ்வபாவத்தில்என்னை மட்டும் விட்டுவிடமுடியுமா...அதுவிஷயமாகத்தான் நான் தங்களைப்பார்க்கவந்தேன்; இந்தலக்ஷயம் ஈடேறிவெற்றியடையும்படி நீங்கள் உதவிபுரியவேண்டும்.

டாக்:—கௌஸல்யா! கையும் காலும்அற்ற முடவனிடம் நீ என்ன உதவியை எதிர்பார்க்கிருயம்மா?...என்றுகூறும் போது கண்ணீர்வழிந்துவிட்டது. அதைஒருகையினுலேயே துடைத்துக்கொண்டுவேலைக்காரனைக்கூப்பிட்டு 'அம்மாளுக்கு ஆகாரம்கொண்டு கொடு" என்றுர்.

கௌஸ:—ஏன் டாக்டர்! உங்கள் மனைவிவெளியில்வர மாட்டார்களா! உள்ளேபோய்சாப்பிட்டுவிட்டுவருகிறேனே...

டாக்:—உம்—அத்தகைய பாக்யமெல்லாம் எனக்கில்லை. நான் கல்யாணமாகாத ப்ரம்மசாரி...

கௌஸ:—என்ன! உண்மையாகவா!...ஆனுல் இப்போது உங்களுக்கு யார் சகலமும் செய்கிருர்கள்?...நீங்கள் ஏன் கல்யாணமே செய்துகொள்ளவில்லை?...

டாக்:—உம். அந்தவிஷயம்இப்போது எதற்கு? எனக்கு வேலைக்காரர்கள்தான் சகலமும் செய்கிருர்கள். நான் நன்ருக இருந்தகாலத்தில் ஒரு பெண்ணைக்குறித்து மனத்தில் வைத்திருந்தேன்...என்கதிஇப்படியாகியபிறகு இனிஅதைப்பற்றி...

கௌஸ:—டாக்டர்! நீங்கள் மனத்தால் தீர்மானித்திருக்கும் பெண் உங்களுடைய இந்த நிலைமையைப்பார்த்ததும் மறுத்துவிட்டாளா...இதுவா உண்மையான ப்ரேமை?...ஆழமான அன்பு? அவள் அப்படிதிரஸ்கரித்தால்...விவாகமாகிய பிறகு இந்தகதி ஏற்பட்டிருந்தால் என்னசெய்வாள்...யார் அந்தப் பெண், டாக்டர்?

டாக்:—கௌஸல்யா...வீணாக நீ உனக்குச்சம்மந்தமில்லாத விஷயங்களை ஏன் கேட்கிறாயம்மா?

கௌஸ:—இல்லைடாக்டர்! நான்கேட்பது குற்றந்தான்... ஆனால் பெண்களுக்கு இம்மாதிரி இருதரப்பட்ட மனதுஇருப்பதுசரியா...

டாக்:—அந்தப்பெண்ணுக்கு என்னுடைய மனோபாவம் எப்படித்தெரியமுடியும்? அவள்தான் அச்சமயம் புத்தியே ஸ்வாதீனமில்லாதிருந்தாளே...

கௌஸ:—டாக்டர்!—

டாக்:—ஆம்...சந்தேகமேஇல்லை. உன்னைநான் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷித்த நாள்முதல் உனக்கு நானேசிகிச்சை செய்து அந்தவைத்யமுறையில் நிபுணனாகவேண்டுமென்று பரிபூர்ணமாக எண்ணினேன். அதற்கு ஏற்றாப்போல் நானே அந்த ரயிலிலும் வரும்படி சந்தர்ப்பம் அமைந்தது. விபரீத விபத்து நேர்ந்து பல நாசங்களை உண்டாக்கியதில் உனக்கு நன்மையாக முடிந்தது. நான் பூரித்துப்போய் உனக்கே சிகிச்சைசெய்துவரவே அங்கு ஒருவாரம் தங்கினேன். அரசாங்கத்தின் அவசரஉத்திரவால் சென்று இந்தகதியாகிவிட்ட பிறகு உனக்கு என்னைப்பற்றி எதுவுமே தெரிவிக்கக்கூடாதென்ற எண்ணத்துடன் மறைவாகவே வந்துவிட்டேன். எப்படியோ நீ இடத்தைக்கண்டுபிடித்துக்கொண்டு வந்திருக்கிறாய். முடவனாகிய நான் என்னஉதவிசெய்யமுடியும்? பகவான் ஏராளமான பணத்தையும் இந்தபங்களாவையும் கொடுத்திருக்கிறான். மக்கள் மனிதர் அற்ற அனாதையாகவே என் காலமும் ஆய்விட்டது. ஆகையால்...

கௌ:—டாக்டர்! எனக்கு என்னபதில் சொல்வதென்றே தெரியவில்லை.என்னுடைய இதயத்தில்ஏதோசெய்கிறது.என்னுடையமுயற்சிக்குத் தாங்கள் பேருதவி புரிவதற்குமுன் உங்களுக்கு என்றும் கூடவிருந்து அடிமைசெய்து உங்களை மகிழ்விக்கவும் நீங்கள் ஆதியில நினைத்திருந்ததைப் பூர்த்திசெய்யவும் நான்கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் என்னை உயிருடன் உருவாக்கிய பேருபகாரத்திற்கு நான் இந்தஒரு...

"கௌஸல்யா!—என்ன இது'...இந்தநொண்டியையா! இந்தமுடவனையா...முடியாதுமுடியாது. உன்வாழ்வைநான் பாழாக்க அத்தனை அறிவுகெட்டவனில்லை...

"டாக்டர்! வீண் வார்த்தைகள் வேண்டாம். உங்களுடைய இந்தபெரிய பங்களாவையும் சொத்தையும் நாம் இருவரும்சேர்ந்து சுதந்திரத்துடன் மனமொத்து சத்விஷயதானமாகச் செலவிட்டு மகிழ்வோம் நான்.இதைப்பரமத்ருப்தியுடன் ஏற்று செய்யச்சித்தமாயிருக்கிறேன். டாக்டர்! சற்றுயோசித்துப்பாருங்கள். நான் உங்களுடைய சகல சொத்துக்களையும் இந்த புனித கைங்கர்யத்திற்கு செலவிட்டு உங்களுடன்கூட இருந்தால் வீணான அபவாதம் சூழும். நான்

பரம ப்ரீதியுடன் உங்களைமணந்து சேவைபுரியக் காத்திருக்கிறேன். விமலாவுக்கும் இந்தவிபத்தினால்சப்பைமுறிந்துஊன மாகியது. அவளைஎன்மூன்றாவது அண்ணனுக்குமணம்செய்து அவளுக்கு உதவிபுரியநான்தயாராகஇருக்கிறேன். எல்லாம்பகவானின்செயல். நமதுசெல்வத்தைபரதேசிக்குழந்தைகளுக்கு மழைபோல்பொழிந்து உதவிபுரிவோம்...இதை அந்தடாக்டருக்கு இன்றே எழுதிவிடுங்கள். நானும் என்பெற்றோரை இங்கேயே வருவதற்குத்தந்தியடிக்கிறேன்.'' என்றுகூறி அவர் கால்களில் விழுந்து வணங்கிப் பிடித்துக்கொண்டாள்.

பின்னும் ஒரு வாரத்திற்குள் இந்தஅதிஆச்சரியகரமான விஷயம் ஊர்பூராவும் அபாரமான வியப்பையளித்துப்பரவிவிட்டது. அங்கஹீனமுடைய குழந்தைகளுக்கு உழைத்துப் பேரின்பமடைய ஆசைகொண்ட உத்தமிக்கு பதிசிச்ருஷையும் அதேமுறையில் அமைந்ததால் அவள் உள்ளத்தில் ஆழங்காணமுடியாத சாந்தி அபாரமாக நிலவியது. தம்பதிகளிடையே அளவிடமுடியாத ப்ரேமை வளர்பிறைமதிபோல் வளர்ந்து ப்ரகாசித்தது. அந்தப்ரம்மாண்டமானபங்களாவின் வாசலில் ப்ரேமாச்ரமம் என்கிற பெரியபலகை கம்பீரமாக காட்சியளிக்கிறது. விமலாவும் சொல்லியபடியே வந்து சேர்ந்து பரம திருப்தியுடன் உழைக்கத்தொடங்கினாள். ஆதியில் ருக்மிணியம்மாள் நினைத்தபடியே தன் மருமகளாகச் செய்துகொண்டதில் குடும்பத்துடன் ப்ரேமாச்ரமத்தில் தொண்டுபுரிய அனுகூலமாகியது. ஆதியில் குழந்தைகளை வெறுத்த அதே கௌஸல்யா இப்பொழுது குழந்தைகளின் போஷணைக்காகவேஉயிர்வாழ்வதைக்கண்டு உலகமேவியந்தது.

அந்த பங்களாவைச் சுற்றியுள்ள ப்ரம்மாண்ட தோட்டத்தில் தனித்தனி விடுதிகள்கட்டி அதில் இந்த அனாதைகளுக்குப் பணிபுரியும் ஆட்களுக்கு வசதிசெய்து கொடுத்திருக்கிறார்கள். ப்ரதிதினம் 'அம்மா! அம்மா!' என்று அத்தனை குழந்தைகளும் அழைப்பதால் நாளடைவில் கௌஸல்யாவுக்கு அம்மா என்கிற பெயரே சகலரும் உபயோகிக்கலானார்கள். இந்த அனாதைகள் எல்லோருக்கும் கல்வி, பக்தி, கைத்தொழில், விளையாட்டு, தேகப்பயிற்சி முதலிய சகல அம்சங்களையும் முறையே போதிக்கும் அழகைப் பார்ப்பதற்கே ப்ரதிதினமும் நூற்றுக்கணக்கானவர்கள் விருந்தினராக வருவதும் ஏராளமான தன உதவிசெய்வதுமாக 5—6 வருஷங்களுக்குள்ளேயே ப்ரேமாச்ரமம் வெகு உன்னத நிலைமைக்கு வந்துவிட்டது. 'அப்பா'வுக்கு சகல கைங்கர்யங்களையும் தானே செய்து சொக்காய் முதல் தானே அணிவித்து அவரையும் அழைத்துக்கொண்டு தான் 'அம்மா' அனாதைவிடுதிக்கு வருவாள். இந்த புனித ஸேவையில் ருக்மிணியம்மாளின் குடும்பமே [illegible] உழைக்க வாரம்பித்தபிறகு இதைவிட நித்யகல்யாண[illegible] சுகம் அவளுக்கு வேறென்ன இருக்கிற[illegible] மங்களம். சுபம்.

183163

மகாத்மாஜி ஸேவா சங்கம்.

ஜூலை ஏழாந்தேதியன்று ஸ்ரீ உடுப்பி கிருஷ்ணன் கோயிலில் மான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரிஸ்வாமியால் துணவதிபாய் என்ற மபக்தையின் சரிதை உபன்யாஸம் நடந்தது. வெகு ருசிகரமான ஷயம். அத்புதமாயிருந்தது. திருவாலி பண்டித ராமானுஜா ரியர் வந்தனோபசாரம் கூறினர்.

அன்றே திருச்சி சகோதரிகளான குமாரிகள் சுசீலாவும் சுலோ னுவும் பாடினார்கள். பாட்டு நன்றாயிருந்தது.

ஜூலை மாதம் 10-ந் தேதி சங்கத்தில் வனமகோத்ஸவம் சிறப்பா க் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் ஜீவநாடிபோல் விளங்கும் தை உபாத்தியாயினியான ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன்னாதாசாரி ரும், ஜோஸ்யம் தங்கம்மாள் அவர்களும் மா மரம், பாரிஜாதம் ன்னீர் முதலிய செடிகளை பெருத்த ஆரவாரத்துடன் கோதா லயத்தின் தோட்டத்தில் வைத்தார்கள். ஸ்ரீமதிகள் A. ஸரோஜா, . M. பத்மினி ஸ்ரீநிவாஸன், R. A. ஜானகியம்மாள் முதலியவர் ளும் பேசினார்கள்.

சங்கத்தினிடம் அளப்பரிய அன்புகொண்டு ஸ்ரீமதி நீலா ாலசுப்ரமண்யன் ஆடிவெள்ளிக்கிழமை கச்சேரிகளை ஏற்பாடு சய்தார்கள். விழா கீதான்விதா என்ற பங்களாவில் நடந்தது.

ஜூலை 16-ந் தேதி ஆடிப்பண்டிகைமகோத்ஸவம் ஸ்ரீமதி ராஜி ாராயணஸ்வாமி வாய்ப்பாட்டும், கமலா சுப்ரமண்யம் பிடிலும், துரை மிருதங்கமும் கூடிய உயர்ந்த கச்சேரியுடன் கொண் டப்பட்டது. கச்சேரி வெகு நன்றாக இருந்தது. அன்றைய யத்தை பாலிகாகழகத்தினர் நடத்தி மகிழ்ந்தார்கள்.

ஜூலை21-ந்தேதியன்று ஆடி வெள்ளிக்கிழமை உத்ஸவம் ஸ்ரீமதி யலக்ஷ்மி துரைஸ்வாமி அவர்களின் கச்சேரியுடன் மிகச்சிறப் க நடந்தது. நன்றாக வ்ருத்திக்குவரக்கூடிய திறமை இருக் து. உபயத்தை ஜகன்மோகினி செய்து மஞ்சள் குங்குமமளித்து ழ்ந்தாள். சங்கத்தின்பால் அன்பு கொண்டு ஸ்ரீமதி வஸுமதி மஸ்வாமி அவர்கள் ஸ்ரீராமர் படமும் ஸ்ரீராஜராஜேச்வரிபடமும் ன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.

ஜூலை 28-ந் தேதி இரண்டாவது ஆடி வெள்ளிக்கிழமை. ருச்சி ஸ்ரீமதி ராஜம்கிருஷ்ணமூர்த்தி வாய்ப்பாட்டும் கமலாசுப்ர ண்யன் பிடிலும், வெங்கட்ரமணன் மிருதங்கமும் சேர்ந்த கச் சேரி வெகு நன்றாக நடந்தது. ஸ்ரீமதிகள் M. C. ஜானகியம்மாளும R. A. ஜானகியம்மாளும் உபயத்தை நடத்தி மஞ்சள் குங்குமம் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

ப்ரதி சனிஞாயிறு தவிர மற்ற தினங்களில் தவறாமல் உபதேச த்னமாலை உபன்யாஸத்தை பண்டித ராமானுஜாசாரியர்ஸ்வாமி வெகு உத்ஸாகத்துடனும் அருமையாயும் நடத்துகிறார். ஹிந்தி, ாட்டு, கிதை, தையல், பஜனை முதலிய வகுப்புகள் முறையே தவறாது நடைபெற்று வருகின்றன.

AGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI
AMMAL is printed and published by V. M. PARTHASARATHY
t the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.

ஐந்து ரூபாய்க்கு அரிய தமிழ்விருந்து

வை. மு. ஸ்ரீ. 1–வது நவீனம் **உதய சூரியன்** ரூ. 1–4.

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் காற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச் சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்ய பாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்ட வானம் 15. உதய சூரியன்.

வை. மு. ஸ்ரீ. 2–வது நவீனம் **மதமா, மனமா?** ரூ. 1–4.

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. விழிப்பும் உழைப்பும் 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணுடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை—உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனுலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

வை. மு. ஸ்ரீ. 3–வது நவீனம்—
நிதானகீர்த்தி தோதக்தி அளிக்கும் விவித விருந்து

அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி ரூ. 1–8–0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4 பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனைமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணும்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் பேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

வை. மு. ஸ்ரீ. 4–வது நவீனம் **ராணி சீலாவதி** ரூ. 1–0–0

1. உபன்யாசமும் உதாசீனமும். 2. பேய்க்குக்கள் வார்த்த கதைதான் 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே! 4. நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும் — சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—துபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

ஷை நான்கு நவீனங்களையும் ஒரேசமயத்தில் வாங்குவோர் ரூ. 5. அனுப்பினுல் தபாற்செலவின்றி ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும். தனியே வாங்குவோர் தமக்கு வேண்டிய புத்தகத்தின் விலையுடன் 4 அணு ரிஜிஸ்ட்ரேஷனுக்காக அனுப்பவும்.

ஜகன்மோகினி காரியாலயம்
26 தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.